ஓம்

குஹப்ரஹ்மணேநம:

நான்காவது மண்டலத்தைச் சார்ந்த

# சிறு நூற்றிரட்டு.

பாம்பன்

ஸ்ரீமத் - குமரகுருதாசசுவாமிகள்

அருளிச்செய்த பிரபந்தங்களுட்

பொருளிற் பெரியனவாய் உருவிற் சிறியனவாயுள்ள

பத்[illegible] அடங்கியிருக்கின்றன.

6-ம் பதிப்பு, 2000-ம் பிரதி.

சென்னை:

[illegible]து அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

Copy-Right Registered.

1930.] [விலை அணா - 6.

Q2:417
N30
85899
3325

## இப்புத்தகத்திலடங்கிய நூல்கள்.


க. சண்முககவசம்.

௨. பஞ்சாமிர்தவண்ணம்.

௩. திருத்தொடையல்.

௪. கந்தரொலியலந்தாதி.

௫. குகப்பிரமவருட்பத்து.

௬. ஞானவாக்கியம்.

௭. கந்தகோட்ட மும்மணிக்கோவை.

௮. வடதிருமுல்லைவாயிற் குகபாரவண்ணம்.

௯. நவவீரர் நவரத்தினக் கலிவிருத்தம்.

௰. அட்டாட்ட விக்கிரகலீலைவிருத்தம்.

"மடமோட்டுங் கருணைதனை மறவேனெஞ்
சுளவளவும் மாற்றார் நூலைத்
தொடமாட்டே னவருரைக்கு முரைகேளே
னனியாயத் தொடக்கர் கோட்குட்
படமாட்டே னருள்சுரந்து வினாயவொரு
மொழிப்பயனிற் படரு நோக்கம்
விடமாட்டே னினிதளித்தி யெனதுகுகப்
பிரமமென விளங்கெம் மானே.''—திருப்பா.

சிவமயம்.

ஓம்குமாரகுருப்யோநம :

திருச்சிற்றம்பலம்.

# சண்முககவசம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அண்டமா யவனி யாகி யறியொணாப் பொருள தாகித்
தொண்டர்கள் குருவு மாகித் துகளறு தெய்வ மாகி
எண்டிசை போற்ற நின்ற வென்னரு ளீச னான
திண்டிறற் சரவ ணத்தான் றினமுமென் சிரசைக் காக்க. (க)

ஆதியாங் கயிலைச் செல்வ னணிநெற்றி தன்னைக் காக்க
தாதவிழ் கடப்பந் தாரான் றானிரு நுதலைக் காக்க
சோதியாந் தணிகை யீசன் றுரிசிலா விழியைக் காக்க
நாதனாங் கார்த்தி கேய னாசியை நயந்து காக்க. (உ)

இருசெவி களையுஞ் செவ்வே ளியல்புடன் காக்க வாயை
முருகவேள் காக்க நாப்பன் முழுதுநற் குமரன் காக்க
துரிசறு கதுப்பை யானைத் துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரி தன்னைச் சிவசுப்ர மணியன் காக்க. (௩)

ஈசனாம் வாகு லேய னெனதுகந் தரத்தைக் காக்க
தேசுறு தோள்வி லாவுந் திருமகண் மருகன் காக்க
ஆசிலா மார்பை யீரா றாயுதன் காக்க வென்றன்
ஏசிலா முழங்கை தன்னை யெழிற்குறிஞ் சிக்கோன் காக்க.

உறுதியாய் முன்கை தன்னை யுமையிள மதலை காக்க
*தறுகணே றிடவே யென்கைத் தலத்தைமா முருகன் காக்க
புறங்கையை யயிலோன் காக்க பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்குமான் மருகன் காக்க பின்முது கைச்சேய் காக்க. (௫)

ஊணிறை வயிற்றை மஞ்ஞை யூர்தியோன் காக்க வம்புத்
தோணிமிர் சுரேச னுந்திச் சுழியினைக் காக்க குய்ய
நாணினை யங்கி கௌரி நந்தனன் காக்க பீஜ
ஆணியைக் கந்தன் காக்க வறுமுகன் குதத்தைக் காக்க. (௬)

எஞ்சிடா திடுப்பை வேலுக் கிறைவனூர் காக்க காக்க
அஞ்†சக னமொரி ரண்டு மரன்மகன் காக்க காக்க
விஞ்சிடு பொருட்காங் கேயன் விளரடித் தொடையைக் காக்க
செஞ்சர ணேச வாசான் றிமிருமுன் றொடையைக் காக்க.

ஏரகத் தேவ னென்று ளிருமுழங் காலுங் காக்க
சீருடைக் கணைக்கா றன்னைச் சீரலை வாய்த்தே காக்க
நேருடைப் பரடி ரண்டு நிகழ்பரங் கிரியன் காக்க
சீரிய குதிக்கா றன்னைத் திருச்சோலை மலையன் காக்க. (அ)

ஐயுறு மலையன் பாதத் தமர்பத்து விரலுங் காக்க
பையுறு பழநி நாத பரனகங் காலைக் காக்க
மெய்யுடன் முழுது மாதி விமலசண் முகவன் காக்க
தெய்வநா யகவி சாகன் றினமுமென் னெஞ்சைக் காக்க. (௯)

ஒலியெழ வுரத்த சத்தத் தொடுவரு பூதப் ரேதம்
பலிகொளி ராக்க தப்பேய் பலகணத் தெவையா னாலுங்
கிலிகொள வெனைவேல் காக்க கெடுபரர் செய்யுஞ் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ரம் வருத்திடா தயில்வேல் காக்க. (௧௦)

---

* தறுகண் = அஞ்சாத்தன்மை. † ஜகநப்ரதேசம்.

ஓங்கிய சீற்ற மேகொண் டுவணிவில் வேல்சூ லங்கள்
தாங்கிய தண்ட மெஃகந் தடிபர சீட்டி யாதி
பாங்குடை யாயு தங்கள் பகைவரென் மேலே யோச்சின்
தீங்குசெய் யாம லென்னைத் திருக்கைவேல் காக்க காக்க.

ஔவிய முளரூ னுண்போ ரசடர்பே யரக்கர் புல்லர்
தெவ்வர்க ளெவரா னாலுந் திடமுட னெனைமற் கட்டத்
தவ்வியே வருவா ராயிற் சராசர மெலாம்பு ரக்குங்
*கவ்வுடைச் சூர சண்டன் கையயில் காக்க காக்க. (௧௨)

கடுவிடப் பாந்தள் சிங்கங் கரடிநாய் புலிமா யானை
கொடியகோ ணாய்கு ரங்கு கோலமார்ச் சாலஞ் சம்பு
நடையுடை யெதனு லேனு நானிடர்ப் பட்டி டாமற்
சடிதியில் வடிவேல் காக்க சானவி முனைவேல் காக்க. (௧௩)

ஙகரமே போற்ற பூஇ ஞானவேல் காக்க வன்புள்
சிகரிதே ணண்டுக் காலி செய்யனே றாலப் பல்லி
நகமுடை யோந்தி பூரா னளிவண்டு புலியின் பூச்சி
உகமிசை யிவையா லெற்கோ ரூறிலா தைவேல் காக்க. (௧௪)

சலத்திலுய் வன்மீ னேறு தண்டுடைத் திருக்கை மற்றும்
நிலத்திலுஞ் சலத்தி லுந்தா னெடுந்துயர் தரற்கே யுள்ள
குலத்தினா லென்வ ருத்தங் கொண்டிடா தவ்வவ் வேளை
பலத்துட னிருந்து காக்க பாவகி கூர்வேல் காக்க. (௧௫)

ஞமலியம் பரியன் கைவே னவக்கிர கக்கோள் காக்க
சுமவிழி நோய்க டந்த சூலையாக் கிராண ரோகம்
திமிர்கழல் வாதஞ் சோகை சிரமடி கர்ண ரோகம்
எமையணு காம லேபன் னிருபுயன் சயவேல் காக்க. (௧௬)

---

* கவ்வு - 'கயவு' என்பதன் விகாரம். கயவு=பெருமை.

டமருகத் தடிபோ லேக்குந் தலையிடி கண்ட மாலை
குமுறுவிப் புருதி குன்மங் குடல்வலி யீழை காசம்
நிமிரொணு திருத்தும் வெட்டை நீர்ப்பிர மேக மெல்லாம்
எமையடை யாம லேகுன் றெறிந்தவன் கைவேல் காக்க.

இணக்கமில் லாத பித்த வெரிவுமா சுரங்கள் கைகால்
முணக்கவே குறைக்குங் குஷ்ட மூலவெண் முளைதீ மந்தம்
சணத்திலே கொல்லுஞ் சன்னி சாலமென் றறையு மிந்தப்
பிணிக்குல மெனையா ளாமற் பெருஞ்சத்தி வடிவேல் காக்க.

தவனமா ரோகம் வாதஞ் சயித்திய மரோச கம்மெய்
சுவறவே செய்யு மூலச் சூடிளைப் புடற்று விக்கல்
அவதிசெய் பேதி சீழ்நோ யண்டவா தங்கள் சூலை
எவையுமென் னிடத்தெய் தாம லெம்பிரான் றிணிவேல் காக்க.

நமைப்புறு கிரந்தி வீக்க நணுகிடு பாண்டு சோபம்
அமர்த்திடு கருமை வெண்மை யாகுபஃ றொழுநோய் கக்கல்
இமைக்குமுன் னுறுவ லிப்போ டெழுபுடைப் பகந்த ராதி
இமைப்பொழு தேனு மென்னை யெய்தாம லருள்வேல் காக்க.

பல்லது கடித்து மீசை படபடென் றேது டிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சங் காட்டியே யுருட்டி நோக்கி
எல்லினுங் கரிய மேனி யெமபடர் வரினு மென்னை
ஒல்லையிற் றூர காரி ஓம்ஐம் ரீம்வேல் காக்க. (உ௧)

மண்ணிலு மரத்தின் மீது மலையிலு நெருப்பின் மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதுஞ் சாரிசெய் யூர்தி மீதும்
விண்ணிலும் பிலத்தி னுள்ளும் வேறெந்த விடத்து மென்னை
நண்ணிவந் தருளார் சஷ்டி நாதன்வேல் காக்க காக்க. (உஉ)

யகரமே போற்சூ லேந்து நறும்புயன் வேன்முன் காக்க
அகரமே முதலா மீரா றம்பகன் வேல்பின் காக்க

சகரமோ டாறு மானோன் றன்கைவே ணடுவிற் காக்க
சிகரமின் றேவ மோலி திகழைவேல் கீழ்மேல் காக்க. (௨௩)

ரஞ்சித மொழிதே வானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சய வேல்கி ழக்கிற் றிறமுடன் காக்க வங்கி
விஞ்சிடு திசையின் ஞான வீரன்வேல் காக்க தெற்கில்
எஞ்சிடாக் கதிர்கா மத்தோ னிகலுடைக் கரவேல் காக்க.

லகரமே போற்கா ளிங்க னல்லுட னெளிய நின்று
தகரமர்த் தனமே செய்த சங்கரி மருகன் கைவேல்
நிகழெனை நிருதி திக்கி னிலைபெறக் காக்க மேற்கில்
இகலயில் காக்க வாயு வினிற்குகன் கதிர்வேல் காக்க. (௨௫)

வடதிசை தன்னி லீசன் மகனருட் டிருவேல் காக்க
விடையுடை யீசன் றிக்கில் வேதபோ தகன்வேல் காக்க
நடக்கையி லிருக்கு ஞான்று நவில்கையி னிமிர்கை யிற்கீழ்க்
கிடக்கையிற் றூங்கு ஞான்று கிரிதுளைத் துளவேல் காக்க.

இழந்துபோ காத வாழ்வை யீயுமுத் தையனார் கைவேல்
வழங்குநல் லூணுண் போது மால்விளை யாட்டின் போதும்
பழஞ்சுரர் போற்றும் பாதம் பணிந்துநெஞ் சடக்கும் போதும்
செழுங்குணத் தோடே காக்க திடமுடன் மயிலுங் காக்க.

இளமையில் வாலி பத்தி லேறிடு வயோதி கத்தில்
வளராறு முகச்சி வன்றான் வந்தெனைக் காக்க காக்க
ஒளியெழு காலை முன்னெ லோஞ்சிவ சாமி காக்க
தெளிநடு பிற்ப கற்கால் சிவகுரு நாதன் காக்க. (௨அ)

இறகுடைக் கோழித் தோகைக் கிறைமுனி ராவிற் காக்க
திறலுடைச் சூர்ப்ப கைத்தே திகழ்பினி ராவிற் காக்க
நறவுசேர் தாட்சி லம்ப னடுநிசி தன்னிற் காக்க
மறைதொழு குழக னெங்கோன் மாறாது காக்க காக்க. (௨௯)

இனமெனத் தொண்ட ரோடு மிணக்கிடுஞ் செட்டி காக்க
தனிமையிற் கூட்டந் தன்னிற் சரவண பவனார் காக்க
நனியனு பூதி சொன்ன நாதர்கோன் காக்க வித்தைக்
கனிவொடு சொன்ன தாசன் கடவுடான் காக்க வந்தே. (ஙo)

சண்முககவச முற்றிற்று.

---

கலியுகம் சகூகூந - ஆம் ஆண்டில் நிகழ் கரவருடத்துக் கார்த்திகைமதி அவ ஆதித்தவாரத்திலே திருவிராமேச்சுரத்திலே பாம்பன் : ஸ்ரீமத் - குமரகுருதாசசுவாமிகள் அகாராதினகாராந்தந் தொடக்கமாய் வரூஉம் முப்பது செய்யுளாகிய இச் சண்முககவசத்தைப் பாடித் தமக்குற்ற ஊரல்லலினின்று நீங்கினர். இதனை வாற்சல்லிய விசுவாசத்துடன் நாளொன்றுக் காறுமுறை படிப்பவர்கள் எத்தகைய துன்பினின்றும் விடுதலையுறுவார்கள்; முடிவின் முத்தியுமடைவார்கள். இரவில் வழி நடக்கும்போதும், வனத்திற் செல்லும்போதும், நோயான் வருந்தும்போதும், யாதானுமொரு பயங்கரமான துன்பத்தி லகப்பட்டுக் கொண்டபோதும், நித்திரை செய்ய ஆரம்பிக்கும்போதும், மரணகாலத்திலும் இக்கவசம் படிக்கப்படுமாயின் யாதொரு துன்புமில்லையென்க. படித்துப் பலனடைந்தாரும் பலரென்க. அவருள்—

இற்றைக்குப் கஅ - ஆண்டுகட்கு முன்னே பெங்களூர் வாசியான சண்முகம் பிள்ளை யென்னு மொருவர், இராஜாங்கத்துத் தமது உத்தியோக முறையில் ஒரு தவறிழைத்தனரென அவ்விராசாங்கத்தாராற் பற்றப்பட்டபோது, இந்நூலாசிரியருடைய சீடர்களு ளொருவராயும் சென்னை - இராசாங்கத்துத் தந்திச்செய்தி உத்தியோகஸ்

தர்களு ளொருவராயு மிருந்த ச. மா. சண்முகம்பிள்ளை, அவ்வல்லலை யொழித்தற்கு இச்சண்முககவச பாராயணம் நாளொன்றுக்கு ௬ - முறை செய்யப்படல் வேண்டுமென்று அச் சண்முகம் பிள்ளைக் கறிவித்தார். அவருமப்படியே நாடோறுஞ் செய்வாராயினர். அக்குற்றவிசாரணைக் காலத்தும் அவர், கவசத்தை யுட்புலத்தே கமனஞ் செய்து கொண்டு நின்றார். இக்குற்றச்சாட்டு, குற்றமாகமாட்டாதென்று அதிகாரி அதனைத் தள்ளிவிட்டனர். கவச கமனத்தால் அம்முடிவை யறியாது அவணிற்கின்ற சண்முகம் பிள்ளையின் கையினை, கவச பாராயணஞ்செய்யும்படி செய்த ச. மா. சண்முகம் பிள்ளை பற்றிக்கொண்டு, விடுதலையாயிற்று வருதிரெனக்கொண்டு சென்று நீதிமன்றத்தின் வாயிலில் விட்டு மறைந்தனர். மறைதலும் விடுதலையடைந்த அச் சண்முகம்பிள்ளை, சென்னையில் இராநின்ற ச. மா. சண்முகம் பிள்ளையை நீர் இப்பெங்களூருக்கு வந்து இக்காரியம் செய்தீரா? என்றெழுத்து மூலமாக வினவினர். வினவப்பட்ட அவர், யான் அவ்வாறு செய்ததில்லையேயென விடையிறுத்தனர். பின்னர், இரண்டு சண்முகம் பிள்ளையும் உண்மையுணர்ந்து கவசத்தின் பெருமையையும், இறைவனது திருவருட் செயலையும் பலர்க்கு முணர்த்திப் பன்முறையும் மகிழ்வாராயினர்.

இற்றைக்கு ௩ - ஆண்டுகட்கு முன்னே பெங்களூர் நீதிமன்றங்களிலே அனியாயமாகக் கொண்டுவரப்பட்டு விசாரணையாய ஒரு திருட்டுக்குற்றத்தினின்றும் அவ்வூர் கண்டிராக்டர் கே. ஆறுமுகச்செட்டியாரை விலக்கி யாதொரு துன்பமுமில்லாது காத்தருளியதும் இக்கவச பாராயணமேயாம்.

இற்றைக்கு உ-ஆண்டுகட்கு முன்னே பெங்களூர் அச்சுக்கூடமொன்றில் உத்தியோகஸ்தராயிருந்த தி. கு. சுப்பிரமணியபிள்ளை யென்னும் பெயரிய ஒரு நல்லாரை, அவ்வூர் நீதிமன்றத்திற் கொண்டுவரப்பட்ட ஒரு கொலைக்குற்றத்தில் இவர் சம்பந்தப்படவில்லையென விலக்கியருளியதும் இக்கவச பாராயணமேயாம்.

இற்றைக்கு உ௦-மாதங்கட்கு முன்னர்ப் பெங்களூர்க் கிராஸ் கண்டோன்மெண்ட் பாலப்பா கார்டன் B. தெருவிலே கஉ-வது வீட்டிலே வசிக்கும் த. து. கந்தசாமிப் பிள்ளையின் மகன் ரு-பிராயமுள்ள சரவணபவனென்னும் பெயருடையானை மரண வேதனையினின்று காத்தருளியதும் இக்கவச பாராயணமேயாம். விவரம்:—இச் சிறுவனுக்குண்டான இப்பெரு வெப்பு நோய் இனி நீங்காது; இவன், இன்றிரவிற்றானே மரணமாய் விடுவனாகவின் மருந்தை நிறுத்திவிட்டோமென ஆங்கில வைத்தியரும், மற்ற வைத்தியருங் கூறி மருந்து கொடாது போய்விட்ட பின்றைச் சிறுவனுடைய தந்தை பெரிதும் வருந்துதலை யுணர்ந்த அவ்வீட்டுக்குடையாராய தி. ஐ. சுவாமிநாதபிள்ளை, சண்முககவச பாராயணஞ் செய்கவெனக் கூறியவாறு அப்பாராயணத்தை அத்தந்தை தொடங்கினர்; தொடங்கவே அந்நோய் படிப்படியாகக் குறைந்து அச்சிறுவனு மெழுந்திருக்கலாயினன்: அவ்வாறுய வவனைக் கால்களிலுற்ற பிடிப்பு நடக்கவொட்டாது செய்தமையின் அதுவும் நீங்கு நிமித்தம் மீளவுங் கவச பாராயணந் தொடங்கப்பட்டது:—கரு-நாட்களுள் அவனும் எழுந்து நடந்தனன்: ஔடதங்களுளொன்று முபயோகிக்கப்படவில்லை என்க.

கலியுகம் ருoஉச-ற் சாலிவாகன சகாப்தம் கஅசரு-ல்
துந்துபிஞு வைகாசிமீ கஉஉ சென்னை, 25-5-1922.

கலியப்தம் ருOஉரு - ன் மார்கழிமீ கஉ - ஆந் தினமாகிய 1923 - ஆம் ஷூ டிசம்பர்மீ 27உயில் இந்நூலாசிரியர், சென்னைத் தம்புசெட்டித்தெரு நடுவே போதருங்கால் வடக்கிருந்து தெற்கு நோக்கி விரைந்து வரூஉங் குதிரை பூட்டிய ஒரு பெரிய பண்டி, தம்மைத் தரையிற்றள்ளி ஒரு புறத்துச் சக்கரம் தமதிடக்கணைக் காலிலேறிச் சென்றமையாற் கால் முரிந்ததைக் கண்ணுற்றார். பின்னர் ஆங்குக் கூடியபலராலும் இராசாங்கத்துப் பெரிய வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஏறக்குறைய (எரு) எழுபத்து மூன்று வயதாகின்றமையால் இவருங்கால் குணப்பட்டெழுவாரோ? என்னும் பேரையத்தோடேயே ஏற்புடைச் சிகிச்சையைச் செய்ய வாரம்பித்தனர் அங்குள்ள வைத்தியர்கள். குணங்காண்டலரிதெனச் சிந்திக்குஞான்று தத்தம் மூன்றில்லங்களிற் சண்முககவச பாராயணஞ் செய்தாருள்ளே நெடுநேரமாக அப்பாராயணஞ்செய்த திருவல்லிக்கேணிச் சுப்பிரமணியதாசரெனும் பெயரிய சின்னசுவாமிப்பிள்ளை முன்பாக அக்காலானது தோற்றுவதாயிற்று. எலும்புமுரிந்த பாகத்தில் இறைவனுடைய இரண்டு வேல்களின் இலைபோன்ற பாகங்கள் ஒன்றுமாறு பூட்டப்பட்டும் அவைகளைத் தாங்கி நிற்பதாக வேறொரு வேல் நிறுத்தப்பட்டு மிருத்தலை அதன்கண் அவர் கண்டு தொழுவாராயினர். எலும்பு கூடிக் குணப்படுங்காறும் அவ்வண்ணமே தாம் கண்டு வருதலையும் மகிழ்வோடு அவர் வெளியிட்டுக் குமாரபிரான் றிருவருளைப் பெரிதுங் கொண்டாடுநராயினர். ஆசிரியரும் முரிந்தகால் கூடப்பெற்று நடைகொள்பவராயினர். படங்களோடுங்கூடிய இத்துன்ப நீக்க விவரமெல்லாம் ஆசிரியரருளிய ஆறுவது மண்டலமாகிய ஸ்ரீமத் - குமாரசுவாமியத்தின் அசோகசாலவாசத்திற் கண்டு கொளளலாம்.

மதுரைக் கமலைத்தோப்புத் தெருவில் வசிக்கும் விசுவநாதையர் இரண்டு வருடங்களுக்கு முன்னே திருச்செந்தூரை யடைந்து செந்திலாண்டவனைத் தொழுவோராயினர். அவ்வூர்க் குமாரபக்த சிரோமணியாகிய ஈ. அனந்தசுப்பையர் அவரை நோக்கி, பஞ்சாமிர்த வண்ணத்தைப் பாடுவதோடு சண்முககவச பாராயணத்தையுந் தினமுஞ்செய்திடுகவென்று அறிவுறுத்தார். அப்படியே நடாத்தினவவர், தம்முடைய கைகளிலுற்ற கருங் குஷ்டமும், மூலபவித்திரமும் ஒரு வாரத்திலே நீங்கப்பெற்று அதிசயித்து மகிழ்ந்து தமதிருக்கை புக்கார்.

சென்னையைச் சார்ந்த சிந்தாதிரிப்பேட்டை அருணசலநாயகன்தெரு 1/54-ஆம் வீட்டில் வசிக்கும் T.B. தாமோதரம் பிள்ளையவர்கள் மனைவி இரத்தின அம்மாளுக்குக் கழுத்தி லுண்டாயிருந்த கண்டமாலை எத்திற வைத்தியத்தினும் தீர்ந்திலது. பின்னர் அவ்வம்மாள், 1925-ம் ஆண்டில் இக்கவசத்தை நாடோறும் ஆறுமுறை பாராயணஞ் செய்துகொண்டு வரும்போது அஃதொரு மண்டலத்திற்குள் அப்பிணியைப் போக்கிச் சுகமளித்த மகிமையைப் பலருமறிந்து கொள்பவராயினர்.

பெங்களூர்க் கிராஸ் கண்டோன்மெண்ட் பாலப்பா கார்டன் B தெருவில் 82-வது வீட்டிற் குடையாராய நா. பொன்னுசாமிப்பிள்ளை ஐந்தாண்டுகாறுங் குன்மவியாதியான் மிக்க துன்பப்பட்டார். எத்திற மருந்துகளானுந் தீராதுள்ள அந்நோயின் கொடுமையால் ஒருநாள் மூர்ச்சையாய் அவர் வீழ்ந்தவுடன் அவ்வீட்டி லுள்ளாரெல்லாங் கண்ணீர் சொரிந்தரற்ற வாரம்பித்தனர். அப்போதங்குப் போந்த கந்தபக்தி மிக்க த. து. கந்தசாமிப்பிள்ளை அன்

னோர்க்குத் தேர்தல் கூறி இக்கவச பாராயணத்தைத் தொடங்கினர். அவ்வமையம் ஆங்கொருவர் தோன்றி மூர்ச் சித்துக்கிடப்பாருடைய தேகநரம்புகளைக் கையாற்றேய்த்து விட்டு மருந்தொன்றுங் கொடாமலே மறைந்து சென்றதைக் கண்ணுற்ற கந்தசாமிப்பிள்ளை, பாராயண பூர்த்தியானவுடன் தமதிருப்பிட மடைந்து மறுநாள் அப்பிள்ளையைப் பார்த்தபோது அவரெழுந் திருத்தலை யுணர்ந்து உவகை யுற்று, மேன்மூன்று நாளுங் கவசபாராயணத்தை விதிப்படி செய்துவிட்டு, இனி நீரே பாராயணஞ் செய்துகொள்ளலா மெனக்கூறித் தம்மிருக்கை புக்கனர். அவ்வாறு அது நிகழ்கையில் 1925 - ஆம் ஹூ செப்டம்பர்மீ 3 - ஆந் தினத் திரவு 2 - மணிக்கு யாதானுமொரு வாதையின்றிச் சேதிக் கப்பட்டதும் அவர் வயிற்றினுள் ளிருந்ததுமான கட்டி, துண்டுதுண்டாய் ஆட்டினீரல் அளவினதாய் வாய்வழிவந்து வீழ்தலோடு ஒரு பாத்திர நிறைய இரத்தமும் வெளிப் படுவதாயிற்று. அது முதலாக வயிற்றிலிருந்த வாதையு நீங்கிற்று. பின்றை அவர், இக்கவசத்தையே தினந்தோறும் பாராயணஞ் செய்து குமாரபக்தியிலுவகை பூக்க நிற்குநராயினர்.

சிறந்த ஆங்கில வைத்தியரிடம் கம்பவுண்டர் வேலை செய்பவரும் பெங்களூர்த்தண்டு நியூகொரச்சபாளையம் A. வீதி 25-வது வீட்டில் வசிப்பவருமான வடிவேல் முதலியார், தம்முடைய குமாரனாகிய நடராஜனுக்குற்ற வெப்பு நோய் கருதி 48-நாள்காறும் ஆங்கில வைத்தியஞ் செய்யும்படி செய்தார். பல் கிட்டியிருந்தமையால் மூக்கில் ரப்பர் குழாயை வைத்து அதன் வழியாகப் பாலைச் செலுத்திப் பார்த்ததிலும் அவனுக்கு மரணக்குறிக ளேற்பட்டுவிட்டன. உடனே தந்தை வடிவேல் முதலியார், இனி இது

செய்வேனெனச் சண்முக கவச பாராயணத்தையே காலையு மாலையுமாகச் செய்யத் தொடங்கினர். நாளடைவிலே வாயைத்திறந்து பாலுட்கொண்ட அவன் பூரண சுகமடைந் திருப்பவனாயினன்.

சிதம்பரம் வண்டிக்காரர் தெருவில் வசிக்கும் 40-வய துடைய செல்வத்தம்மாளின் வலக்கணைக்காலிலே குரோ தனவரு புரட்டாசிமீ க0உ மாலையிலே பாம்பு கடித்தது. அதனால் அவ்வம்மாளுக்கு நெஞ்சடைப்பும் மூர்ச்சையுமேற் பட்டவுடன் இக்கவச பாராயணம் நிகழ்ந்தது. விஷமிறங்கி அவ்வம்மாளெழுந்து சுகமுற்றனள்.

கவசச் செய்யுள்களுட் சிலவற்றை விட்டுச் சிலவற் றைக் கூறலும், இடையிலெவரோடேனும் பேசலுங் கூடாது; முன்பின் மாறிப் படித்தலுமாகாது; மந்திரமாறுபாடுபோல விபரீதமாமாகலின். ஆகூழிணையாப்போகூழ், அறந்தழுவா மறம், அழுக்காறு, பக்தியீன மென்பன வுடையார்க்கு இக் கவசங் கிடைத்தலும், அநுட்டித்தலும், உரிய பலன்பெற லும் எண்மையாமோ?

கலியுகம் ருOஉஎ - ற் சாலிவாகனசகாப்தம் கஅசஅ - ற்
குரோதனவரு மார்கழிமீ உஈஉ. சென்னை 6 - 1 - 1626.
குமாரகுருபரன் திருவடிவாழ்க.

---

# பரிபூஜன
# பஞ்சாமிர்தவண்ணம்.

## க. பால்.

தனந்த தந்தன தனந்தன
தனந்த தந்தன தனந்தன
தனந்த தந்தன தனந்தன
தனந்த தந்தன தனந்தன

தந்தந் தந்தன தந்தான
தந்தந் தந்தன தந்தான
தந்தந் தந்தன தந்தான
தந்தந் தந்தன தந்தான

தாந்த தந்தன தன தாந்த தந்தன
தாந்த தந்தன தன தாந்த தந்தன

தனந்த தந்தன தனந்த தந்தன
தனந்த தந்தன தனந்தன
தனந்த தந்தன தனந்த தந்தன
தனந்த தந்தன தனந்தன—தனதனதன தான.

இலங்கு நன்கலை விரிஞ்சனே
டனந்த னுஞ்சத மகன்சதா
வியன்கொ டம்பியர் களும்பொன
டுறைந்த புங்கவர் களுங்கெடா
தென்றுங் கொன்றைய ணிந்தோனார்
தந்தண் டின்றிர ளுஞ்சேயா
மென்றன் சொந்தமி னுந்தீதே
தென்றங் கங்கணி கண்டோயா

தேந்து வன்படைவேல் வலி சேர்ந்த திண்புயமே
யேய்ந்த கண்டகர்கா ளூடை மூஞ்சி கந்தரமோ
டெலும்பு றுந்தலை களுந்து ணிந்திட
வடர்ந்த சண்டைக டொடர்ந்துபே
யெனுங்கு ணுங்குக ணிணங்க ளுண்டரன்
மகன்பு றஞ்சய மெனுஞ்சொலே
—களமிசையெழுமாறே, (வ)

துலங்கு மஞ்சிறை யலங்கவே
விளங்க வந்தவொர் சிகண்டியே
துணிந்தி ருந்துயர் கரங்கண்மா
வரங்கண் மிஞ்சிய விரும்புகூர்
துன்றுந் தண்டமொ டம்பீர்வாள்
கொண்டண் டங்களி னின்றாடே
சுண்டும் புங்கம ழிந்தேதலா
தஞ்சும் பண்டசு ரன்சூதே
சூழ்ந்தெ ழும்பொழுதே கரம் வாங்கி யொண்டிணிவே
றாண்டி நின்றவனே கிளை யோங்க நின்றுளமா
துவந்து வம்பட வகிர்ந்து வென்றதி
பலம்பொ ருந்திய நிரஞ்சனு
சுகங்கொ ளுந்தவர் வணங்கு மிங்கித
முகந்த சுந்தர வலங்க்ருதா
—அரிபிரமருமேயோ, (௭)

அலைந்து சந்தத மறிந்திடா
தெழுந்த செந்தழ லுடம்பினு
ரடங்கி யங்கமு மிறைஞ்சியே
புகழ்ந்த வன்றுமெய் மொழிந்தவா

அங்கிங் கென்பத றுங்தேவா
யெங்குங் துன்றிநி றைங்தோனே
யண்டுங் தொண்டர்வ ருங்தாமே
யின்பங் தங்தரு ளுங்தாளா
ஆம்பி தங்திடுமா மணி பூண்ட வங்தனையா
வாண்ட வன்குமரா வெனை யாண்ட செஞ்சரண
அலர்ந்த விங்துள வலங்க லுங்கடி
செறிந்த சங்தன சுகங்தமே
யணிங்து குன்றவர் நலம்பொ ருங்திட
வளர்ந்த பங்தனை யெனும்பெணுள்
—தனையணைமணவாளா, (ௌ)

குலுங்கி ரண்டுமு கையுங்களா
ரிருண்ட கொங்தள வொழுங்கும்வேல்
குரங்கு மம்பக மதுஞ்செவா
யதுஞ்ச மைங்துள மடங்தைமார்
கொஞ்சும் புன்மொழி லுங்காலோ
ருஞ்சண் டன்செய லுஞ்சூடே
கொண்டங் கம்பட ருஞ்சிழ்நோ
யண்டங் தங்தம்வி ழும்பாழ்நோய்
கூன்செ யும்பிணிகால் கரம் வீங்க ழுங்கலும்வாய்
கூம்ப ணங்குகணோய் துயர் சார்ந்த புன்கணுமே
குயின்கொ ளுங்கடல் வளைங்த விங்கெனை
யடைந்தி டும்படி யினுஞ்செயேல்
குவிங்து நெஞ்சமு ளணைங்து நின்பத
கினைங்து யும்படி மனஞ்செயே
—திருவருண்முருகோனே. (க)

## உ. தயிர்

தனத்தன தந்தன தனத்தன தந்தன
தனத்தன தந்தன தனத்தன தந்தன
தா தனன தனன தனன
தனந்த தந்தன தனந்த தந்தன
தனந்த தந்தன தனந்த தந்தன
தா தனன தனன தனன—தனதனதனதான.

கடித்துண ரொன்றிய முகிற்குழ லுங்குளிர்
கலைப்பிறை யென்றிடு நுதற்றில கந்திகழ்
கா சுவையா ளிளமா மகனே
களங்க விந்துவை முனிந்து நன்கது
கடந்து விஞ்சிய முகஞ்சி றந்தொளி
கா லயிலார் விழிமா மருகா
—விரைசெறியணிமார்பா, (௩)

கனத்துயர் குன்றையு மிணைத்துள கும்பக
லசத்தையும் விஞ்சிய தனத்திசை மங்கைகொள்
கா தலனன் முகன டமுதே
கமழ்ந்த குங்கும நரந்த முந்திமிர்
கரும்பெ னுஞ்சொலை யியம்பு குஞ்சரி
கா வலனே குகனே பரனே
—அமரர்கடொழுபாதா, (௪)

உடுக்கிடை யின்பணி யடுக்குடை யுங்கன
வுரைப்புயர் மஞ்சுறு பதக்கமொ டம்பத
வோ வியநூ புரமோ திரமே
ருயர்ந்த தண்டொடை களுங்க ரங்களி
லுறும்ப சுந்தொடி களுங்கு யங்களி
லூ ரெழில்வா ரொடுநா சியிலே
—மினுமணிநகையோடே, (௫)

உலப்பறி லம்பக மினுக்கிய செந்திரு
வுருப்பணி யும்பல தரித்தடர் பைந்தினை
யோ வலிலா வரணே செயுமா

ருெழுங்கு றும்புன மிருந்து *மஞ்சுல
முறைந்த கிஞ்சுக நறுஞ்சொ லென்றிட
வோ லமதே யிடுகா னவர்மா
—மகளெனுமொருமானும், (௭)

மடக்கொடி முன்றலை விருப்புடன் வந்ததி
வனத்துறை குன்றவ ருறுப்பொடு நின்றிள
மா னினியே கனியே யினிநீ

வருந்து மென்றனை யணைந்து சந்தத
மனங்கு ளிர்ந்திட வணங்கி வந்தரு
ளாய் மயிலே குயிலே யெழிலே
—மடவனநினதோரார், (௭௰)

மடிக்கொரு வந்தன மடிக்கொரு வந்தனம்
வளைக்கொரு வந்தனம் விழிக்கொரு வந்தனம்
வா வெனுமோர் மொழியே சொலுநீ

மணங்கி ளர்ந்தந லுடம்பி லங்கிடு
மதங்கி யின்றுள மகிழ்ந்தி டும்படி
மான் மகளே யெனையா ளிதியே
—எனுமொழிபலகூறே, (௯)

படித்தவ டன்கைகள் பிடித்துமு னஞ்சொன
படிக்கும ணந்தரு ளளித்தவ னந்தகிர்
பா கரனே வரனே யரனே

* மஞ்ஜுலம் = அழகு ; வடசொல்.

படர்ந்த செந்தமிழ் தினஞ்சொ லின்பொடு
பதங்கு ரங்குந ருளங்கெ தெளிந்தருள்
பா வகியே சிகியூ ரிறையே
—திருமலிசமரூரா, (ரு)

பவக்கட லென்பது கடக்கவு நின்றுணை
பலித்திட வும்பிழை செறுத்திட வுங்கவி
பா டவுநீ நடமா டவுமே
படர்ந்து தண்டயை நிதஞ்செ யும்படி
பணிந்த வென்றனை நினைந்து வந்தருள்
பா லனனே யெனையாள் சிவனே
—வளரயின்முருகோனே. (சு)

## ௩. நேய்.

தந்தந்தா தந்தந்தா தந்தந் தந்தன தந்தந்தா
தந்தந்தா தந்தந்தா தந்தந் தந்தன தந்தந்தா
தாந் தனு தனு தனு தனு

தனதன தத்தத் தனதன தத்தத்
தனதன தத்தத் தனதன தத்தத்தா

தனதன தத்தத் தனத்தனு
தனதன தத்தத் தனத்தனு
தனதன தத்தத் தனத்தனு
தனதன தத்தத் தனத்தனு

தனனு தனனு தனனு தனனு
தனனு தனனு தனனு தனனு

தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தனதன தனனு
—தந்தன தனதானு.

**வ**ஞ்சஞ்சூ தொன்றும்பேர் துன்பஞ் சங்கட மண்டும்பேர்
மங்கும்பேய் நம்பும்பேர் துஞ்சும் புன்சொல்வ ழங்கும்பேர்
மான் கணூர் பெணூர் தமா லினுன்
மதியது கெட்டுத் திரிபவர் தித்திப்
பெனமது துய்த்துச் சுழல்பவ ரிச்சித்தே
மனமுயி ருட்கச் சிதைத்துமே
நுகர்தின துக்கக் குணத்தினேர்
வசையுறு துட்டச் சினத்தினேர்
மடிசொல மெத்தச் சுறுக்குளோர்
வலியே றியகூ ரமுளோ ருதவார்
நடுவே துமிலா ரிழிவார் களவோர்
மணமல ரடியிணை விடுபவர் தமையினு
நணுகிட வெணவிடு வதுசரி யிலையே
—தொண்டர்கள்பதிசேராய், (வ)

**வி**ஞ்சுங்கார் நஞ்சந்தா னுண்டுந் திங்கள ணிந்துங்கால்
வெம்பும்போதொண்செந்தாள்கொண்டஞ்சஞ்சவுதைந்தும்பூ
மீன் பதா கையோன் மெய்வீ யுமா
விழியைவி ழித்துக் கடுகவெ ரித்துக்
கரியையு ரித்துத் *தனுமிசை சுற்றிக்கோள்
விழைவறு சுத்தச் சிறப்பினுர்
பிணைமழு சத்திக் கரத்தினுர்
விஜயவு டுக்கைப் பிடித்துளார்
புரமதெ ரிக்கச் சிரித்துளார்

---

* தனுமிசை = தனுவில். தனு = உடம்பு.

விதிமா தவனு ரறியா வடிவோ
ரொருபா திபெணு யொளிர்வோர் சுசிநீள்
விடைதனி லிவர்பவர் பணபண மணிபவர்
கனைகழ லொலிதர நடமிடு பவர்சேய்
—என்றுள குருநாதா, (௭)

தஞ்சஞ்சேர் சொந்தஞ்சா லஞ்செம் பங்கய மஞ்சுங்கா
றந்தந்தா தந்தந்தா தந்தந் தந்தன தந்தந்தா
தாந் ததீ ததீ ததீ ததீ

ததிமிதி தத்தித் தரிகிட தத்தத்
திரிகிட தத்தத் தெயெனந டிக்கச்சூழ்

தனிநட னக்குத் தியத்தினண்
மகிடனை வெட்டிச் சிதைத்துளாள்
தடமிகு முக்கட் கயத்தினள்
சுரதனு வக்கப் பகுத்துளாள்

சமிகூ விளமோ டறுகா ரணிவா
ளொருகோ டுடையோ னனையாய் வருவாள்

சதுமறை களும்வழி படவளர் பவண்மலை
மகளென வொருபெய ருடையவள் சுதனே
—அண்டர்கடொழுதேவா, (௮)

பிஞ்சஞ்சூழ் மஞ்சொண்சே யுஞ்சந் தங்கொள்ப தங்கங்கூர்
பிம்பம்போ லங்கஞ்சா ருங்கண் கண்களி லங்குஞ்சீ
ரோங் கவே யுலா வுகால் விணோர்

பிரமனெ டெட்டுக் குலகிரி திக்குக்
கரியொடு துத்திப் படவர வுட்கப்பார்

பிளிற நடத்திக் களித்தவா
கிரிகெட வெக்கித் துளைத்தவா
*பிரியக மெத்தத் தரித்தவா
தமியனை நச்சிச் † சுளித்தவா
பிணமா முனமே யருள்வா யருள்வாய்
துனியா வையுநீ கடியாய் கடியாய்
பிசியொடு பலபிழை பொறுபொறு பொறுபொறு
சததமு மறைவறு திருவடி தரவா
—என்களிமுருகோனே. (க)

## ௩. சருக்கரை.

தான தந்தன தான தந்தன
தான தந்தன தான தந்தன
தான தந்தன தான தந்தன
தான தந்தன தான தந்தன
தத்தன தனதன தனத்தன
தனந்த தத்தன தனத்தன
தத்தன தனதன தனத்தன
தனந்த தத்தன தனத்தன—தனதனதனதான.

மாத முந்தினம் வார முந்திதி
யோக மும்பல நாள்க ளும்படர்
மாதி ரந்திரி கோள்க ளுங்கழல்
பேணு மன்பர்கள் பான லந்தர
வற்சல மதுசெயு மருட்குண
சிறந்த விற்பன ரகக்கண
மற்புய வசுரரை யொழித்தவா
வனந்த சித்துரு வெடுத்தவா

* பிரியகம்=கடம்பு. ப்ரியகமென்னும் வடசொல்லின் விகாரம்.
† சுளித்தல்=கோபித்தல்.

மால யன்சுரர் கோனு டும்பரெ
லாரும் வந்தன மேபு ரிந்திடு
வான வன்சுடர் வேல வன்குரு
ஞான கந்தபி ரானெ னும்படி
மத்தக மிசைமுடி தரித்தவா
குளிர்ந்த கத்திகை பரித்தவா
மட்டறு மிகலயில் பிடித்தவா
சிவந்த வக்கினி நுதற்கணு
—சிவகுருவெனுநாதா, (௭)

நாத விங்கித வேத மும்பல்பு
ராண முங்கலை யாக மங்களு
நாத னுன்றனி வாயில் வந்தன
வேயெ னுந்துணி பேய றிந்தபி
னச்சுவ திவணெது கணித்தையோ
செறிந்த ஷட்பகை கெடுத்துமே
னட்புடை யருளமிழ் துணிற்சதா
சிறந்த *துத்தியை யளிக்குமே
நாளு மின்புயர் தேனி னுஞ்சுவை
யீயும் விண்டல மேவ ருஞ்சுரர்
நாடி யுண்டிடு போஜ னந்தனி
லேயும் விஞ்சிடு மேக ரும்பொடு
நட்டமின் முப்பழ முவர்க்குமே
விளைந்த சர்க்கரை கசக்குமே
நற்சுசி முற்றிய பயத்தொடே
கலந்த புத்தமு தினிக்குமோ
—அதையினியருளாயோ, (௯)

*துத்தி = துய்ப்பன ; "சுணங்கும் பொறியுந் துய்ப்பனவுந் துத்தி." என்பது சே - திவாகரம்.

பூத லந்தனி லேயு நன்குடை
மீத லந்தனி லேயும் வண்டறு
பூம லர்ந்தவு ளுத வம்பத
நேய மென்பது வேதி னந்திகழ்

பொற்புறு மழகது கொடுக்குமே
யுயர்ந்த மெய்ப்பெயர் புணர்த்துமே
பொய்த்திட வினைகளை யறுக்குமே
மிகுந்த சித்திகள் பெருக்குமே

பூர ணந்தரு மேநி ரம்பெழி
லாத னந்தரு மேய ணிந்திடு
பூட ணந்தரு மேயி கந்தனில்
வாழ்வ துந்தரு மேயு டம்பொடு

பொக்கறு புகழினை யளிக்குமே
பிறந்து செத்திட றொலைக்குமே
புத்தியி லறிவினை விளக்குமே
நிறைந்த முத்தியு மிசைக்குமே
—இதைநிதமுதவாயோ, (ஐ)

சீத ளஞ்சொரி கோதில் பங்கய
மேமல ர்ந்திடு வாவி தங்கிய
சீர டர்ந்தவி ராவி னன்குடி
யேர கம்பர பூத ரஞ்சிவ

சித்தரு முனிவரும் வசித்தசோ
லையுந்தி ரைக்கட லடிக்கும்வாய்
செற்கண முலவிடு பொருப்பெலா
மிருந்த ளித்தரு ளயிற்கையா

தேனு றைந்திடு கான கந்தனின்
மானி ளஞ்சுதை யாவி ருஞ்சரை
சேரு டம்புத ளாட வந்தசன்
யாச சுந்தர ரூப வம்பர

சிற்பர வெளிதனி னடிக்குமா
வகண்ட தத்துவ பரத்துவா
செப்பரும் ரகசிய நிலைக்குளே
விளங்கு தற்பர திரித்துவா
—திருவளர்முருகோனே. (க)

## ரு. தேன்.

தானதன தானன தானதன தானதன
தனதான தனதான தனதான தனதான
—தனதனதனதானா.

சூலதர னாட வோதிமக ளாடநனி
தொழுபூத கணமாட வரியாட வயனோடு
தூயகலை மாதாட மாநளினி யாடவுயர்
சுரரோடு சுரலோக பதியாட வெவியேறு
*சூகைமுக னாட மூரிமுக னடவொரு
தொடர்ஞாளி மிசையூரு மழவாட வசுவீர
சூலிபதி தானுட நீலநம னுடநிறை
சுசிநார விறையாட வலிசானி ருதியாட
—அரிகரமகனோடே, (வ)

காலிலியு மேயாட வாழ்நிதிய னுடமிகு
கனஞால மகளாட †வரவேணி சசிதேவி
காமமத வேளாட மாமைரதி யாடவவிர்
கதிராட மதியாட மணிநாக வரசோகை

* சூகை=யானை. † வரவேணி=வாநதி=கங்கை.

காணுமுனி வோராட மாணறமி ஞடவிரு
கழலாட வழகாய தளையாட மணிமாசில்
கானமயி ருஞட ஞானவயி லாடவொளிர்
கரவாள மதுவாட வெறிசூல மழுவாட
—வயிரமலெறுழோடே, (௭)

கோலவரை ஞாஞட நூன்மருமமாடவிரை
கொளுநீப வணியாட வுடையாட வடனீடு
கோழியய ராதாட *வாகுவணி யாடமிளிர்
குழையாட வளையாட வுபயாறு கரமேசில்
கோகநத மாராவொரு டாறுவிழி யாடமலர்
குழகாய விதழாட வொளிராறு சிரமோடு
கூறுகலை நாவாட வூரலொளி யாடவலர்
குவடேறு புயமாட மிடருட மடியாட
—அகன்முதுகுரமோடே, (அ)

நாலுமறை யேயாட மேனுதல்க ளாடவிய
னவியாத வெழிலாட வழியாத குணமாட
நாகரிக மேமேவு வேடர்மக ளாடவரு
ணயவானை மகளாட முசுவான முகனுட
நாரதம காஞட †வோசைமுனி யாடவிற
னவவீரர் புதராட வொருகாவ டியனுட
ஞானவடி யாராட மாணவர்க ளாடவிதை
நவிருச னுடனுட விதுவேளை யெணிவாகொள்
—அருண்மலிமுருகோனே. (க)

பஞ்சாமிர்தவண்ண முற்றிற்று.

---

* வாகு - பாஹு என்பதன் விகாரம், = தோள்.

† ஓசை = சந்தம்; திருப்புகழ்ச் சந்தங்களைப் பாடியருளிய அருணகிரிநாதரே "ஓசைமுனி" எனப்பட்டனர்.

இந்நூ லாசிரியரான ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகளும் திருவனந்தபுரம் ந. சுப்பிரமணியபிள்ளை யெனும் பெயரிய சிவநேசச் செல்வரொருவரும் பாம்பனெனும் பதிக்கட் சந்தித்திருந்த வேர்பகலில், சுவாமிகளைக் காண வந்தவர்களு ளொருவர் தமக்குப் பாடமாயிருந்த சிற்றின்ப வண்ணமொன்றனை யினிமையாகப்பாடினர். அதனைக்கேட்டிருந்த மேற்படி பிள்ளை, நங்கடவுளாகிய குமாரசுவாமியின்பேரில் சுவாமிகளும் வண்ணம் பாடவேண்டுமென்ற திவ்விய வேண்டுகோளை யங்கீகரித்து, சுவாமிகள் கலியுகம் சகூகூ௩ - ஆம் ஆண்டில் நிகழ் கரவருடத்துக் கார்த்திகை மதி உசவ சேய்வாரத்தில் இப் பஞ்சாமிர்த வண்ணத்தைப் பாடி முடித்தனர். இதனைப் பத்தியோடும் ஒருமுறை பாடி முடிப்போர்க்கு, குமாரக்கடவுட்குப் பஞ்சாமிர்தத்தால் ஐந்தபிடேகஞ்செய்த பலன் கிடைக்குமென்பது சரதம். அங்ஙனம், பலமுறையாயிற் பலனும் அத்துணையேயாம்.

சந்தன சயிலமென்னுந் திருச்செந்தூர் ஸ்தானிகருளொருவராய் ஏறக்குறைய சடு-வயதுடையராய் ஈ. அனந்த சுப்பையரென்னும் பெயரினரா யிராநின்ற வேதியனார் சென்ற காலயுத்தி வருடத்து மார்கழி மாதத்திலே தமது புத்தகப் பெட்டியிலிருந்து இப்பஞ்சாமிர்தவண்ணப் பிரதியொன்றனைக் கண்டெடுத்துப் படித்துப் பார்த்தனர். இது, சொல்லானும் பொருளானும் பாட்டானும் இனிமையாயிருக்கின்றதேயென்பது நுதலி, இதனைப் பாராயணஞ் செய்ய வேண்டுமென நினைந்தனர். வேலூரைச் சார்ந்த வாட்கொடைக்கிராம வாசியாயிருந்து திருச்செந்தூர் சென்றிருந்த ருரு - வயதுடைய வ. ந. சுப்பிரமணிய ஐயரென்னும் பெயரிய வேதியர், அப்பாராயணத்தில் யானுமிருக்கக் கடவே னென்றனர். கந்தக்கடவுளது செங்கோன்முட்

பத்தியிலீடுபடு மெய்யுணர்வு முதலிய மேன்குணங்கள் வாய்ந்த இவ்விருவரும் அப்படியே செய்வோமென்று அவ்வூர்க் கவுண்டர் மண்டபத்திற்கு மாலைப்போது தோறும் போந்து வைகிப் பாராயணஞ்செய்து வருதலை உடனிருந்து செவிமடுத்து வருபவரும் தமதுடல் பொருள் ஆவியெல்லாம் முருகப்பெருமானுக்கே சமர்ப்பித்து நிற்பவரும் ௮௰-வயதின் மிக்கவரும் **முத்தம்மை** யென்னும் பெயருடையருமாகிய ஒரு பெரும் புண்ணியவதியாருடைய கண்கள் காணுமாறு சென்ற சித்தார்த்தி வருடத்துச் சித்திரை மாதத்தொரு குருவாரத்திரவு ௬-கடிகைக்குமேல் ௨௰,௨௨-பிராயமுடையாராய்க் காசிச்சிறு செம்பொன்று கையிலுடையாராய் ஒருவர் வந்தனர். பின்றை, எனக்கும் இப்பாராயணஞ் செய்வார்க்கும் இடையேசென்று சிறிது மறைவாக நின்று இவ்வண்ணத்தைக் கேட்டு நிற்கும் இவர் யாரோ புதியராயிருக்கின்றனர்; யாவரேயாயினும் இங்ஙன நன்கிருந்து கேட்கலாமே; அவ்வாறு செய்யாததென்? என்று அவ்வம்மையார் சிந்தித்து நோக்கியவுடன் அவர் மறைந்தனர். இவ்விவரத்தைப் பாராயண முடிவில் அவ்வேதியரிருவருக்கும் அவ்வம்மையார் கூறிவிட்டு வழக்கம்போல அன்னாரோடு திருக்கோயில் போந்து செந்திலாண்டவனைத் தரிசித்து விடைபெற்றுத் தமதிருக்கையை யடைந்தனர்.

மறு நாளாகிய சுக்கிரவாரத்திரவு ௨௩ - கடிகைக்கு மேலே முத்தம்மையாரிருக்கையினை முன் மறைந்து சென்ற திருமேனிப்பரமரடைந்து அவரை நோக்கி, நீ நேற்று என்னைப் பார்த்து இவர் யாரோ புதியரென் றெண்ணலுற்றனையன்றோ: யான் இவ்வூரே: என்னுடன் வருவையேல் இருப்பிடங் காட்டுவே னென்றனர். அவ்வம்மையாரும் அது காண்

குவலென ஆவலோடெழுந்து அவரோடு வீதியினையடைந்த னர். ஆண்டு நிற்கின்ற ஓரிளம்பருவப் பெண்ணோடும் அப் பரமர் செல்லுதலைக் கண்ணுற்ற அவ்வம்மையாரும் பின் றொடர்ந்துசென்று கலியாண மண்டபத்தை அடுத்து நிற்கும் அவர்கள் பக்கலி னின்றனர். ஆண்டுப்பரமர் கிழவீ! கவுண் டர் மண்டபத்திற் பாராயணஞ் செய்யப்படுகின்ற பஞ்சா மிர்த வண்ணம் இயன்றவளவில் இன்னோசையெழப் பாடப் படல்வேண்டும்; நீ அவர்கட்குச் சொல். அவ்வண்ணம் எனக்குப் பிரீதியாயுளது; அஃதெங்கே பாராயணஞ் செய் யப்படுமோ அங்கே யான் வருவேனிருப்பேனாகலின் அம் மண்டபத்திற்கு வந்தேன்; என்னுடைய இருக்கை, இக் கலியாண மண்டபமும் வசந்த மண்டபமுங் கோவிலுமாகு மென்று ஆங்குள்ள வவற்றைச் சுட்டிக்காட்டி அவ்விளம் பருவப் பெண்ணோடும் மறைந்தருளினர். முத்தம்மையார், ஆஅ! பெருமானே பெருமானே யென்று கூவி அவ்விடத் தில் பஞ்சாங்க நமற்காரம் புரிந்தெழுந்து பன்முறையுங் கும்பிட்டு இருப்பிடமடைந்து கண்படை கொளாதிருந்து விடிந்த பின்றை யிறைவனைத்தொழுது போந்து அவ்வேதி யரிருவரையுங் கண்ணுற்று இறைவன் கட்டளையை வெளி யிட்டனர். அது செவிமடுத்த பத்தசிரோமணிகளாய அவ் விருவரும் விம்மிதமடைந்து, வண்ணபாராயண நிமித்தந் திவ்விய திருவடித் தாமரைகள் புழுதியணையப் பிராட்டி யோடு பூமிசை நடந்து வந்தருளிய பெருங்கருணைத் தடங் கடலுக்கு அனேகவந்தன மனேகவந்தனமென்று கூறி வணங்கினர். அவருள் அனந்த சுப்பையர், பாராயண வண் ணப்பிரதியைப் பூசையில் வைத்துக்கொண்டு வேறு பிரதி யொன்று பாராயணத்திற்குத் தேடிக்கொள்வாராயினர்.

இவ்விவர முணர்ந்த பிரமஸ்ரீ பிராமண சன்னி யாசியாரோருவர், தமது மௌன நிலை கெடாது மானசிக

மாக அவ்வண்ண பாராயணத்தை மேலை வசந்த மண்டபக்க ணிருந்து சின்னாட்களாகச் செய்துவருங்கால் ஓரமையம், சிறுபிராயத் திருவுரு வுடையானொருவன் காதுகளிற் குண் டலங்கள் பிரகாசிக்க எதிரினிற்கக் கண்டு அவனடிமலரை இனிது வணங்கினர். உடனே அவன் மறைந்தருளினன். இவ்வாற்றானும் இவ்வமுத வண்ணத்தை நன்கு மதித்து நடப்பவர், செவ்வேட்பரமன் திருவுளத்திற்குப் பிரீதி யுடையவராவ ரென்ப தறியக் கிடக்கின்றதால்.

கலியுகம் ௫௰௨௪ - ற் சாலிவாகன சகாப்தம்

௧௮௪௫ - ல் துந்துபிஷூ வைகாசிமீ ௧௪௨

சென்னை, 27 - 5 - 1922.

குமரகுருபரன் றிருவடிவாழ்க.

---

# திருத்தொடையல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அனந்தமறை யுன்னறிவாய் விளங்கவென
வாறுமுக வடிவே காட்டித்
தனந்தனியா வந்தசிவ சரவணனே
பிரணவனே சாமீ யுன்றன்
மனங்கனிய யானெழுகும் வகையையுணர்ந்
தெனையறிய வரமீந் தென்னைக்
கனம்படவும் வைப்பதுநின் கடனேயென்
றனுதினமுங் கருதா நின்றேன். (௧)

கம்பன்முத னற்கவிஞர்க் கரசியென
விருந்தமுதிர் கலைமா தௌவை
தம்புலமைத் திடனறியக் காரெருமை
மேய்த்திடுவோன் றனைப்போல் வந்து
சம்புமிசை யேறிநறுங் கனியுதிர்த்துப்
பரிகாசந் தனைச்செய் செவ்வேள்
எம்பெருமா னீயாயி னுன்சீர்த்தி
யான்புகல்வ தெவ்வா றன்றே. (௨)

அரிபகவ னிந்திரன்வா னவர்முனிவர்
சித்தருமே யத்தா வென்றுன்
திருவடியைப் பரவியருஞ் சீர்த்திபடைத்
தார்களெனத் திகழ்மா வேத
உருவனைத்து மனந்தமுறை யுரைத்துரைத்து
முன்பெருமை யொழிவே யின்றிப்
பெருகுமெனிற் குகனேயிங் கதுசிறிது
மேயென்னாற் பேசற் பாற்றோ. (௩)

கயறுவு கமலநிறை பூம்பொழில்கொள்
காசிநகர்க் கடவுண் முன்பு
பயமேது மின்றிமுதற் பரமரியென்
றசத்தியமே பகர்ந்தோ னீட்டு
புயமிரண்டுந் தம்பமென நின்றிடுகா
னன்னடுவிற் புரக்க வேகைச்
சயவுவணி யாற்கரங்கொய் நந்திபரன்
சரணஞ்செய் தனிவே லோனே. (௪)

வாசமலி நறுங்கடப்பந் தார்புனையுந்
தடங்கரவேன் மன்னு மெந்தாய்
காசிநகர் மான்மியத்திற் கழறுவண்ண
மானெறியிற் கரங்க டேக்கிப்

பேசியவொர் வியாதனைநீ மூடனெனத்
திருப்பிருந்தைப் பெருமான் சொல்லி
ஈசனெமக் கொருவனுள னென்றபொரு
ணீயலதொன் றிலையே யாண்டும். (௫)

அகத்தியனக் கீரனனி தவத்தினுயர்
நாரதனல் லருளே பெற்று
மிகுத்ததிருப் புகழ்புகன்ற கருத்துளனு
மேனையவுண் மெய்யோ ரெல்லாம்
மகத்துவமுற் றுய்யவடி யளித்தசிவ
னேயெழில்கொண் மயிலி லேறும்
பகத்தரள மேயுனது பதப்போது
பழிச்சவருள் பண்ணு யெற்கே. (௬)

பரமலைபொற் செந்திவளம் பதியெனுநற்
சாமிவரை படர்பூஞ் சோலை
விரியுமடற் கமலநிரை காண்பழநி
யேனையநல் விரையார் வெற்பும்
மருமலர்ச்செம் பாதமெனு நின்கழலைத்
தான்பரவென் மனமே யென்றின்
னருணிலவக் குடியிருக்க வேண்டுமயில்
பரித்துளவிண் ணமர்வோ ரேறே. (௭)

அண்டமுத லணுக்கடையாய்க் கண்டசரா
சரங்களெலா மருளா முன்றன்
பண்டமெனத் தெரிதவிணு லுனக்கிவணு
னிசைக்கவொரு பரிசுங் காணேன்
கொண்டதமி யேன்வணக்கந் தனைத்திருத்தி
யாகவிங்கே கொள்வா யென்னு
அண்டிநின்றே னின்னடிக்கே பொலம்பொலிந்த
வயில்சிகண்டிக் கரசே யன்றே. (௮)

நின்னடித்தொண் டானதிரு மாலாதி
தேவரெல்லா நின்க டைக்கண்
தன்னருளைக் கொண்டலவோ சருவநவ
சித்திகளுந் தடத்த மாக
இன்னமிருந் தாற்றிடவு மிகல்படைத்தா
ரேரயிற்கை யீசா வுன்றன்
நன்னயப்பொன் னடித்துணைகொ ளென்போல்வார்
நலமெனென நவில்வேன் மன்னே. (௬)

அண்டருக்கு முனிவருக்கு மகிலநிரை
படைப்பவற்கு மையார் சீவை
குண்டனுக்கும் வாழ்வேதவ் வசுரருயிர்
நீவந்து குடியா விட்டாற்
பண்டுமறை நனிநுவன்ற படிதரையி
லுன்னருளைப் படையார் தாவே
கொண்டுழல்வார் கதிபுகுதா ரெற்கருள்செய்
யருளுருவக் குகனே யன்றே. (௧௦)

எங்குமொரு கருத்தனென விருக்குமுனைக்
குலக்கடவு ளென்றே கொண்ட
புங்கவர்க ளொருகாலும் வேறுதெய்வங்
குரங்கார்கள் புகரொன் றின்றி
மங்கலமுற் றுய்ந்திகத்தி லுயர்சிவன்
முத்திதனை மருவி நின்றே
துங்கபர முத்தியையு மேபெறுவ
ரிந்துளப்பூந் தொடைமார் போனே. (௧௧)

நின்மலச்செஞ் சோதிவடி வுடையவுனை
யனவரத நினைப்போர்க் கென்றும்
பொன்மயச்செம் மேனியுடம் புண்டாகு
நரைதிரைகள் பொருந்தா புன்கண்

தன்னுரத்தி னுயிர்கொள் கூற்றுமனு
காதெதினுஞ் சத்தாய் நிற்குஞ்
சின்மயத்தின் றெருட்பிழம்பே யான்றெருழுமோர்
வேற்சமர்த்தா சிவச்சீர்க் குன்றே. (௧௨)

பிரமனைத்தாள் கொண்டுதைத்தாய் பிரணவத்தின்
பொருளானுய் பிறைமா கங்கை
திருமுடிக்கண் ணணியுமுக்கட் கடவுளுக்கு
முபதேசஞ் செய்தா யிந்த்ரன்
பருவரலை நீக்கியருந் துறக்கமளித்
தாய்விபுதர் பதியே யார்க்குங்
குருகுகனென் றணிமறைகள் குயிலும்வண
மெனக்குமருள் குயிற்றெண் ணுயோ. (௧௩)

வகுத்தமுதற் சரியையொடு கிரியையுநன்
ருநடக்கும் வழியா யுள்ள
அகத்தறம்வ ழாதிகத்தில் வளர்க்கவருட்
சத்திதனை யருகே வைத்து
மிகுத்ததிருக் கொலுவிருப்பை யோகமுடன்
ஞானமதும் மேன்மே லோங்கச்
சகத்தையிகழ் துறவறமுற் றேதவசி
வடிவெடுப்பை சயவே லோனே. (௧௪)

குறமகளைக் *கரிமகளை யிருமருங்கும்
வதியவருள் கூர்ந்தே யென்றும்
மறமொழித்த நின்னடியர்க் கருள்செயுமா
றனந்தமுக மருவா நிற்கும்

* கரத்தையுடையது கரி = துதிக்கையையுடைய யானை.

இறையுனக்கிங் கறுமுகமென் றரற்றுமனி
யாயமது மென்னே பன்னும்
மறைகளுக்கு முடிவுரைத்த சிவகுருவென்
றுள்ளாமன் மருண்டே யன்றே. (கரு)

திருப்பெறுநான் முகக்கிழவன் றிருநாத
னுவணைவளஞ் சேர்ந்தோர் மற்றும்
உருப்படைத்த பசுக்களுக்கெல் லாஞ்சுகுர்த
வபயகர முதவா நின்ற
அருட்படைத்த நினக்கனந்தங் கரங்களென
வுன்ஞதீ ராறு கையென்
றிருப்புரைப்ப தவிவேக மன்றோவென்
னிதயநடு விருந்திட் டோனே. (கசு)

ஆறுமுகப் படுமுனநீ யைந்துமுகத்
துடனிலவி யழியா நூல்கள்
கூறுமுறைப் படியதன்பின் குறைவில்சிவ
சத்தியொடுங் குறைவொன் றின்றி
ஈறுமுத லொருவிடநின் றுருக்காட்ட
ஞதியுன்னை யீசன் சேயென்
றாறில்லா துரைத்திடுத லுபசார
மல்லால்வே றொழுங்குண் டோவே. (கஎ)

ஐந்துவகைப் படுபூத வியல்பிணைக்கொண்
டளவிலுல காக்கி வாங்க
ஐந்துமுகத் துடன்விளங்கி யைந்தெழுத்தி
னுருவாகி யவற்றோ டுள்ள
பந்தமொன்று சால்குடிலை யருவமுக
மென்பதையும் பரித்தே மஞ்ஞை
உந்துமறு முகஞன வாறெழுத்துக்
கிறையேயென் * னுறுவ தீராய். (கஅ)

* உறுவல் = துக்கம் ; பிங்கலநிகண்டு.

பிருதிவிகம் வாயுவனல் வெளியருக்கன்
விதுவுயிராப் பிறங்கோ ரெட்டுந்
திருவுருவ மாமுனக்கென் றரியசைவ
நூனுவல றெளிவே யந்தச்
சரவசர விதப்பனைத்து நின்னனவே
யாகவினச் சார்நீத் தெந்தப்
பரசமய மும்வாழா தன்றேபொற்
சிகியூரும் *பவுள்சு ளானே. (௧௯)

சகளமதி லயனரிருத் திரன்மயேச்
சுரனெனுநற் றகைத்தே வாகி
நிகராறுநிட் களசகளத் தோங்குசதா
சிவனுகி நிறைவா யெங்குந்
திகழுருவ நிட்களத்தி னிமலவிந்து
நாதமுமை சிவமாய் நின்றே
இகபரத்து மிருந்தரசு புரிகுகநின்
னடிமதர்வி லெனைச்சே ரன்றே. (௨௦)

ஒண்கலைப்பெண் கொழுநனுமோர் வெண்பரப்பிற்
றுயில்பவனு மொளிர்தீ நெற்றிக்
கண்படைத்து நல்லறத்தின் றெய்வமெனும்
வெள்விடையுட் கனிந்தூர் தேவும்

---

* புவ்ஷ்ய: என்னும் வடசொல் ஆதிவிருத்தி சந்தியிற் பௌவ்ஷ்ய: எனவாம். இது, "பவுள்சு" என விகாரப்பட்டது. இது தானே அருணகிரிநாதனாது திருப்புகழில் "மறையும் பொய்ப் பவுஷா மெழல்வது" எனுந் தொடரிலே 'பவுஷு' என்றும், தாயுமானாரது பாடலிற் "பவிசுண்டு தவிசுண்டு" எனுந் தொடரிலே 'பவிசு' என்றும் வருவதாயிற்று. புவ்ஷ்ய: = 'மங்களம்' என நிகண்டு - விச்வப்ரகாசம் விளக்குநெறியானே இது, சம்பத் தெனும் பொருளுடைத்து.

பண்படைத்த வாரணஞ்சொல் வண்ணமரு
ளனுந்திரித்வ பாத்தி யந்தான்
விண்படைத்த வுனக்கல்லால் வேறுசொல்ல
றிரிபாகு மிளிர்வேன் மன்னே. (உக)

ஆடகப்பொன் னேபணிக ளாயிருக்கு
முறைமையைப்போ லான்மா வெல்லாம்
பாடுடைக்கோண் மாயையினைப் பலபேத
வுடலாகப் பரித்தே நிற்கும்
பீடிருக்கு நின்வடிவ நிட்களத்தி
லான்மாவாய்ப் பிறிதொன் றின்றிக்
கூடிநிற்ற லாலெவையு நின்வசமே
யாமயிற்கைக் குகனே யன்றே. (உஉ)

நித்தியத்தை யுடையபசுக் களைமாயை
கன்மமென நிகழ்ந்தே பற்று
நித்தியத்தை யுடையவிருண் மலப்பாச
மகற்றியின்ப நீங்கா முத்தி
நித்தியத்துக் கிடமதெனு நின்பதத்தி
லென்னைவைக்க நீவா ராயோ
நித்தியச்சொல் லொன்றைவந்து சொலப்பதியென்
றேயான நெடுவேன் மன்னே. (உங)

உலப்புதிப்பி லாவுனடி யடைதலன்றிக்
கதிபிறிதொன் றுண்டே யென்று
பலத்துழல்வ தேபெருத்த வஞ்ஞான
மஞ்ஞானம் பரமார்த் தத்தைத்
தலத்திலுறை பசுக்கடாத் தளவாக
வருளவுருத் தானே காட்டு
நலக்கடவு ளேயெனது நவைதீர்க்க
வொகாரமதி னடியா யன்றே. (உச)

பரங்கடலென் றதன்குமிழி யொளிர்பசுவென்
றதுதகரப் படர்சீ ரொன்றாய்த்
திரம்படல்போன் முத்தியென்று விளம்பினவர்
கருத்தைநனி தெளியா ரெல்லாம்
புரந்தரனச் சுதன்பணியுன் பதஞ்சேரன்
முத்தியெனப் பொருள்கா ணுதிங்
கருந்துயர மடைதலன்றிப் பெறும்பயனென்
னறுங்கடம்பை யணிமா தேவே. (உரு)

பெரிதினுக்கெ லாம்பெரிய சிவனடிய
ருள்ளடக்கம் பெறுவா னென்னு
அரியவெளவை சொன்னபடி நின்னடிய
ருள்ளடக்க மாவா யன்னோர்
திருவடியை யடிமைமுடி பொருந்துமெனிற்
பிரமலிபி சிதைவா காதோ
சரவணசன் மயதுரிய வமலசிவ
னேகருணை தாராய் மன்னே. (உ௬)

தண்ணிருக்கும் பூங்கமல சுமனசமெல்
லாமுனிந்து தாவெதய் யென்று
விண்ணடிக்க மண்ணடிக்கக் கிங்கிணியு
நூபுரமு மேலே தாங்கிக்
கண்ணிருக்கு மெய்த்தவசர் முன்னடிக்கு
நின்சரணென் கருத்தாய் நிற்கப்
பண்ணியவென் னேன்மையென்கொல் குக்குடப்ப
தாகையுடைப் பரனே முன்னே. (உஎ)

இனித்தவலர் முடித்தசுர ரெவர்க்குமருட்
குருவெனவுற் றிருந்தா யன்றி
உனக்கொருவ ரிருக்கவிருந் திலையாத
லாலுனடி யுளமே கொண்ட

கனத்தவடி யவருடைய கழற்கமல
முள்ளுகினுங் கறைபோ மீண்டு
செனிப்பதுவு மரிப்பதுவு மொழிந்திடுமே
குறக்கொடியைச் சேர்ந்திட் டோனே. (உஅ)

சொலற்கரிய விழுப்பொருளென் றடிக்கடிசொல்
லாரணங்க டுதியே பண்ண
நிலைப்புடைய குருத்துவமு மருட்கடலு
மாரமுது நினைவோர் நெஞ்சஞ்
சலப்படவி டாதிருக்கை விளக்கறிவு
மாயிருக்குந் தனிவே லீசா
குலக்கடவு ளாயெனக்கன் றதிர்த்தபடி
யேயருள்செய் குணமாய் வந்தே. (உகூ)

தமருகத்தை மூவிலையை யெழிற்பிணையைப்
பிடித்ததிருச் சயமா தேவன்
அமர்கயிலைப் பதியெமக்குத் திருக்கோயி
லென்னினுமெம் மடியார் நெஞ்சே
எமதிருப்பென் றெஞ்ஞான்று மிருந்தெங்கு
மேநிறைந்த விறையே யிந்தக்
குமரகுரு தாசனைக்கை விட்டுவிடா
மற்காத்துக் கோடி யன்றே. (௩0)

கலியுகம் ௫கூகூ௪ - ல் நிகழ் நந்தனஞு
கார்த்திகைமீ உ௩வ குருவாரம்.

திருத்தோடையன் முற்றிற்று.

---

ஸ்ரீ விசாகப் பெருமாளுக்குரிய விரததினங்களிலும், மற்றைத் தினங்களிலும் இத் திருத்தோடையல் பாடும்போழ்து கவிக்கொரு கர்ப்பூரதீப மேற்றுக.

குமாரகுருபரன் திருவடிவாழ்க.

---

# கந்தரோலியலந்தாதி.

## காப்பு.

### நேரிசை வெண்பா.

உலகெலாம் போற்றிருமை யோங்கிறையா யன்பர்க்
கலகெலா நீத்தகண்ணிட் டாட்கொண்—டிலகும்
ஒருகந்த வேண்மே லொலியலந் தாதி
பரவநால் வாயன்காப் பாம்.

## நூல்.

பரிதிக்கே மூாலுயுமிப் பார்த்திவத்திற் கந்தப்
பரிதியொன் றுமன்னும் பண்பேய்ந்—தொருமுதலாய்ப்
பாசியைப் பாசப் பரிவை விளக்குமயில்
ஈசவின் பிட்டா ளேனே. (க)

எனேநீ யறிவிக்கா தேனு னறியத்
தினேயளவே னுந்தாங்கொல் சேயோய்—நுனேயே
அனுாதமு முன்னத் தழுத்திநின் றுலம்
மனேலயவின் பெய்தாதோ வந்து. (உ)

வந்திக்கும் பத்திமைமைக் கண்ணுன் வரவுண்டென்
றுந்திக் கடவுண்டா னேர்பாதிக்—கந்தநந்தி
சொற்றநொடி சத்தியமே சொற்றவணம் பற்றிடுவார்க்
கற்றமிங்கேன் சேயா வறை. (ங)

அறையோத்தி னந்தாமு மாகமத்தி னீறுந்
துறைநீத்த சிவபாத் தோய்வை—யறைதருமே
அன்றுகள மாயறையா வப்பயத்தை நின்கருணே
அன்றுறமுன் னேன்குமரே சா. (ச)

சாவயன மென்றிருமை சாற்று மறதிநினைப்
போவ வலிக்குந ருன்னையிகந்—தோவுமன
வன்மையா லெய்தவுன்னல் வார்நீலைத் தோய்ப்பவெழுந்
தன்மைபோ லாம்பொறிக்கந் தா. (ரு)

தாவின் *முகரிமைச் சாகரம்பொன் ஞாங்கரிருய்
மாவல் லகத்தேக வாள்விரும்பு—சீவர்
உறழ்வுக் குறழ்வா யுளநின்னைத் தான்விடுகை
உறழு மகிடத் துளே. (சு)

உள்ளும் புறனு மொருதெளிவா யோங்குகுக
வள்ளா லுனையயர்த்த மாழையினுன்—விள்ளல்
இகந்தபுன் னெஞ்சுடைமை யெற்கியற்கை யேனும்
புகழ்ந்தபயன் போங்கொல் புகல். (எ)

புகலுமென் போன்முயிர்க்குப் போதமரு ளாலோர்
† சிகலில் விருப்பியல்பு சிங்கா—விகல்வேலோய்
உன்றகைக் கீரமியல் புண்மையினுற் றேம்பொறுத்துன்
நன்றடிக்கீழ் வைத்தா ணயந்து. (அ)

நயங்கெழு வாக்கத்தி னம்பாவென் னுதா
தயங்காண் டலைச்சத்திச் சாமீ—முயங்குமணிக்
குன்றூர் குயமின்னூர் கூர்மால் பொலாதென்னு
நன்றூயென் கட்கண்டே னுன். (கூ)

நானீயா யாஞ்செவ்வி நானேது நீயேது
நானீ யெனற்குமோர் நாவேது—தேனீ
நுகரா வளிநுகர நுன்னபய மற்றூர்
பகர்வார் பலவேற் பரா. (கo)

---

* முகரிமை = பேரறிவு; பிங்கல நிகண்டு.

† சிகல் – சிறுகல்; சிங்கல் என்பதன் விகாரமெனினுமாம்.

### நேரிசை யகவற்பா.

பராசரன் மகார்க்குப் பரிந்துநீ மேனாள்
நிராதர சரத நீப்பறு நிலையைக்
கருணை கூர்ந்து கரக்குறி யைந்தான்
அருளிய மாண்பு திருவரு ளன்றோ
அத்தத்து வக்கழை யித்தகை மைத்தென
நித்தலுந் துய்த்தன ரத்திபோ னல்லார்
பாழ்த்த நெஞ்சினேன் சூழ்ச்சி விளிந்த
* மூழ்த்த குறுங்கதுப் பாட்டை யுழந்தத்
தீங்கழை நீத்துமே லோங்கிலை யுண்குபு
வீங்குறழ் வுடைந்துமா லோம்பிடு போக்குழித்
திரிதரா நின்றேன் குருபரா வென்றுன்
பரிபுரா லங்கிருத பதுமத்தா ளிணைக்கே
சரண்புகுந் தின்ஞான் றிறைஞ்செனைத் தழீஇ
முரண்படாத் தருக்கினைப் புரந்தருள் புரிதி
சூர்மக ளுவப்பச் சுபச்சீ
றார்மகண் மதர்ப்ப வுளசே யவனே. (கக)

### நிலைமண்டில வகவற்பா.

அவனி பாரக னாயினு மென்கொல்
உவணை மன்னா யுயரினு மென்கொல்
ஆசு மதுரம்வித் தாரஞ் சித்திரம்
மாசறத் தெரிக்கு மாக்கவி யாயினென்
ஒத்தொரு நான்குஞ் சாத்திர மாறும்
மூத்த தந்திர மூவே ழேழும்
ஏனைய வெவையுங் கெழுமுவோ னாயினென்
தான மிட்டி தவமுள னாயினென்

---

* மூழ்த்தல்=மொய்த்தல் ; சே - திவாகரம்.

தேர்ந்தவெண் சித்தி சார்ந்துள னாயினென்
கூர்ந்த வீரச் சேந்த வருள்கென்
றாழ்த்தி வாழ்த்தி யொடுங்கேக் கழுத்த
வாழ்க்கைப் பேறு வாய்த்தா னன்றி
அல்ல கண்ட மாமுதிப் புலப்புத்
தொல்லை யிறுங்கொ றாநறை யரத்தத்
தொங்கன் மொய்ம்பு துளங்கெந் தாயுன்
தங்கட் கருணை யணுகிலுய் குவலே. (கஉ)

## நேரிசை யகவற்பா.

குவளை யுறழ்கோச் சிவைகரக் கிள்ளாய்
துணியவி ரிமன்பாம் பணிமுத லைய
எட்டுத் திருட்டியற் குட்டிய கைய
நிமிர்மயி றிரிதரு மமரர் முதல்வ
செருநற் செற்ற வொருவிறப் பிறைவ
சேந்த குமர காந்த வெந்தாய்
நினக்கோர் தோற்றம் பினுற்ற புராணம்
நுவன்ற தேனுஞ் சிவன்ற னவாந்தர
சிட்டிக்கு முன்கிளர் சித்தத்து ணின்று
வந்த கதழ்வும் வாதுள மிழற்றும்
ஆதரொட் டடைமறை *தீவிளி யாமுன்
இயற்கை யேவ ரிசைக்கவல் லாரெவ்
வுயிர்க்குழு வுளத்து மொருசிவ னுளத்தும்
விழுமிய வொன்று முழுமுத லெனநீ
நின்றதா லன்றோ பொன்றாக் குகவபி
தான முற்ற தகைபிணைக் கற்றார்
தெள்ளிதிற் றேர்ந்துன் னுள்ள லந்தாள்
சேர்ந்த வழியே சேர்த றுணிபென்

* தீவிளி=காய். 'தீயளி' என்னுந் திவாகரம்.

றீண்டுச் சிறியேன் பூண்ட விரத்தி
காண்டி கருணைக் கடியீங்
தாண்டாண் மரீஇய வரிப்புக் கமித்தே. (கங)

## நிலைமண்டில வகவற்பா.

*கமிசை சரித்திடு திமிலமஞ் சென்ன
மாறின் றன்பர் மாட்டருள் வானே
மாழைக் கருளைப் போழ்வின் மணியே
கிரவுஞ்சப் பறம்பற் கீழெழஃ கிறையே
புராண விருக்குப் பிராமண மதினும்
மேத்திய வுருத்திர சூத்த மதினும்
ஏருடை யசுவி ஞரு ணத்தினும்
ஆரணப் பிருக தாரணி யத்தினுஞ்
சாமச் சாந்தோக் கியமோ ராறினும்
மெய்யா கமத்தினுஞ் சைவபுரா ணத்தினும்
மங்கல சூத சங்கிதை யதினும்
முகரிமை யன்றெண் முத்தியின் றென்று
வலியுறுத் திவலித் திடன்மா மாண்புச்
சான்றே யதற்கோர் சான்றாய் நுந்தைக்
கதிர்த்த தாரக வர்த்தமு முளதால்
அவ்வத ரன்றீண் டெவ்வத ரும்பற்
றேனுன் றகவா ளினியினி தாயிவ்
வெளியேற் கெளிவந் திட்டேய்ந் தருளே. (கச)

## இணைக்குற ளாகவற்பா.

அருட்பெருஞ் சோதிப் பெருக்கே தருக்கே
கருப்பைச் சுருக்கை யெருக்குபுட் கரமே
நானீ துறந்த நாப்பண் டலையே

* கம் = ஆகாயம்.

வானோர் குராங்கொள வேணா யகமே
தசும்பி யோனிக் கிசைந்த பதியே
விசும்பிபச் சிறுமியை வேட்டொரு முருகே
என்மனா ரின்னாச் சன்ம முறுவரோ
சின்மயச் செருக்க துறாதே
தமியேன் முனமுத் தமஞ்சால் வினைபுரீஇ
நிமிரிவ் வாக நேர்ந்த தெனினும்
அவ்வினை சடமே யெனையஃ தணுகற்
கெவ்வுறழ் வும்மிலை யதனா லிகலுன்
திருவருட் பரிவே மருவிட வாற்றுபு
புரந்த தியாண்டு நிரந்தர மென்னா
அயிர்ப்பற வோர்ந்தே னைய முற்றும்
மயக்கறு நயப்புழி
நிறீஇ மரீஇ நிகரறும்
அறிஞ னாக்கலுன் பொறிக்கணி யாமே. (கரு)

## நீலமண்டில வகவற்பா.

ஆமய மணவா வாமோத வோதம்
படிந்திடற் குள்கு பசுக்காள் கேண்மின்
சிதடன் கோற்றுணை யதுகொடு திரிதரல்
கடுப்பக் கருவி யடுத்துயு நீவிர்
கருவிக் கோல்பிடித் தருளொடு நடாத்தும்
வீர மிற்றென வோரி னலங்கிளர்
மெய்க்க ணிசைத்துப் பொய்க்கண் புதைத்தருள்
திருவருட் பகவன் பரிவொடு கிட்டிடும்
எனமே தாவிய ரிசைத்ததுண் டதாஅன்
றாட்சிசா வீச்சுர சாட்சாற் கார
மதனால் வீடென் றதர்வணத் துச்சியும்
மந்திர நெறியு மலையிலக் காகக்

கூறு மிவற்றைக் கூர்த்தநெஞ் சிலிகள்
கண்ணுறு தனுபவக் காட்சியொன் றற்று
நாம்பிர மமெனு மகம்பிரம நாவாற்
பயில்வெற் றுரையின் பயனென் மாட்டும்
உறவுழல் வேன்கொ லுன்கழற் றுணைக்காட்
பட்டு மிஙனே கட்டின் புருது
நிமல நித்த குமர குருபர
அமல பத்த ரமுதவா ரிதியே. (கசு)

## நேரிசை யகவற்பா.

வாரிதி வளைஇய மாக்கூ முகத்துந்
தாரில கிலேகர் தான முகத்தும்
பொருவற நின்ற பரமசற் குரவ
முருகுற நின்ற சரவணக் குமர
நின்மெய் யடியர்க் கம்மெய் விதிர்ப்பு
நிரைமயிர்ப் புளகஞ் செறிதரு வியர்ப்பு
களிகெழு பாட்ப மொழிநமு வியற்கை
கிளருள நடுக்கம் பொழியிளை கடுப்ப
உள்ளுட் குளறி யுயிர்நிலை புயங்கல்
உணர்த்தத் தன்றனை யுள்ளித்தீ விரமுறல்
எனுமெண் டிறனு நனிவந் தெழுபோழ்
தீடின் முதுக்குறை விசைத்தே யருளுன்
பெருந்தக விணையிப் பேயேன்
பொருந்துவா னீண்டுப் போற்றுமா றென்னே. (கஎ)

## நிலைமண்டில வகவற்பா.

என்னுயிர்க் குயிரா மன்னிய தோன்றல்
இன்னமிழ் திழுதை யேய்ப்ப வெளியேற்
கருளிய வோர்கி ரதர்மறந் தழுங்கென்

மருளுள மோவீண் டுருகமு முலப்புங்
கெழுமிடு சகல கேவல நீப்பின்
முழுமுத லாமுனக் களியூ ணுத்தனை
ஆக்கம யத்துமுன் யோக்கிய மாக
நோக்கிய விடய மயோக்கிய மென்னத்
தோன்றலி னுற்றிரை தோன்று நீர்மையும்
ஊன்று *மவ்வியாண் டேங்கிரு வினைச்சமன்
உறலா னவற்றை யொள்வயிந் தவத்தினின்
றிறைபிரே ரித்திடைந் தொழிலோ டிசைத்துள
வயிர்தவ மலமும் நீங்கிடு நீர்மையுங்
குயின்றவவ் வினைகளின் பயன்றர லருளெனுச்
சுட்டற வவ்வருட் கட்புதைந் தப்பயன்
சுத்த வருளாற் றுய்த்தலி னுலாங்
குரிய கன்ம மொருவு நீர்மையும்
அரியவவ் வேலை யாம்பரை யோகத்
தாக்கைநா னன்றென் றகறிறந் தன்னால்
ஒக்கிய மாயை யொடுங்கு நீர்மையும்
அக்க ணனந் தானு பூதி
மிக்குறப் புன்மைத் தற்போ தந்துவன்
றிடுதலி னுன்முனத் தெழுவிப ரீதமும்
வடுவுடை யாணவ மலமுமாய் நீர்மையும்
ஒரு முனுற்று முறுபே றுறுமெஞ்
சீரயி விறைவ செய்தருள் கெனுதே. (கஅ)

**நேரிசை யகவற்பா.**

ஏனுது தரத்தைநன் கெண்ணி யாய்கால்
தனுதுள் விரைஇத் தளையா ணவக்கருட்
கண்மின் மினிபோற் காணு நின்றேன்

---

*அவ்வியாண்டு=அக்காலம். யாண்டு=காலம்; திவாகரம்.

எண்மையம் மின்மினிக் கிராசியத் தொடுமினல்
ஆ*மற னினைப்பு மாணவ திமிரமும்
போம்வண ஞானவெய் யோனெழு குறிப்பை
விளக்குவா னுன்றுகின் மிளிர்சே வாரணங்
களிப்பொடு கூவக் கண்டகங் கடிதர
அங்கம்பூ ரிக்க வனுக்கிரகம் புரிதியேல்
இங்கடர் கருவி யெனுமுற விமூசி
அரிக்குநாங் கூழா யிருக்கு மெளியேன்
கரப்பிகந் துன்னுட் கலந்துயு மாக்க
அசிபத மோக்க மடைகுவல்
கசிவுகூர்ந் தருளுதி கருணைப் பிரானே. (கசு)

## நிலைமண்டில வகவற்பா.

பிரானே விபுதர் பிரானே முனிவர்
பிரானே யறிஞர் பிரானே யென்றும்
இருனே யின்ன லுருனே யேசின்
† ஞருவெனும் புண்மீ நடாவெம் மானே
இருதலைக் காம மொருதலைக் காமம்
எனுமுக ளத்தே முனைய தேற்றம்
அஃதுரு தேனு மஃகிய கைக்கிளை
வெஃகலை யேனும் வேட்டன் முறையே
அன்னணம் விடயா னந்த மகற்றி
மன்னு சொரூபா னந்த முறுவான்
ஒத்த சுத்தா வத்தையி னிற்பார்
அத்தைப் புணரா ராயினு மதனை
விழைந்து பற்றல் வியநிலை யீதே
விழுப்ப விரத்தி யென்மனர் மிக்கோர்
இத்தை யேனு மெண்ணுளேன் சிவனு

* மறல் நினைப்பு = பிணக்குறு நினைப்பு.
† ஞருவெனும் புள் = ஞருவென அகவும் மயில்.

திழிந்தவி வேனே மொழிந்ததும் வறிதோ
தஞ்சமென் பார்பா லஞ்சுவா நீதி
தானுண் டுகொலோ தண்ணார் தண்ணளி
இஞ்ஞான் றுறுமே லெஞ்ஞான் று முய்வேன்
௨௦. அஞ்ஞான் றதிர்த்த வறைநிறை வேற்றே. (௨௦)

கட்டளைக்கலித்துறை

வேற்றுரு நாமப்பஃ றேற்றமெல் லாமனம் வீவுறிற்பின்
தோற்றுங்கொலோ விந்தச் சூதினை யோர்ந்திவண் சொற்றிடுமிம்
மாற்றம்வென் றூற்று மதுகை யெவைக்கு மதுகையெனின்
ஆற்றலு ளார்கட்கன் றேகிட்டு மாரயி லாண்டகையே. (௨௧)

ஆண்டகண் டெனதெங்கு மாயவிர் கேவல மண்ணுமுன்னன்
வேண்டுறு மாறு புவியாதி நாத *மிதமுணர்ந்து
தாண்டிடு சார்வரு மாணவத் தோடுதற் போதத்தையும்
மாண்டிட வாற்றுவை யென்முரு காவென்கண் வைகுவனே.

வைகரி யாதிய வாக்கிறந் தாற்போ தமன்னுநிலை
கைவரக் காணும்பின் கண்டது மாயிற் கனத்தவருட்
டுய்ய தரிசன மாமெனத் தேர்ந்த துகளற்றவர்
கைதொழு கந்த பிரானே யெனையுங் கருதிக்கொளே. (௨௩)

கருதந்த நல்லருட் காட்சியுந் தீர்ந்த கடைமுன்னரே
உரைதந்த போதமெண் ணந்தர மேனு மூலவொழிந்த
பரையென்ற யோகம தென்றுணர் வேறும் பவுள்சுடையார்
குருவென்று வந்திக்குஞ் சூர்ப்பகை ஞானெனக்கொண்டருளே.

கொண்ட பரையோ கினையுந் தணந்தவொர் கொள்கைவ்யிற்
கண்ட சுகப்பரை போக மதனைக் கடந்தகளன்
வண்டில்சு காதித வீடென வோர்ந்த மதியுலகந்
தண்ட னிடுங்கும ரேசவெற் கோங்குரன் றந்தருளே. (௨௫)

* மிதம் = அளவு; வடசொல்.

தந்தகூ கக்கண் கடக்களிற் றின்கரந் தந்திரஞ்சால்
இந்தி விலோசனம் போன்றுயிர் முத்தரு மென்மறைந்த
அந்திமே னேக்காக் கரும்பிள்ளை போற்பர மானந்தரும்
நந்தறீர்ந் துற்ற நிலைநின் றயாவள்ளி நாயகமே. (உசு)

நாயக நீயென்று நானென்று நீத்த நடுநிலையாம்
ஞேயத்திற் றேயத் துடனெழுந் தான்றவர் நிற்குநிலை
* வாயவே ரிக்கரை மாதிர மேறியை மானுமதைத்
தாயைய ளுமுனை யன்றியோ வேற்பலென் சண்முகனே.

சண்முக மாகியச் சண்முகக் கூறுந் தனுளடக்கி
அண்மைசே யின்றகண் டானந்த மாநிற்கு மாற்றலைநல்
உண்மையென் றேத்தந்த மோதின பேரு முவர்ப்பறவே
எண்மையின் றுன்னியும் போதஞ் சிகாமையி னெய்திலரே.

எய்யாமை கீறி யிருமிறு மாப்பினை யெய்துதற்குன்
பொய்யா வருட்டிறம் பெற்றது மின்றிப் புகன்றதுபோல்
மெய்யாக முற்றும் பெறுதது மின்றி வெதும்பெணுளேன்
துய்யோர் நலம்பெறச் சூழ்முரு கோனெனுந் தூயவனே.

தூயவெங் கோனன லாசலப் பேர்வள்ள ரேத்திரத்து
நாயக வெற்குக் குமர குருதாச நாமமொன்றிங்
கேயில கும்வணம் பாலித்த தண்ணளி யெம்பெருமான்
ஏயெனைச் சூழச் செயாயிரு ளீர்க்கும் பரிதியையே. (௩0)

ஸ்ரீமத் - சுவாமிகள் சிதம்பர மஹாக்ஷேத்திர
வெல்லைப்பாட்டிலுள்ள குயவன்பேட்டையில்
வதிந்தஞான் றருளிச்செய்த
கந்தரோலியலந்தாதி முற்றிற்று.

---

கலியுகம் சகூகூஅ - ல் நிகழ் ஐப்பசிமாதத்துக் கந்தசஷ்டி.
குமாரகுருபரான் றிருவடி வாழ்க.

---

* வயம் ' வாயம் ' என நீண்டது. வயம் = நீர்.

# குகப்பிரமவருட்பத்து.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடியொன்றற் கைம்பத்திரண் டக்கரம்.

கருவிளம், கருவிளம், கருவிளம், கருவிளம்,
கருவிளம், கருவிளங்கனி.

தனதன தனதன தனதன தனதன
தனதன தனதனதன.

சொலாலுயர் மகாமறை சொலாமய மிலாவொரு
சுபாலய விபூதிவிமலா
தொலாதிப கவானரு ளுதாரகு மராவதி
சுகேசுரி கணனமுருகா
வலாரிம களார்வல குலாம்விபி னர்காதலி
மனோரத மணளகுழகா
வசீகர துவாதச விலோசன குகாவரி
* மதூகமொய் † கரோடிமுடியா
கலாபிமி சையேறிவி ளையாடெழி லுலாசஜ
கநாதக ருணலயமன
கஜாநந சகோதர வபேதசு குணகர
கணளணே கமோடுயர்வினோர்

---

* மதூகம்=அழகு ; பிங்கல நிகண்டு.

† கரோடிமுடி=சிரசிற் சூட்டு மகுடம் ; கரோடி=சிரசின் அஸ்தி ; நிகண்டு - அமரஸிம்ஹம் காண்க. ஆகுபெயராய்ச் சிரசிற்காயிற்று. இங்ஙனம், கரோடியைத் தலையலங்காரமெனக் கொண்டு அதனைத் தரித்துள்ள சென்னி முருகன் "கரோடிமுடியா" என விளிக்கப்பட்டனனென்று கூறலுமாம்.

எலாருமரு ளாளவ யிலாளவ ழியாதக
யிலாயகு கனேயருளெனு
எநாளுமடி மீதுமுடி தாழ்கதழ் வுளாயிடை
யிலாதெனை யளாவியருளே. (க)

பணுமுக வராவணி பொனுரித ழியாரணி
பலாகவி றையாமைநிணமீன்
பருவிழி களேபரம் விடாணமு டிமாலிகை
பலாசுறு துரோணமலர்மா
கணனம ணிநீறணி யுமாபதி முனேநல
கணுள்கண வனேரவரிதாங்
கலாநிதி யதாமரி யவோமிதெ னவோதிய
கலாவல சதாரியசதா
அணுமலை யுணுமலை தனுதும தலாயெனு
ளனுரத முலாவுமமலா
அபேதநி லைசேரறி வுளாரெவ ருமாவலொ
டணுவரு ளணுவருளெனுத்
தணரலர் தமாலமி டுதூவடி யுளாயொரு
சமானர கிதாவயின்மனு
சடானன குகாவெனை விடாதவ ஞரீதுரி
தமோடவு ளளாவியருளே. (உ)

சராசர மெலாம்வனை பிரானுன துதேசவிர்
தனேரயி லெனுலுளதெனுத்
தகாதம றைகூறவி னிநீயக றாதல
மதேகுதி யெனுவறையுமா
றிராதய னமாதியொ ருமூவகை யுநேமியி
விலாதொழி யவேகியவநாள்
இருவுன தனுதிய ருளேணிலுய் சராசர
மெலாமம ரவாணேபுரிமா

பராபர கராசல வுவாவுரி தராவணி
பராசன புராரிகுமரா
பராசரன் மகார்பணி பிராமண புராதன
பராமல முராரிமருகா
நிராகுல நிராமய நிராதர நிராசன
நிரூபவெ ணையாள்குருபரா
நிசாசரர் நிசாரண புராணப ரிபூரண
நிலாவிட வளாவியருளே. (௩)

தடாமுடி யொராயிர நிலாவரி முகாதியர்
சடாரிபொ டியாகவரிமா
சமாலம சைதோகைகு டைதாலம ணியோடைக
டடாரிக ளெலாமிரியவே
கடாமுக படாமுடை மதாவள மணிகமெய்
கபாலம கடாகமிறவே
கதாயுதம் விலாழிச ரமேதியெ றிவேறடி
கடாவசி குடாரமதர்போல்
எடாவணம் விநாசமு றவேபணி யனேகரை
யிடாகினி பிடாரிபலபேய்
இராகமொ டெபாடலு டனுடியு ணவாசுர
விராயனு யிரேகவனைவேல்
கடாவிய நிடுதன சடானன விடாவினை
களோடவ டியார்பரவுமா
கடாவிடை யிலேயெழு திடாமல துவாதச
கணுவெனை யளாவியருளே. (௪)

விமானவ ரராமய மிலாவடி கடானவர்
*விணோர்பகை ஞராதிமறையோர்
விரோதமி விராசர றவாணிகர் கடாசியர்
விவேகம துளாரெவருமே

* விண்ணோர்பகைஞர் = இராக்கதர்.

அமாவரு ளமாவரு ளெனுநுவ லுநாவுட
னனுரதம் வழாதுதொழுமா
அமானவி மயாசல குமாரிகு மராசிவ
னனுதிவ டிவானமுருகா
குமாரகு ருதாசனே யெநாளும கலாதசு
குணாலய விலாசவெளியே
குருபச விகாரம லமேதும ணவாதவெ
குசோபித வதீதவொளியே
சமானம திலாமது ரவாரியெ னவேநிறை
சதாசிவ மதானதனியே
தகாதநெ றிநாடியு ழலாதுற திசேர்பரி
சதாயெனு ளளாவியருளே. (ரு)

தனந்தன தனந்தன தனந்தன தனந்தன
தனந்தன தனந்தன தனு.

கணம்பல நெருங்கிமு ழவந்திரி கைபம்பைப
டகந்துடி பெரும்பறைமுழா
கரங்குணில் கொடந்தமொ டறைந்திட வழன்சுடு
களன்பெரு நடம்புரிபிரான்
வணங்கிட நிரந்தர வுரன்சொலி யபுங்கவ
வரன்றெழில் கவர்ந்தவிறலோய்
மறம்பல வயர்ந்திடி னுமன்பரை யுவந்துள
மலங்கெட விளங்குபெரியோய்
பணம்பண மெனுங்கொடி யவன்பிணி யடைந்தனர்
படுந்தொழி லினுந்தொடர்வனே
பதம்பத மெனும்பெரு மிதந்தின மடைந்தருள்
பதிந்தெனை யறிந்தவிர்வனே
அணங்குடை மடந்தைம யனஞ்சென விகழ்ந்தெனை
யடைந்துனை யடைந்திடுவனே
அணங்குழை யுயங்கியு ழனெஞ்சுள னறிந்தில
னணைந்தெனு ணிரம்பியருளே. (சு)

தனத்தன தனத்தன தனத்தன தனத்தன
தனத்தன தனத்தனதரு.

பருப்பொடு புழுக்கறு வைபச்சடி பொரிக்கறி
பழக்குவை யுழுத்துவடைபால்
பரப்படை முறுக்கதி ரசச்சுவை யிலட்டிடி
படைத்தெனு வருக்குமெளிதாய்
விருப்புறு வரத்தைய ருளற்புத வருட்குக
விளர்த்தக மலத்தவிசிலார்
விதிப்பிரி யைபொற்றிரு மடக்கொடி சவிச்சசி
விழுப்ப*வ லவர்க்குறுகணே
பெருத்திட வமைத்தெதி ரியற்றர சிழைத்திடு
பிணக்குள னணிக்குழுவிலே
†பிறப்பில லகுக்குலம் விடுத்திரு கரப்பிடி
பிடித்தறை கொடுத்துதிரவார்ச்
செருக்கள நடுக்குற வுதைத்துவ ணமற்பமொய்
சிவைக்குல முவப்பொடுணுவான்
திடக்குடர் வெடுக்கென விழுத்திட வதைத்தவர்
திறத்தலை வவெற்குமருளே. (எ)

தனதன தனத்தன தனதன தனத்தன
தனதன தனத்தனதன.

புதாவெரு கையொத்துள வகாதரு மறச்செயல்
பொலாதென வழுத்தியலவோ
புராடம திழைப்பர தனுவிகன் மறத்ததர்
புகாநிலை மையுத்தமமெனுச்
சதாவதி னடப்பவ ரெலாருமரு ளூற்றனர்
தகாதசெ யலுற்றதமியேன்
தனாரு ளைநச்சிய தெனுதுசெ யலைக்கவர்
சமாதியி னிறுத்துமருளார்

---

* வலவர் - வல்லபர் என்பதன் விகாரம்; = எண்ணத்திற் கினியவர். † பிறப்பு = அச்சம்; பி - நிகண்டு.

பிதாவுடை யருட்டிற மதாமென மதிக்கவொர்
பிரீதியை யெனக்குதவினேய்
பிராமண ரெமக்கருள் செயாயென வழுத்திடு
பிரானென விருக்குமுதல்வா
உதாரவ டியர்க்கெம னதோகதி யிடுக்கண
துறுதருள் புரக்குமுருகா
உரோகமில் வெறுக்கையி னேயெயரு ளிநித்தனு
முனேடெனே யிருக்கவருளே. (அ)

தனதன தனந்தன தனதன தனந்தன
தனதன தனந்தனதன.

மயானசி வசம்புறை சிவாலயம் விளங்கிட
வழாதசை வமிஞ்சியெழவே
மகாமரு ளடைந்தச மணுள்வினை குலைந்திட
மனேலய முகந்தவடியார்
பொயாநெறி விளம்பிடு திராவிட வருங்கலை
பொனுடுபு வியெங்குமிகவே
பொருமைமு னேவஞ்சனே யெலாமிரி யவந்தவொர்
புனீதம விசண்பைமுனியே
*வியாமமில் சுயம்பர மதேஜசு பொலிந்தொளிர்
வியோமமெ னநின்றபொருளே
விலாசச வையென்றசி வ†ஞானவெ ளிமன்றுளி
வினேதந டனம்புரிகுகா
‡கியாதமி விளம்பிடி வயாவற நலங்கிளர்
கியாதிவெ றிகொண்டெனகமே

* வ்யாமம் என்னும் வடசொல் 'வியாமம்' என விகாரப்பட்டது. வ்யாமம்=புகை.

† இந்த ஞானவெளியினுண்மை, இந்நூலாசிரிய ரருளிச்செய்த தகராலயரகசியத்திலும் அதனுரையிலும் இனிது விளங்கும்.

‡ கியாதம் - க்யாதமென்னும் வடசொல்லின் விகாரம்; விளக்கம் என்பது பொருள்.

கெழீஇவ ழியின்பிர தமேநுக ரவன்பரு
கிடாவரு டெலங்கவருளே. (௯)

தனதன தனதன தனதன தனதன
தனதன தனனதனன.

திருமுறை சொலாதவன் மறைமொழி கலாதவன்
சிவனெறி நிலாதசிதடன்
செலல்வர வெணாதவன் கொலைவினை விடாதவன்
றினுமுடை மறாதபுலைஞன்
குருவடி தொழாதவன் பெறுமொழி பெறாதவன்
குணநல னிலாதவறிஞன்
குகநம வெணாதவன் றறவற முறாதவன்
குடிவெறி யறாதமுருடன்
முருகனு மயேசனு மொருபொரு ளெனாதவன்
முசுமன னையாதவிரதன்
முடிவுடை மகாபதம் பெறுவதி லையாகலின்
மொழிகறை நணுமலருடந்
தருளுமரு ணாசலந் தனிலதனை நாமமொன்
றழகொடு நிலாவநினதன்
படிமல ரையேயுளம் பணினவனை யா*வணங்
கரையவெ னுளாடியருளே. (௧௦)

**ஸ்ரீமத் - சுவாமிகள்** குயவன்பேட்டையில்
வதிந்தஞான் றருளிச்செய்த

## குகப்பிரமவருட்பத்து முற்றிற்று.

---

கலியுகம் ௫௯௯௮-ல் நிகழ் கார்த்திகை மாதத்துக் கார்த்திகை.

குமாரகுருபரன் றிருவடிவாழ்க.

---

* அணங்கரைய = தெய்வங்களுக்கரசனே !

# ஞானவாக்கியம்.

## காப்பு.

### குறள்வெண்செந்துறை.

ஞான வாக்கிய நாதன் குமாரன்
கானளி னங்கள் கருதித் தொழுவாம்.

## நூல்.

அறிவுக் கறிவே யிறைசற் சொரூபம். க
ஆனந் தப்பொரு டானந் தப்பரன். உ
இறப்பொடு பிறப்பறு சிறப்புள னவனே. ௩
ஈன்றோ ரெவரையு மீன்றோ னிறையே. ௪
உதிப்பன தந்தளித் தொடுக்குவ திறையருள். ரு
ஊறறு முத்தொழின் மாறுயிர் பொருட்டே. சு
எழுவகைத் தோற்றமு மழிதனிச் சயமே. எ
ஏறுகன் மங்களே காறறு பிறவி. அ
ஐம்புல நுகர்ச்சியிற் பம்புமக் கன்மம். கூ
ஒட்டிரு வினைச்சமங் கட்டவிழ் பருவம். க0
ஓதலு முணர்தலும் வேதாக மாந்தம். கக
ஔடத சித்தி விவச நெறிக்கில். கஉ
அஃக லிலாதார் தர்க்க மிடாரே. க௩
கருளும் பகலு மருணிலை யில்லை. க௪
நகரம் போல்வார் புகரில் குரவர். கரு

சடநிழல் போல்வா ரிடர்தபு சீடர். ௧௬
ஞண்டுச் சூல்போ லொண்டொடி விழைவு. ௧௭
இடம்பொரு ளேவற் றிடம்பர நிலையில். ௧௮
இணக்கிக் கொண்டாற் பிணக்கொன் றுமிலை. ௧௯
தலமுந் தீர்த்தமு மலமடு நிலையே. ௨0
நற்கா லந்தான் மெய்த்தே நினைநிலை. ௨௧
பத்திமை யர்க்கும் முத்தி கிடைக்கும். ௨௨
மந்திர மெந்திர மந்தா நெறிக்கில். ௨௩
* யமிநெறி வேட்போர் நிமிர்பிழை யீட்டார். ௨௪
இரப்பரு ணிலையின் முரட்பவ மொழியும். ௨௫
இலம்பா டுறினுங் கலங்கார் விவேகர். ௨௬
வயங்கரு ளுள்ளா ரியங்குயிர் கொல்லார். ௨௭
அழகணி விருப்ப மிழிவிறந் தார்க்கில். ௨௮
இளமை விவேகிபின் றளர்வறும் யோகியே. ௨௯
அறங்க ளிரண்டுந் திறம்பா தார்க்கே. ௩0
அனந்தல் குறைந்தான் மனஞ்செலு மேலே. ௩௧
கண்டப் பொருளறி கண்டுப் பிலதே. ௩௨
காணாப் பொருளைக் காண்கண் மெய்க்கண். ௩௩
கிரியையுஞ் சரியையுந் திரிதரல் கெடுமுன். ௩௪
கீழ்மையின் ஞானந் தாழ்வி லருளே. ௩௫
குருவரு ளின்றி யருள்வர வின்றே. ௩௬
கூட்ட நீங்கல் வாட்டமி னெறியே. ௩௭
கெடுதி யாவது வடிவுடை யிச்சை. ௩௮

---

* யமிநெறி = முனிவர்மார்க்கம். யமி = முனிவன் ; வடசொல்.

கேவல நெறியே பாவ மிலாநெறி. ௩௯
கையரு மறியின் மெய்ந்நிலை யேய்வர். ௪0
கொல்லுவர் வல்லார் குரோதா திகளை. ௪௧
கோட்டை யாவது மாட்சிமை மோனம். ௪௨
சகமே மறையு மகமுக மழுந்தின். ௪௩
சாதிபே தத்தனை மாதுற வுக்கிலை. ௪௪
சித்தி விரும்பார் முத்தி வரம்போர். ௪௫
சீவ னுடல்போற் றேவனு முயிரும். ௪௬
சுகவழி பாடு பகிர்முக மன்று. ௪௭
சூக்கத் தினுமதி சூக்க மறிவு. ௪௮
செயற்கை தணந்தோ ரியற்கை யறிவார். ௪௯
சேய்பெண்டு சுற்ற மாய்கின்ற மட்டும். ௫0
சையென விகழ்வார் மெய்ய ருலகை. ௫௧
சொப்பனம் போலா மிப்புவி யாக்கம். ௫௨
சோர்வு படாதரு ளார்சிவ வாக்கம். ௫௩
* ஞலவல் போலு மலவுயிர் நீர்மை. ௫௪
ஞாயிறு போல்வார் நோயறு மறிஞர். ௫௫
ஞிமிரொலி யந்தஞ் சமநிலை யின்றே. ௫௬
ஞெகிழ்தன் மயங்க லகல முயல்க. ௫௭
ஞேயத் தகப்படு மாய்வற்ற புத்தேள். ௫௮
ஞொள்கல் வெருளலின் றுள்குக நடுவே. ௫௯
தன்னை யறித றவத்திற் றவமே. கூ0

* ஞலவல் = மின்மினிப்பூச்சி.

தாரக னறிதல் சூரா று சுகமே. சுக
திரிபுடி யிகந்தோ ரிருதிறம் பிரியார். சுஉ
தீரா வழக்கே பாரா தளவும். சுங
துறவு நடையுங் கறையாம் பொய்யில். சுச
தூங்கி யெழல்போற் றுஞ்சலு முதிப்பும். சுரு
தெய்வ விவேக மெய்யறி வார்கண். சுசு
தேடார்க் கில்லை வாடாத் தெய்வம். சுஎ
தைவகர் மத்தி னெய்திழி வில்லை. சுஅ
தொண்டர் பணியருளும் விண்டலம் வாழ்வார். சுகூ
தோழன் மகன்போல் வாழ்தலு நலனே. எ0
நஞ்செனப் படுவது வஞ்சக நெஞ்சம். எக
நாதர் தரிசனம் பாதக நாசம். எஉ
நிறைவறி வாவது மறைவறக் காண்டல். எங
நீக்கம் புகலார் சூக்க முணர்ந்தோர். எச
நுகர்வன கண்டு நுகர்க பசித்தால். எரு
நூன்முறை யறியாப் பான்மை யிழுக்காம். எசு
நெருப்பைப் போலக் கருத்தனை நினைக. எஎ
நேய வந்தனந் தூய வசியம். எஅ
நைதலு மகிழ்தலும் வைய விகாரம். எகூ
நொசிவறு வாழ்க்கை கசிவுடை யார்க்கே. அ0
நோக்க நிலைக்கிற் பூக்கொய் வினையேன். அக
பருவந் தெரிந்து பகர்பிற ருக்கே. அஉ
பாடிப் பழிச்சல் கேடற் றவன்பே. அங

பிழையிலர் நல்கு கழிவு மமுதாம். ௮௪
பீடை தருமே மூட ருறவு. ௮௫
புயல்போன் மறைக்கினும் வெயிலவன் போனில். ௮௬
பூரண மாம்வரை தாரணை நீங்கேல். ௮௭
பெருஞ்சுவை யூணின் றருந்துக சிறுக. ௮௮
பேசா நாட்கள் பிறவா நாட்கள். ௮௯
பைம்பொன் னுலகா மம்பர மருளாம். ௯௦
பொன்மண் ணாசை மண்மண் ணாகும். ௯௧
போக்கும் வரவும் மோக்கத் திலில. ௯௨
மதிவலி பிறங்கின் விதிவலி யடங்கும். ௯௩
மாளு முன்னுனை யாள்பொரு ளறிதி. ௯௪
மிடியோ ராவா ரடிபணி யாதார். ௯௫
மீட்சி காணிற் காட்சி யறமுயல். ௯௬
முன்வினை யொழிவிற் றன்னிலை தெரியும். ௯௭
மூலமும் விருத்தியு ஞாலமண் குடம்போல். ௯௮
மெய்ப்பொரு ணேயங் கைக்கனி யாகும். ௯௯
மேலாம் வீடு காலா தீதம். ௧௦௦
மையிருள் போலச் செய்கறை தன்னுள். ௧௦௧
மொட்டையுஞ் சடையுங் கட்டா யமிலை. ௧௦௨
மோக்க மென்ப தாக்கை யறுதல். ௧௦௩
வரையறை நீப்பே புரையறு மாதனம். ௧௦௪
வானம் போலத் தியானஞ் செய்யே. ௧௦௫
வினையெது புரியினு மனகனை மறவேல். ௧௦௬

*வீரை யறப்புக ழாரியன் போளில். க0எ

வெல்லுக வெளியிற் செல்லு மனத்தை. க0அ

வேட்கையும் வெறுப்பு நீக்குதல் சுத்தம். க0கூ

வைவச் சுதன்றெழின் மெய்யடி யார்க்கில். ககO

---

ஸூக்ஷ்ம ஸ்தூலரஹித குணவர்ணரஹித அவாமந அதீர்க்க அஜநந அவிநாச ஸச்சிதாநந்த வஸ்துவாயுள்ள குஹப்ரஹ்மத்தினது திருவருட் டூண்டுதலானே பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அதியிளமைப் பருவத்திற் றானே குஹேசனை நாம் பாடித் துதிக்கவேண்டுமென நினைத்தவளவிலே தம்மையறியாமற் றமது வாக்கில், 'கங் கையைச் சடையிற் பரித்து' எனவெழுந்த மங்கலமொழித் தொடரைத் தொடக்கமாகக் கொண்டுளதும், குமரகுருதாச சுவாமிகள் பாடலில் தெய்வ வணக்கத்திற்குப் பின்னர் வைக்கப்பட்டுளதுமான "அமரர்கோ" என்னுந் திருப் பதிகம் பாடியருளியபின் அறிவு நெறிக்குரிய பல சாத்திரங் களையுந் தோத்திர சாத்திரங்களையும் உலோகோபகாரமாக விரிவிலருளிச்செய்த சுவாமிகள் அங்ஙனம், பெரிதுஞ் சுருங்கிநின்று பெரும்பொரு டருமாறு பொதுமையிலருளிச் செய்த.—

ஞானவாக்கிய முற்றிற்று.

குமரகுருபரன் திருவடிவாழ்க.

---

* வீரை = துயர்; பிங்கல நிகண்டு.

82:417
N30

ஸ்ரீகாஞ்சிப்பதியைச்சார்ந்த ஐயன்பேட்டைக்

# கந்தகோட்டமும்மணிக்கோவை.

---

## நேரிசை யகவற்பா.

திருவடி யீயெனப் பெரியநின் னடிபேண்
ஒருபிடி யுடையா ருஞற்று கிரியை
முற்றுப் பெறுவான் முன்னவற் பணியும்
நற்றொழி றன்னையு மற்றமி லுற்கே
செலுத்திடு பூதியர் சென்னெறி யெற்கும்
நிலத்து ரித்தெனு நின்கழ லேத்துபு
குரங்கிடு தொழும்பர் கொன்னடி குரங்குபு
தரங்கெழு தோனயம் பொருணயஞ் சற்றும்
இலாவிழி கூற்றுளே னென்னினு நன்னர்
உலாநின் கடைக்கட் கருணை யுதவியுற்
றதிர்ப்பதென் னென்னின் மதித்தவர் வதியும்
பதிக்கெலா ஞெள்ளலா மதிக்குமா கவின்கிளர்
தண்டக மென்னுந் தொண்டை நாட்டில்
அண்டர் பிரான்மைக் கண்டன் மரீஇய
கச்சிமூ தூரைப் பச்சிமத் துடைத்தாய்
மச்சமார் வேக வதியெனும் யாற்றைத்
தக்கிணத் துடைத்தாய்த் தலைப்பளாம் பாணி
எக்கணுங் கமழு மெழிற்பூஞ் சோலை
சுரும்பறை மரைவிரி தூநீர் வாவி
அரம்பைக ளுளு மருங்கனி யுதுக்கும்

85899

வளம்பல வுடைத்தாய் *மறையவர் மன்னவர்
களம்புகா வணிகர் கடைவரு ணத்தவர்
எவரு நனியுய்ந் திரும்பே றடைவான்
தேவர் நிலையினுஞ் சீர்மிக் குடைத்தாய்ப்
உரு. பொய்யன் பில்லா மெய்யன் புள்ளார்
உய்யின் போங்கு மையன் பேட்டையில்
எந்தநாட் டவருமே வந்துதரி சித்துறை
கந்தகோட் டமெனுநா மந்தரித் துள திருப்
பதியம ரறுமுகப் பரமவுற் கெனையுநான்
நூ௦. கதிபெற வேட்டுக் கையடை செய்துளேன்
கொன்னே தளரா வணங்கொளல்
நின்னே ரீர நிறைவுக் கியைபே. (க)

நேரிசை வெண்பா.

இயைந்தவற் பில்லார்க்குன் னேதிலற்பு மில்கால்
பயந்தபு மாறுமில்லை பட்டாங்—குயர்ந்தவற்புன்
சொந்தவீட் டைப்பகுக்குந் தூய்மதியை நல்குமுது
கந்த்கோட் டத்துறைதுங் கா. (உ)

கட்டளைக்கலித்துறை.

காகா வெனவாயு ளெல்லையு நின்னைக் கருத்திருத்திச்
சாகா நிலையகஞ் சாகாது செத்துத் தனியிருக்கும்
யோகா கரப்பே றுடையார் விரும்பா வுவர்த்தலுழைப்
போகா தெனைப்புரந் தாள்கந்த கோட்டத்துப் புண்ணியனே.

நிலைமண்டில வகவற்பா.

புண்ணியக் கேளவர் நண்ணிடு கந்த
கோட்டக் குமர வேட்புற் றவர்பால்

---

* மறையவர் முதலிய வருணங்கள், தொழிலாற் கொள்ளப் படுவன.

தேனினு மினித்துத் *தெவுண்மதர்த் தேனே
வானினும் விரிந்து மலர்பெரு வானே
ஒளியெலா முண்டோங் கொருபர வொளியே
காசினி புரக்கினு மாசினி புரக்கினும்
அஞ்ஞான ரூப வணுதி மலப்புரி
ஒழியார்க் கோர்சுக முண்டுகொ லுண்டுகொல்
என்றுணர் வலியிலாப் புன்றெளி வதமர்தாம்
யாடு மாடு வீடு துடவை
ஆடை யலங்கல் பூடணந் தேம்பை
கணைய மூதியம் பணைய மூர்தி
விருது சிலத ருரியநட் பாளர்
அறுசுவை யுண்டி நறுமணங் கலவி
மகப்பே றகலிட மதிக்கு மிடம்பம்
முதல யாவு மவாவி முன்னினும்
அன்னண மருள்வை யறைந்த வனைத்தும்
விரும்பா தவயவி வீழ்ந்த பின்னர்
வன்னமன் றண்டம் வராது காத்தி
எனவழி பாடயர் மத்திம ரெண்ணமும்
ஆய்ந்தன் னணமு மருளுவை யாதும்
விழையா தழுவன் மீக்கொண் டென்றும்
நெஞ்சா லுரையா னெட்டை யுடலால்
வழிபடு முத்தம ரிழிவு களைந்து
சொல்லுவ சொல்லுபு நல்குவ நல்குபு
நீக்கமி னிலையி னிறீஇ யருள்வை
ஆகலி னெனுதுள் ளத்துணி பாய்ந்து
தோகமி லருளாற் றுணைவி லீதியே. (௪)

---

* தெவுளல் = பெருகல்; திவாகரம். 'தெவிளல்' எனவும் வழங்கப்படுகிறது.

## நேரிசை வெண்பா.

ஈதலுங் கோடலுமுன் னேனருட் கேயுரித்தென்
றேதறு நூல்க ளினிதியம்பப்—போதமிலாக்
கோட்டமன னென்று கூத்தாட லென்கந்த
கோட்டமுறை யெந்தாய் குயில். (௫)

## கட்டளைக்கலித்துறை.

குயிலன்ன தோளு மயிலன்ன சாயலுங் கூர்மடவார்
வெயிலின்ன தென்றறி யாதுய்பு மாமணி மேடைகளின்
அயிர்மன்னு மாகந்த கோட்டத் தமர்ந்தவா ருனனத்தோய்
துயிலுமண்ணேக்குந் துமித்தருள்வாய்தொழுந் தொண்டருக்கே.

## இணைக்குற ளகவற்பா.

தொண்டயர்ந் தாரே யண்டர்க ளாயினர்
தொண்டயர்ந் தாரே சுடர்நிட் டராயினர்
தொண்டயர்ந் தாரே தொல்சித் தராயினர்
தொண்டயர்ந் தாரே தோய்முத் தராயினர்
பாடலுந் தொண்டே பழிச்சலுந் தொண்டே
ஆடலுந் தொண்டே யருநறும் பண்டம்
ஈதலுந் தொண்டே யிறைஞ்சலுந் தொண்டே
என்றறிந் துன்னையு மிணையடி யல்லால்
ஒன்றையும் விழையா வுன்கிண கரையும்
ரேடிப் புரியு நெடுந்தொண் டிற்றென
நாடித் தேரு ஞாலப் பேதைகள்
உறுபய னெவனே யுறுகண் கண்டிடிற்
பெறுபய னெவனே பேதைமை தணப்பான்
செய்வினை யெவனே யென்றறி தெளிவு
மெய்ம்மையு முடையுன் மெய்யடி யார்கால்
நுண்ணிய பூழியென் சென்னி

ஒண்ணுமேற் கறையெலா மொரீஇ
மதர்மீக் கொள்ளும் வானருள் கொள்ளும்
அதனு லன்னவ ரவைக்கணு மென்னை
உ௦. வைத்துநீ யாண்மனன் வழங்கல் வேண்டுமா
நந்தவாட் டாடுநர் நாடு மதன்சேர்
கந்தகோட் டத்தவிர் கந்தா குழகா
திருநிமிர் வல்லி தெய்வ யானை
இருவரு முவப்ப விடையிருந் தருளும்
உரு. தலைவ வும்பர் தலைவ
தலைவ வென்றன் றகைமை
அள்ளிலைவே லத்தம் பரித்துப்
புள்ளில் வருமோர் புனிதப் பொருளே. (எ)

### நேரிசை வெண்பா.

பொருளொரு மூன்றும் பொருளெனவே கொள்ளுந்
தெருளுளார் போதந் தெவுளக்—கருளிரிக்குங்
கந்தகோட் டத்தவிரெங் கண்மணியே யென்மதநீ
தந்தநாட் டத்திடையே தான். (அ)

### கட்டளைக்கலித்துறை.

தானந் தவங்க ளெலாநினைச் சித்தெவர் தாஞ்செயினும்
ஊனந் தருமலான் *மானந் தராவென வோதிடற்கெண்
மானந் தடையின்று தக்கனே சான்றென்னும் வாய்மைகொண்டுன்
பானெஞ்சு செய்யெனைக் காகந்த கோட்டத்துப் பண்ணவனே.

### நேரிசை யகவற்பா.

பண்ணவர் கவலும் விண்ணவர் கவலும்
மண்ணவர் கவலு மாற்று பாக்குச்
சண்முகத் திருவுரு வண்ணினை யதுதான்

* மானம்=பெருமை; னகரவேதுகை.

அகார முகார மகார மர்த்த
மாத்திரை நாத மாணுறு பிந்து
களாகளா தீதங் கரிசறு சாந்தி
சாந்தியா தீதந் தகைசா லுன்மனி
மனோன்மனி புரீ ததீ வளர்தனு மத்யமா
மேம்படு பதீபரா வாம்பதி னாறு
மாத்திரா ரூப விராட்பிர ணவமும்
ஓமெனும் பிரமப் பிரணவ மொன்றும்
ஆகநின் றவிரு மகண்டசத் தியெனா
ஆரண மாகமம் புராணே திகாசம்
அனைத்து மதிர்க்கு மப்பெரு மாண்புத்
திருவடி விருக்கத் தெய்வ ஞான
சத்தி வடிவாச் சாற்றரு மாற்றல்
பெற்றுள ஞாங்கர்ப் பெரும்படை யொன்றும்
அதிவிறல் பொறுத்த பதினோ ருருத்திர
உருவாய் நிமிரு மெறிவல் லையந்துஜங்
கத்தி குலிசங் கங்க பத்திரம்
அங்குசங் கமலங் கண்டைகோ தண்டம்
ஈட்டி பரசென் றியம்புபன் னொன்றும்
பன்னிரு கரத்து மின்னி யிருக்க
அடியவ ரென்னுஞ் சிறார்பசித் *தாற்றிற்
கடுகிப் போந்தக் கவறபு பேரருட்
† டள்ளைய ராகச் சாற்றுசூர்ச் சுதையுங்
குன்றவர் சுதையுங் குன்றா திருக்க
மீளி பிறங்கு வீர பாகு
முதனவ வீரர் முடிவின் றிருக்க
எத்திசை கண்ணினு மத்திசை நின்னை

---

* அரற்றல் = அழுதல்; பிங்கலநிகண்டு.

† தள்ளை = தாய். இது, குட்ட நாட்டார் வழங்குஞ்சொல்.

நொடியிற் கொடுவந்து தரவல மாமைக்
கலாபி யிருக்கக் கலக்கென் போல்வார்க்
கில்லை யெனினு மியற்கை மலத்தான்
மறப்பு நினைப்பு மாறி மாறி
வரலா னங்ஙன மாறி மாறி
நீயும் விழும ஞேயம் பெருக்குபு
கவலேல் கவலேல் காத்தருள் புரிவாம்
என்று தேற்ற மியம்பிடல் வேண்டுங்
காமர் பூக்குங் கந்தகோட் டத்தில்
வாழும் பரம மலநோய்
போழு மருந்து பூக்குங் குன்றே. (௧௦)

### நேரிசை வெண்பா.

குன்றம் பகவே லெறிந்தோய் குடிலைமுகன்
ஒன்றுந் திருவுருவோ யோமுருகா—வென்று
குராங்குநர்க் கொள்கந்த கோட்டப் பிரானென்
றுரங்கொள்ளு வார்க்கின் றுதிப்பு. (௧௧)

### கட்டளைக்கலித்துறை.

உதிப்பு முலப்புமெங் கேநிற்கு மென்றோ ருணர்வுசெய்யிற்
குதிப்பு மறப்புமெங் குண்டோவங் கென்றே குறித்திடலாம்
அதிர்ப்பு முதிர்ப்பு முளேனவை யெவ்வா றடங்கநிற்பேன்
மதிப்பு மெதிர்ப்பு மிலாக்கந்த கோட்டத்து வானவனே.

### நிலைமண்டில வகவற்பா.

வானவர் நாயக மாதவர் நாயக
மானவர் நாயக மன்னவர் நாயக
மோனிக ணாயக முன்னுநர் நாயக
ஞானிக ணாயக நள்ளுநர் நாயக
தந்திர நாயக மந்திர நாயக

எந்திர நாயக சுந்தர நாயக
சத்திக ணாயக சித்திக ணாயக
முத்திக ணாயக வித்தைக ணாயக
தத்துவ நாயக சற்குண நாயக
புத்தக நாயக புண்ணிய நாயக
தாரக நாயக சண்முக நாயக
ஏரக நாயக வெங்குரு நாயக
ஆட்ட நாயக வாசறு கந்த
கோட்ட நாயக கூர்த்த போதம்
இல்லாக் குணுங்கு பொல்லாக் குணுங்கு
கல்லாக் குணுங்கு கருதாக் குணுங்கு
பாடாக் குணுங்கு படியாக் குணுங்கு
தேடாக் குணுங்கு தெரியாக் குணுங்கு
வழுத்திம் மனுவை மதித்து னருளிற்
செலுத்தி யென்னைக் கலத்த னின்மா
திடனுர் திடனுர் தெய்வ வருட்கோர்
கடனே கடனே கடனே கடனே. (கங)

### நேரிசை வெண்பா.

கடனறியா *வாட்டியரல் காக்கந்த கோட்டத்
திடைவதியு மெந்தாயுன் னேனுு—ரடியலரே
ஏழையேன் சிந்தை யெனுமாறு சாலுண்டு
மாழையொடு வீங்கும் வயின். (கச)

### கட்டளைக்கலித்துறை.

வயினதே யன்சுமைக் காமாலு மஞ்சவொள் வையத்தனுங்
குயினேறு போகியுஞ் சூழ்கந்த மாகந்த கோட்டத்துறை
மயிலேறு மெம்முதா னின்றெண்ட ரென்றிந்த †மாதிரத்திற்
பெயரேறி னரவம் போயின ரென்னவோர் பேச்சுமின்றே.

---

*ஆட்டியர்=செல்வர் ; 'ஆட்யஃ' என்னும் வடசொல்லின் விகாரம்.
†மாதிரம்=பூமி ; தகரவேதுகை.

## நேரிசை யகவற்பா.

இன்று நெருநல் பின்றை யெனுநிலை
பிடித்து நின்ற பிரமேந் திரற்கு
நித்தகை வல்லிய நீட்டி யருளினை
நித்திய நாத னெனுநிரு பற்கு
நின்மல யோக நிலைநன் களித்தனை
சொன்னகுத் தற்கு மவனிற் றுணைவி
என்னு மகேசை யென்பா ளுக்குஞ்
சுதனு வந்தெதிர் தோன்றினை யதான்று
நசைஇய வரங்களு நன்கு நல்கினை
வசுமந் தற்கு மலர்கதி வழங்கினை
இடும்ப னென்பா னிகலிரித் தருளினை
சேரர் கோற்குச் சிவகயி லாய
கதிக்கருள் புரிந்தனை திருப்பரங் குன்றிற்
கரனறுப் புண்ட வொருமட வாற்கக்
கரன்வளர் பாக்குக் கருணைபா லித்தனை
சுகவிரு டிக்குந் தூய்நால் வாய்க்கும்
வேண்டுன வருளினை விடைமுக வற்குப்
பதியொள் ளறிவைப் பகுத்தருள் செய்தனை
வாசுகி யென்னு மாசுண மதற்கார்
யாக்கை யாகுல நீக்கி யருளினை
சயகிய சவ்விய சாமிமா ணுக்கற்
கைம்பா தகந்தீர்த் தருளினை யற்பாற்
கதிர்காம வேலா வெனக்கத றொருவற்
புரப்பான் கரியைக் கோறல் புரிந்தனை
கதிர்கா மத்திற் களிறுத் தொழுவான்
ஒருவன் சாப மொழித்தருள் செய்தனை
காசிப ரிட்டிக் கூறு காட்டு

மலயன் மார னிருவர் மாய்த்தனே
வாசவன் றாசி மனக்கவ நீர்த்தனே
௩0. சந்தத் தொடர்பு சாலப் பொழிந்த
எந்தை யருண கிரிக்கரு ளிசைத்தனே
பிரமற் குட்டுபு பெரும்புவி படைத்தனே
பரமற் கோருப தேசம் பண்ணினே
ஆறு முனிவரை யாட்கொண் டருளினே
௩௫. முசுமுகற் கருளினே முதுமல யத்துச்
சிறுமுனிக் கருளினே சீரிய புத்தேட்
சோழற் கருளினே யாழற் கருளினே
வாமற் கருளினே யிராமற் கருளினே
கீரற் காய கிருபைசெய் தருளினே
௪0. இன்னு மெண்ணிலர்ப் புரந்தனே யதனல்
என்னையு மென்போல் வாரையு மின்னே
ஆண்டு கோடற் கருளல்
வேண்டுங் கந்த கோட்ட வேளே. (கசு)

## நேரிசை வெண்பா.

வேளென் மதன்செய்யோர் வெப்பிற் கிவனினியிங்
காளன் றெனவுய்க்கு மாற்றலுளோய்—கோளறுசீர்க்
கந்தகோட் டக்குமர காவென் றிமிழ்த்தபினும்
பந்தம்யாக் குங்கொல் பகர். (கள)

## கட்டளைக்கலித்துறை.

பகாற் கரிய பராபர மூர்த்தியின் பால்விழிக்கட்
புகறற் கினியநீ வந்ததா லன்றே பொருபுலவர்
சுகமுற் றனரந்த வாறுநீ யென்கணுந் தோன்றினன்றிக்
குகனட்பி லுய்வன் கொலோகந்த கோட்டக் குருமணியே.

## இணைக்குற ளாசிரியப்பா.

மணிமிக் குடைமா மணிகண் டற்குப்
பொருளா நிற்கும் பிரமப் பொருளே
நாவின் மகட்கோர் நாமக ளாகிப்
பூவின் மகட்கோர் பூமக ளாகி
எண்ணில் கோடி யண்ட வீட்டந்
தந்திடு கருப்பத் தாய்விந் ஆவிற்குந்
தாயாய் மன்னு சாம்ப விக்குப்
பொருளா நிற்கும் பிரமப் பொருளே
கிஞ்ச வுறழ்வுங் கிஞ்சத் தொழிலு
முளபல் கோடி யுறவி கட்குப்
பொருளா நிற்கும் பிரமப் பொருளே
தளிமக் கந்த கோட்டத் தளியுட்
பொருளா நிற்கும் பிரமப் பொருளே
என்முக நீதா னெழீஇ வாராயேற்
சார்தழை மஞ்ஞாய் தருகென் பேன்கொல்
பைமெய்த் தத்தாய் பறையென் பேன்கொல்
அஞ்சிறை நாரா யழையென் பேன்கொல்
மென்னடை யன்னம் விளம்பென் பேன்கொல்
இன்னிசைக் குயினீ யிசையென் பேன்கொல்
சிகரக் குயினீ செல்கென் பேன்கொல்
பொள்ளென மிஞிறே போகென் பேன்கொல்
குதிகொளு மனனே கொடுவென் பேன்கொல்
வேறென் விளைப்பனே
ஊறுளே னுணரே னுணரேன்
எற்குலை வின்றிநல் லீரம் பெருக்கா
எழீஇ வரினீ யெந்தா யெந்தாய்
என்றடி தாழ்ந்துன் னின்மதர்ப் பௌவம்

படிந்தா னந்த பரதஞ் செய்கு
மாசறு தொண்டர் வம்பி னென்பேன்
மறுபெறு மன்பீர் வருதி ரென்பேன்
யோக வேந்தீ ருறுமிவ ணென்பேன்
சான்றீர் சான்றீர் நுங்கள் சார்பிற்
சார்ந்தேன் சார்ந்தேன் றளைக டுமித்தேன்
என்பே னென்று மிருஅ
நின்பா னின்று நீடுய் வேனே. (௧௯)

### நேரிசை வெண்பா.

உய்யு முறைகாண்ப வுய்யுயிருக் காமருளைச்
செய்யு நிலைகாண்ப செய்மையொடு—பையுள்
இலாமூப்பு மாவுள்ள வேர்க்கந்த கோட்டத்
துலாய்நிற்கு முன்னளியு ளோர். (௨௦)

### கட்டளைக்கலித்துறை.

உளது மிலது மெனநிற்கு மிந்த உலகத்துழை
*விளரியி லேயே கிடைத்தனை யெற்கவ் வியன்கருதின்
வளருமுன் வாகையென் றேயாகு மின்னமும் வாழியென்னக்
களவினின் னெஞ்சிற் படர்கந்த கோட்டத்துக் காங்கெயனே.

### நேரிசை யகவற்பா-

காங்கேய மென்ன வோங்கொளி மெய்யோய்
மாயம் பூத்த மறத்தா ரகனும்
வஞ்சம் பூத்த கிரௌஞ்ச வரையனுஞ்
செய்திரி புரத்தைச் சிரித்தெ ரித்தோய்
அவ்வற் கிரௌஞ்சன் றருபே ராழியை
அங்கை யளகமா வுண்ட விறலோய்
பெயர்த்து மன்னவர்த் தடிவான் பெருவேல்

---

*விளரி = இளமை ; எகரவெதுகை.

ஓச்சினேப் மிக்க வுரவரி முகனின்
கரசிர முளேயா வணமுங் காரித்
தடக்கி வீட்டோ ராண்மை யுடையோய்
மதுகைசால் சூர பதும னணையிற்
பகிரண் டங்களி னின்று பாய்ந்து
வருமெண் ணறுமவு ணப்படை மாண்டு
தலையளாய் நின்ற வழன்மலை பலவுங்
கட்பார் வையினூற் கனற்று வலியோய்
எண்ணில் சிரங்க ளெண்ணில் கரங்கள்
எண்ணில் படையுடை யெண்ணில் படைகளை
ஒருங் காரத் தோடுக் கிரமா
நோக்கி நீரு நீற்றெறு முடையோய்
வீரமா கேந்திர வூரிற் குழீஇய
செறுநர் குழாத்தைச் சிறுநகை யென்னும்
பாழித் தீயாற் பூழி செய்தோய்
ஆயிரத் தெட்டண் டாதி பதியாய்
ஆயிரத் தெட்டரி யயனுண் மன்னுய்
நூற்றெட் டுகனூ ருத வூங்குத்
திருவுடை யானுத் தெவுண்மா யாவியா
உளசூ ரன்செய் யுரனெலா மாற்றுபு
வல்லிக் கொடியற் பொழ்ந்து வருகென்
சொல்வி னேர்படை தூண்டு பெரியோய்
ஞாட்பில் விளிந்த பூத ஞாட்பை
ஒருரை யளவி லுயிர்த்தெழ வயர்ந்தோய்
அந்தணர் பரவுங் கந்தகோட் டத்திற்
சந்தத நிலவுந் தனிவர வள்ளால்
என்மல வலிவா ரிரித்தருள் பாக்குன்
உள்ளத் துளினஃ துண்டு கொல்லோ
ஐயநீ யிஞ்ஞான் றுளருள்
செய்ய வேண்டுங் திருவுள முவந்தே. (௨௨)

### நேரிசை வெண்பா.

உவப்பு முவர்ப்புமிலா வோரருளெற் கியச்
சிவப்பொழுதிந் நாளிலைகொல் செப்புஞ்—சிவப்பொழுதுன்
பாலென்று காந்தம் பறையுரைக்கென் சொல்லுவைமெய்
சால்கந்த கோட்டத்தெந் தாய். (உ௩)

### கட்டளைக்கலித்துறை.

தாயுஞ் சனகனும் பந்தமுங் கேளுநீ தானென்பவர்க்
கோயும் புனிறும் புராணமு மாய வுறுகணெல்லாம்
ஏயுந் திருவருள் வேக வதிகொப் புளமெழுப்பிப்
பாயும் பொறிகெழு மாகந்த கோட்ட பராபரனே.

### நிலைமண்டிலவகவற்பா.

பரத னெல்லை யாமிப் பாரியில்
நரரா யுள்ளார் யாதோர் நடையிற்
காலம் போக்கல் கடனே யாயினுஞ்
சீலப் பனுவலிற் சீரியர் போக்குவர்
மூர்க்க ரென்பார் வேட்ட மிழைத்தல்
தீர்க்க மாகத் திவாவு றங்கல்
செருக்குற் றிருத்தல் சிறுமிக டொறுவில்
விருப்புற் றிருத்தல் வெஞ்சூ தாடல்
ஆடல் பார்த்த லபவா தம்பனல்
பாடல் கேட்டல் பஃறொனி கொளுத்தல்
வாளா சரித்த லாக வழுத்துங்
கோளா றுகளிற் கூடாப் போக்குவர்
இன்னோர் கேளெற் கேயுங் கொல்லோ
மன்னோர் கந்த கோட்ட மரீஇ
அடியார்ப் புரக்கு மருட்பெருஞ் சோதி
அடியே னேத்து மதிரசத் தேனே. (உரு)

### நேரிசை வெண்பா.

தேன்பா யிழுதுகண்டு தித்திக்கு மக்காரம்
ஆன்பா லெலாமெள்ளு மானந்தத்—தேன்பாகுண்
டும்பரின் மீயிருப்பா ரொண்கந்த கோட்டமமர்
தம்பிரா னின்னன்பர் தாம். (உசு)

### கட்டளைக்கலித்துறை.

தாவில் விவேக முளார்கொண்ட சன்மஞ் சபலம்பெறற்
*கூவயி னுக்கிரை தேடுவ தோடிறை யாமுனையுங்
கூவுழித் தேடியுய் வாரவர் நீர்வரை கூறிடவென்
நாவல தோவெனை யாள்கந்த கோட்டநன் ஞயகனே. (உஎ)

### இணைக்குற ளகவற்பா.

நாயகன் றந்த நால்வே தத்துள்
இருக்கு மறையி னெழிலைத ரேயம்
எசுவின் றைத்திரிய மீசா வாசியம்
பிருகதா ரணியம் பேழ்க்கட வல்லி
கீதச் சாந்தோக் கியநற் கேநம்
அதர்வப் பிரச்சிந மணிமாண் டூக்கியம்
முண்டக மென்னு மொழியொரு பதூஉம்
இரண்டா மோத்தி னோர்க்கை வல்லியம்
தூய்மை பன்னு சுவேதா சுவதரம்
கிழமைக் காலாக் கினிருத் திரநறுஞ்
சென்னி யோத்தின் சிரசு சிகையெனும்
பஞ்ச ருத்திர வஞ்சுப நிடமும்
ஏனைய வுபநிட மாமக மெல்லாம்
மொழிந்து மொழிந்து முடிவு படுத்தற்
கமையாப் பொருளா யறுகுண வத்துவாய்
என்று முள்ள தெதுவோ வதுவே
நீயென் றோர்வார் நெருசிடை யுறைவோய்

* ஊவயின் = ஊன் வயிறு.

தேரண *வுழப்பு வாரணத் துகிலோய்
பொலங்கொ ணீப வலங்கன் மொய்ம்போய்
உ0. சடக்கர நாம சகச்சிர நாம
குன்றுக் கந்த கோட்டத் தெம்மான்
எனுதெண் மைத்துணை யிற்றென வோர்ந்தாள்
அற்பி லடியேனை
எல்லுங் காத்தி யல்லுங் காத்தி
உரு. அந்தி காத்தி சந்தி காத்தி
முன்னுங் காத்தி பின்னுங் காத்தி
இடையிற் காத்தி யாண்டுங் காத்தி
நோக்கிட னெங்கு நுனையே
நோக்கற் காய நோக்கு மளியே. (உஅ)

### நேரிசை வெண்பா.

அளியான் மனுடர்சே யாமொருவ னம்பி
விளியா வியன்பெறலிங் குண்டேற்—களிகழியா
ஓர்கடவுட் சேய்நம்பி யார்கெடுவா ரோய்விலருள்
கூர்கந்த கோட்ட குகா. (உகூ)

### கட்டளைக்கலித்துறை.

காவளர் மாகந்த கோட்டத்தெந் நாளுங் கடிபெருக்கித்
தாவற வேவிளங் கீரோன் பதுவிழிச் சண்முகநின்
தூவரு ணச்சடி யேனினித் தங்குந் துகளிலிடம்
தேவர்கண் மானவர் யாவரு மேத்துன் றிருவடியே. (௩0)

---

வண்ணக்களஞ்சியம், காஞ்சி - நாகலிங்க முதலியார் வேண்டுகோளின்படி, பாம்பன் : ஸ்ரீமத் - குமரகுருதாசசுவாமிக ளருளிச்செய்த—

**கந்தகோட்டமும்மணிக்கோவை முற்றிற்று.**

குமரகுருபரன் றிருவடிவாழ்க.

---

* உழப்பு=வலிமை     ளகரவேதுகை.

வடதிருமுல்லைவாயிற்

# சுகபார்வண்ணம்.

இராகம் - புன்னாகவராளி.

தையத் தனன தத்தந் தந்தத்த தானன
தையத் தனன தத்தந் தந்தத்த தானன
தனனதந்த தந்ததான தனனதந்த தந்ததான
தனனதந்த தந்ததான தனனதந்த தந்ததான
தான தானன தான தானன
தனன தனதன தைய தானன
——தனதன தன்னன தனன.

சொல்லிற் பெரிய சுத்தங் கொண்டச்ச * நூறிய
மெய்யர்க் கினிய கத்தன் சிந்திக்கொணுமுதல்
பெரியவண்ட ரண்டம்யாவும் வனைபரன்செய் கின்றவாறு
நிறுவியந்த முஞ்செயீச னுயிரிருந்தி யங்குசோதி
நாத நாயகன் வேத நாயகன்
உதியா நிருமல னைவி லாதகோ
மெய்யற் புதனெ ருத்தன் பண்புற்ற தேவரும்
வையத் தவரு நித்தஞ் சிந்திக்கு மீறிலி
அளவிறந்த வண்டகோடி களினிறைந்த விஞ்சையீசன்
அறைகடந்த சம்புமாசின் மதிமலர்ந்த புந்தியாளன்
ஒகை யேயுள னீகை யேயுளர்
உளமீ துளனுயர் வள்ள னீதிசேர்,

---

* நூறுதல் = பொடியாக்கல்; அழித்தலெனும் பொருளிற் பிரயோகிக்கப்படுவது.

தொய்யற் றிருவு ளத்தன் சந்தத்து மாலைகொள்
உள்ளத் திருநி ருத்தன் பண்டத்த னீயென
உரைசெயன்பர் நண்பர்ஞான முனைவர்வந்த னஞ்செயாதி
கரைதவிர்ந்த வெண்குணேசர் பொறைமிகுந்ததுங்கரோதம்
நோயி லாவரு ணைய போதகர்
அழியா தவரமு நல்கு மேதையார்
——நிகரா று விண்ணக நிறைவோர்; (௬)

தொல்வித் தகவ ளப்பந் தங்கொப்பில் சூர்களுள்
*நல்லக் கயல்வி ழிப்பண் கண்டத்தி கோனையும்
அணியிலங்க னந்தைமானு டருளூரங்கொண் மங்கைநாடுய்
மனையுமன்றி யொன்றின்மீது கவிசொல்கின்ற தின்றுநாமென்
நீர்மை யேயுள கீர னனவன்
நவைதீர் பரமலை யெல்லை யோர்வளார்,
†பொய்கைக் கருகி ருக்குந் திண்டொத்த பாறையில்
ஐயற்றெரு ழுதிருக்குஞ் சந்தர்ப்ப நீள்வலி
உடையவங்கம் விஞ்சுபூத கண‡விரண்டு தண்டவீரர்
களைநினைந்து கண்டுநீவிர் தமிழ்நலந்தெ ரிந்தகீரன்
மேல தோர்பிழை சார வேபணி
மலைசேர் குசைநனி தள்ளி மோதிடீர்,
துள்ளித் துடிது டித்தஞ் சஞ்சற்கெ ளுவொரு
வல்லுத் தரவ ளித்தன் றன்புக்கு ளானவர்
பினர்மொழிந்த தண்டவீரர் மரமிருந்த செம்பலாச
மதையரிந்து தண்டடாக வருகெறிந்து நின்றபோது
மீனும் வீயும தாகி யேயுறும்
அஞரே யறவென வள்ளுரு கீரினல்
——வகிர்கவி வன்னேவின் மிகவே; (௭)

---

* நலக்கயல் 'நல்லக்கயல்' என விரித்தல் விகாரப்பட்டது.

† பொய்கை = சரவணப்பொய்கை.

‡ இவர்கள்பெயர் உக்கிரமூர்த்தி, அண்டாவரணன் எனத் திருப்பரங்கிரிப்புராணஞ் செப்பும்.

தொல்லைப் படர ளிக்குஞ் சங்கட்ட மாரவை
மெய்விட் டவுட னத்தங் கொண்டிச்செ வேள்பதி
தனின்மறஞ்செய் கின்றபாவி யெனவிரண்டு தண்டவீரர்
களும்வெகுண்டு டம்பறைந்து சிறைபுரிந்து வந்தகாலை
ஈது தான்முரு கோன தேயென
நினைசீ ரியனவி றுய்ய பாடலார்,
புள்ளிப் பொறியி ருக்குந் தொங்கற்சி காவள
வையத் தொடொளி கக்குந் தங்கத்திண் மானமும்
அணிபதிந்த தந்தயான மளவிறந்த சிங்கயானம்
எணிலுயர்ந்த தொங்கல்பீலி கொடிகணம்ப னந்தகோடி
ஏவ லாளரு மீடி லாவடல்
மலிமா பகுதியு முள்ள சீருளார்,
சொல்லற் கரிய பொற்புஞ் சம்பத்து நீடிய
வெள்ளிக் கிரிந டுக்கண் டங்கிச்ச தாவடி
யவர்விரும்பு கின்றவாறு புரிசிறந்த சம்ப்ரதாய
அருளுமன்பு மின்புமாகி நிலவகண்ட சம்புவான
மாசி லாமணி யீசர் காதலர்
அருள்சால் கொடியிடை *யையை பாலனுர்
—முடிவறு முன்னேனி ளவலார்; (வறு)

துய்யர்க் குதவு சித்தம் பொங்கச்சு தாவரி
புள்ளுக் கிறைசு மக்குஞ் சம்பத்து ளாய்திரு
அணைவைகுண்ட விண்டுவாசி றுளவணிந்த மஞ்சுமார்ப
வெனவணங்கு கின்றபேர்கள் கடவுளென்றி யம்புமாலின்
† ஆண மாமரு மானெ னுவரு
பெரியா ரளவறு கல்வி நாதனுர்,

---

* ஐயை = உமை; பிங்கல நிகண்டு.

† ஆணம் = அன்பு; ணகரவேதுகை.

தெய்வத் திருவி ருக்குந் துன்பற்ற மேனியில்
நல்வச் சிரமி ழைத்தங் கெம்பிட்ட சேகரம்
நுதலிலம்ப கஞ்சிகாத செவிவிளங்கு தொங்கறேசு
தருகுதம்பை கண்டவார மிடைவயங்க னந்தகோவை
பாட காதியெ லாமு மேவுற
வருமோர் கரிமகள் கொள்ள வாவினர்,
தொல்விட் கருமு கிற்குங் கங்குற்கு மேலென
மல்கற் குழலு மட்டுந் தண்டொத்த தோள்களும்
* சகுலிநஞ்ச மம்பைமோது விழிகளுங்க தம்பநாறும்
இருபறம்பும் வம்புபூசு கரதலங்க ளுஞ்சுலாவும்
நீரி லார்சுழி நேரொர் நாபியு
மலர்போ லடியுடை வள்ளி கேள்வனர்
——புகழ்முனி சொன்னடு செவியார்; (௭)

வல்லைப் பொருமு லைப்பெண் பண்புப்பு லோமசை
மையற் கினிது கக்குங் கண்பெற்ற வாசவன்
உரமடங்க வந்தசூரன் விறலடங்க வென்றனேக
கணமெழுந்து பம்பைபேரி முரசுதிண்டி மொந்தைவாரி
தாரை காகளம் யாம மாமுழ
முருடா குளிதுடி நல்ல நாதமே,
செய்யப் பெரிய கட்கம் புன்சத்தி பேரயின்
முள்ளுப் பரச டிக்குந் தண்டத்த மூவிலை
எறியிரும்பு குந்தம்வீசு சவளம்வன்கல் பிண்டிபாலம்
முசலமம்பு சிந்துவாரம் வளைகள் குண்டு மந்த்ரபாசம்
நீடு கோடரி யீரும் வாளெழு
குலிசா யுதமிக வுள்ள கேடிலா
மள்ளற் படைகள் பக்கஞ் சந்திக்க வேபெரு
வையத் தலமி தித்தங் கங்குற்ற வாசுரர்

* சகுலி = மீன்; வடசொல்.

கலைவளைந்து மண்டைவேறு தொடைபிளந்த சந்துவேறு
விழிவகிர்ந்த துண்டம்வேறு களம்வகிர்ந்த முண்டம்வேறு
கால்கள் வேறுகை வேறு வேறென
விறைவே யிறும்வகை செய்து நீதியே
——உறுசுரர் மன்னுமொர் மயின்மேல்; (௨௯)

மையற் றவினன் மெச்சுஞ் செங்கைத்து நூபுரம்
எல்லிற் சுடர்கொ ழிக்கும் பொன்கட்டு மோதிரம்
அவிர்சதங்கை தண்டைசால வொளிர்பதம்பொ ருந்தவேறி
அறைசிகண்டி தன்கலாப முழுவதும்ப டர்ந்துசூழ
நீள விரிறை வீசு வீசலின்
நெடுமா மலைமுடி துள்ள வேகுநேர்,
கள்ளச் சமர்கொ டுக்குங் குன்றெறுத்த சூரன
துள்ளத் திறவுன் மத்தங் கண்டொப்பி லாவதி
இகல்கிளர்ந்த தங்கைவேலி னிணைவறிந்தெ ழுந்துநீயி
வசுரன் மொய்ம்பு டம்புபீற வனைதியென்ற றைந்தவேலை
தேசு லாமது கோர மாமொளி
பலகோ டிபெருக வெய்தெ ஞவிணும்,
மையத் தலமு மற்றுங் கண்டச்ச மேகொள
வள்ளூற் றுயரொ ழுப்பங் தந்தச்சு தாதியர்
குமரசம்பு கந்ததேவ வெனவிளம்ப வஞ்சசூரன்
உடல்வகிர்ந்து கங்கைமூழ்கி கரமமர்ந்த வென்றிவேலின்
ஈச ஞர்சுர லோக மாளென
மகவான் மகிழுரை சொல்லி யேசிலா
——அரசுமரு டங்கேரி லருளோர்; (௩)

வல்லத் தரணி முத்துஞ் செந்துப்பு மூரியும்
நல்குப் புடையு டுத்துங் கங்கற்ற பூமியில்
எழில்விளங்கு தொண்டைநாடு நனிவிளங்க வந்தவூருள்
அலைததும்பு கின்றபாலி மடவைகெண்டை தும்பிவாளை

தாவி யாசினி வாழை சீவனி
புளிமா தமிழ்தரு சுள்ளி வார்பலா,
கள்ளிற் சுவைய ளிக்குங் கொம்பொட்டு தேனரை
வெல்லத் தினுமி னிக்குஞ் சம்புப்ப லாசிகண்
மிசைவிழுந்தி ழிந்தவேளை யுதிர்பழஞ்சி வந்ததேனும்
எருமைகுண்டை தும்பிகேழ னடையினைங்தெழும்புகூழை
வாரி யேயிடு பான லேபல
உளநீள் வளமொடு செய்யி லேநெலாம்,
வள்ளுக் கதிர டித்தங் கங்கிட்ட நூழில்கள்
வெள்ளைத் *தாளமுத்தி றும்பொத்து வீசொளி
அருகினின்ற னந்தபேத குரவைதந்தி யங்குகாணி
உழவர்பெண்க ளந்தகார வுருவைவெண்பொ னென்றுகாண
வேசெய் போழ்தவர் நேச வாடவர்
இவரார் புதியரெ னைய மேம்கொளா
——நிசமுண ரன்னோர்வ யினுமே ; (சுவறு)
வள்ளைச் செவிகி டக்குந் துங்கப்பொ னோலைகள்
எள்ளச் சசியை முத்தஞ் சிந்தப்புன் மூரலின்
மணம்விழைந்த நெஞ்சமோடு பலமடநகை நின்றுலாவு
தடமலிந்த மந்த்ரமேடை களுமகன்ற மன்றமோது
சாலை மாமடம் வாரி யாவணம்
அறமே புரியிட மையர் சேர்வுமே,
அல்லித் தளிரின் மச்சஞ் சென்றெட்டு மோடையும்
நெய்தைக் கடிம ணக்குஞ் செம்புட்ப வாவியும்
நவையடைந்த மைந்தர்மூழ்கி னலம்வழங்கு கின்றமான
சமுடனிந்த்ர மங்கிவாயு நிருதிசண்ட மந்த்ரிநாரம்
ஈசம் வாருண மேசில் சூரியம்
மதிநீ ரெனுநல பொய்கை யோடுமே

---

* தாளம்=உருட்சி , ரகரவேதுகை.

மல்லிச் செடிய ரத்தந் தண்பிச்சி மாதவி
முல்லைக் கொடிது ருக்கம் பைம்பச்சை கூவிளம்
மகிழ்செருந்தி கொன்றைகோடை தமனமிண்டை சந்தநாளும்
வளருநந்த னங்கண்மேய பெரியவிஞ்சி கொண்டகோவி
லோடும் வானவர் சூழ்தெய் வீகமும்
உளவோர் வடதிரு முல்லை வாயில்வாழ்
——குகபர ரென்னுர்வ முளரே. (க)

---

வண்ணச்சந்த வளமெலாமுணர்ந்தவரும், சென்னையில் வசித்த தமிழ்ப்பண்டிதருமான க. வ. திருவேங்கட நாயடு வெனும் பெயரிய சிவநேசச் செல்வரது வேண்டுகோளங்கீகரித்து, பாம்பன்: ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகள் தைய, தனன, தத்த, தந்தத்த, தானன, தனன தந்த, தந்ததான, தான, தனனு, தனதன, தானனு, தன்னுன என்னுஞ் சந்தங்களுறப் பாடியருளிய—

வடதிருமுல்லைவாயிற் குகபரர்வண்ண முற்றிற்று.

---

குமரகுருபரன் றிருவடிவாழ்க.

---

நவவீரர்

# நவரத்தினக்கலிவிருத்தம்.

### வீரவாகுதேவர் - மாணிக்கம்.

சீர ருமுருக வேளுறை செழுமை
ஆர ருநிலய வாரியி லமரேண்
நார ருவுழுவ லேறிடு நலிவில்
வீர வாகுவெனும் வீரனை விழைவாம். (௧)

### வீரகேசரிதேவர் - தரளம்.

என்னை யாளிறை யாயுல கெங்கணும்
மன்னு கந்தபி ரான்மந்தி ரத்திடை
மின்னு வாழ்க்கைய ருவீர கேசரி
தன்னை யுள்ளன்பிற் ருழ்வர்க்கின் றாழலே. (௨)

### வீரமகேந்திரதேவர் - புட்பராகம்.

ஓதரும் வீரம கேந்திர னொருவன்
பாதமு ளேபடர் மாந்தர பரமீ
ஆதரம் வீயம தாந்தரங் கருதுஞ்
சூதம காமர மீர்ந்ததோ மரவேள். (௩)

### வீரமகேசதேவர் - கோமேதகம்.

அரணத் திறையோ னையனு ரதமேன்
கரணத் தெணுவார் கவனா றிடுவான்
முரணிற் பொருசூ ரனொடே முனைவோன்
சரணச் சுகவீ ரமகே சனரோ. (௪)

### வீரபுரந்தரதேவர் - வைடூரியம்.

திகையெலா நீக்கமி லாது செறிந்தபெருந்
தகையெலா மேற்றவிர் சாமி பதம்பரவாப்
பகையெலா நீக்கொரு பாடு பிறந்துளுவார்
மிகையெலாம் வீட்டிடும் வீர புரந்தரனே. (௫)

### வீரராக்கததேவர் - வயிரம்.

வீவயன மிலாமேல் வீட்டுநெறியை நேடும்
ஆவலறவர் வாழ்வா னுட்டுமுருக வேளின்
தாவிலருள்கொள் வீர ராக்கதனடி தாழ்வார்
தேவருமறி யாவோர் சீர்த்தியிலுயர் வாரால். (௬)

### வீரமார்த்தாண்டதேவர் - மரகதம்

தாமத மெற்றிடு மாசில் சார்ச்சேந்தன்
சேமவ டிக்களி யாமொர் சீர்ச்சார்ந்தோர்
மாமிடன் மிக்குடை வீர மார்த்தாண்டன்
பூமன நச்சுநர் போதம் போய்க்காண்பார். (௭)

### வீராந்தகதேவர் - பவளம்.

மள்ளலே நேண்சிகி யிவரு மஞ்சனை
உள்ளுவோ ரோங்கவ னுணர்வு சந்ததங்
கொள்ளுவீ ராந்தக னினைவு கொண்டிடின்
தள்ளுவார் காண்கணத் * தறுகண் யாவையும். (௮)

### வீரதீரதேவர் - நீலம்

ஆரெப்படி முனினும்மது போலத்திரு வருள்கூர்
நாரப்பெரு மானுயழ னுகப்பெய ரானுள்
தாரப்பொருள் வேலற்பணி தகைமைக்குண வீர
தீரப்பெய ரோனைப்புகழ் தெருளார்க்கிலை சிறுகே. (௯)

---

கந்தசஷ்டி முதலிய மாவிரத வழிபாடுகளில் வழுத்துமாறு பாம்பன்: ஸ்ரீமத் - குமரகுருதாசசுவாமிக ளருளிச்செய்த—

நவவீரர்நவரத்தினக்கலிவிருத்த முற்றிற்று.

கவிக்கொரு கர்ப்பூரதீபமேற்றுக.

குமரகுருபரன் றிருவடிவாழ்க.

---

* தறுகண் கடுசக்சொல்லுதல்; சிறுபாணாற்றுப்படை காண்க.

# அட்டாட்டவிக்கிரகலீலை.

நாற்பத்தெண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சந்திரசேகரமர்த்தநாரீசுரஞ்
சக்கரப்பிரதானம்
தக்ஷிணமூர்த்திமிலிங்கம்லிங்கோற்பவந்
தக்ஷயக்கியபங்கம்
சந்தியினிர்த்தனஞ்சந்ததநிர்த்தனஞ்
சண்டேசாநுக்ரகம்
சலந்தரவதமகொராஸ்திரமேகப
தம்மசுவாரூடம்
சத்யசதாசிவம்மிக்கசதாசிவந்
தகுலகுளேசுவரம்
சகஜசுகாசனங்கூர்மசங்காரமச்
சாரிவராஹாரி
சற்குருமூர்த்தமுமேசமுமாபதி
ஜபபுஜங்கத்ராசம்
சார்த்தூலஹரிபைரவங்கலியாணசுந்
தரம்வடுகங்கிராதம்

சுந்தரவிருஷபவூர்திவிஷாபஹ
ரணஞ்சுவராபக்நம்
துகளறுக்ஷேத்திரபாலகங்தொல்கரு
டாந்திகம்முகலிங்கம்
துங்ககங்காதரங்கஙகாவிஸர்ஜநஞ்
சுபசோமாஸ்கந்தம்
சூரஸிம்ஹாரி* கமாரியமாந்தகஞ்
சுசி†மாணவபாவம்

*காமாரி 'கமாரி' எனக்குறுகிற்று. †மாணவபாவம் = சிஷ்யபாவம்.

சுபகரபிரார்த்தனைமூர்த்தநறுந்திரி
    புராந்தகஞ்சுரர்பரசும்
சுமுககங்காளமிரக்தபிக்ஷைப்பிர
    தானமிருஞ்சுடரே
சுடர்கவுரீவரப்பிரதம்மஹாபா
    சுபதசொரூபமணி
தோன்றுபுஜங்கலளிதம்ரிஷபாந்திகந்
    தோமறுகஜயுத்தம்

விந்தைவிளம்புகஜாந்திகம்வீணை
    தயங்குதக்ஷிணமூர்த்தம்
மேதகயோகவினோதமதாக
    விளங்குதக்ஷிணமூர்த்தம்
விமலபிக்ஷாடனங்கவலையுத்தாரணம்
    வேதகணம்புகழும்
விதிசிரகண்டனங்கவுரிவிலாசமந்
    விதமெழிலரியர்த்தம்
வீரபத்திரந்திரிமூர்த்திமுப்பாதம
    ஹாவேதாளிநடம்
வெருவறுமேகபதத்திரியுருவாய்
    விளம்பறுபதுநான்கும்
விலாசவளிப்புநிமித்தமெடுத்தவொர்
    மெய்ப்பொருளெதுவதுவே
விண்ணவர்மண்ணவர்கண்ணவர்யாவரும்
    வீடருளாயெனவே

வந்தனைபுரியவிருந்துளனீயென
    வண்டமிழான்மனசான்
வாழ்த்திவணங்கெனையாளவெனிருதய
    மலரிலெழுந்தருளாய்

மந்திரநாயகதந்திரநாயக
மங்களநாயகவோம்
மயதவரீசுரபரமகுஹேசுர
வசனமனுதீத
வரதக்ருபாகரகுமரபராபர
வரைவறுஷாட்குண்ய
வஸ்துவெனற்புதசத்தியவித்தக
மரணமொடயனமிலா
வானவஞானநபோமணியே திரு
மாலயனறியாவோர்
மாமலையின்பெயரான் குருநாதவென்
மருடெறுமாமுனியே. (க)

---

கலியுக ஆண்டு ருOOO - ல் நிகழ் விளம்பி வருடத்தில், பாம்பன் : ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகளால் இஃதருளிச் செய்யப்பட்டது. இவ்விருத்தத்தினை யுள்ளுருக்கத்தோடு முப்போதும் பாடி யாடுக. ஆடாவிடினும் பாடுக. அங்ஙனஞ் செய்வார்க்கு உரோகநாசம், பாபநாசம், சத்துருநாசம், ஆயுள்விருத்தி, தைரியவிருத்தி, வீரியவிருத்தி, புத்திரவிருத்தி, புண்ணியவிருத்தி யுண்டாதலோடு சர்வார்த்த சித்தியும், முத்தியும் வாய்க்குமென்பது வாய்மை.

ஆகப் பிரபந்தம் கO - லுமுள்ள திருச்செய்யுள் - உருஅ.

நான்காவது மண்டலத்தைச்சார்ந்த
சிறுநூற்றிரட்டு முற்றிற்று.

---

குமரகுருபரன் றிருவடிவாழ்க.
திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

ஓம்குஹப்ரஹ்மணே நம:

---

பாம்பன்:

ஸ்ரீமத் - குமரகுருதாசசுவாமிகள்

அருளிச்செய்த

குமரவேள்

# பதிற்றுப்பத்தந்தாதி.

4 - ஆம் பதிப்பு, 2000 - பிரதி.

சென்னை:

சாது அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

---

1930.

குமரகுருதாஸகுருப்யோநம:

# முகவுரை.

திருவருள் விழைவார் யாவர்க்கும் ஆங்காங்கு அனுக்கிரகம்புரி பொருட்டுச் சிலம்புதோறுந் திருக்கோயில் கொண்டு நின்மல நிஜாநந்த ஏகபரிபூரண வியாபக தகராகாசவஸ்துவா யிராநின்ற இறைவனும் ஸ்ரீ சுப்பிரமணிய பரமான்மாவினது பெருங்கருணையின், பாம்பன்: ஸ்ரீமத் - குமரகுருதாசசுவாமிகள் சிறு வயது முதல் அந்தப் பரமான்மாவின் பேரிலேயே பாடு நியமங்கொண்டும், இராம நாதபுரத்தின் கீழ்த்திசைக் கண்ணதாய பிரப்பை யென்னுமொரு க்ஷேத்திரத்தொரு சாராகிய காட்டின்கண் ௩௫ - நாள் சிவநிஷ்டையி லிருந்தெழுந்த பின்னர்த் துறவொழுக்கம் பூண்டு நின்றும் இயலிசைத் தமிழ்க் கட்டுரைச் சுவைகிளர் பெருந்தோத்திர வடிவாகவும், தத்துவப் பெருவிளக்கான சாத்திரவடிவாகவும், ஐயமறுக்கும் ஆற்றலுடைச் சுத்தாத்துவைத வைதிக சைவசித்தாந்த வேதாகம பாடியமென்னவுந் திகழ்ந்து சொன்னயமும் பொருணயமுந் தொனிநயமுந் துறுமி விளங்குவனவாகவும், யாப்பிலக்கண இலக்கியங்களாய் எதுகை மோனை எழுத்தளவுக ளினிதுபொருந்திய அதிசித்திர விசித்திரச் செய்யுள் பலவுட்கொண்டு மிளிர்வனவாகவும் அருளிச்செய்த பன்னூல்களுள், உவமானச் சுவையோ டுவகைச்சுவையு மளாய பத்திரச பௌவமா யுள்ள இக் **குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி**யானது வடசொற் புகாது பாடியருளிய அமைதியைம்ப தென்னுஞ் **சேந்தன் செந்தமிழ**க்கு முன்னர்க் கலியுகம் ௫௦௦௫ - ஆம் ஆண்டில் நிகழ் சோபகிருது வருடத்து ஐப்பசித் திங்கள் ௧௦ - ல் அருளிச்செய்யப்பட்ட **சஷ்டிவகுப் பி**ற்குப் பின்ன ரருளிச் செய்யப்பட்டதாகும். சுவாமிகள், சென்னை: வைத்தியநாத முதலியார் தெருவின்கணுள்ள ஒரு வீட்டின் மேன் மாடத்தில் எழு திங்கள்காறுந் தனியேயிருந்துகொண்டு விதேகமுத்தி

விரும்பிப் பெரும்புரிவோடு நிட்டை சாதித்து வருஞான்றுற்ற அனுபவமு மிதன்கட் கூறியுள்ளார்கள். அஞ்ஞான்று பாடப்பட்ட இவ் வந்தாதி, கல்லும் உருகும்படி கரைந்த வாக்காயிருத்தல் கருதி, சுவாமிகளும் இதனைச் சில காலமாகக் காலை மாலையுறு நித்திய பாராயண நூலாகக் கொண்டிருந்தார்கள். அவ்வித பாராயணம், வேறெவ்வித பாராயணம் எவர்மாட்டுண்டாயினும் அஃதவருக்குத் திருவருள் விலாசமாய் இகபர சௌக்கியந் தரூஉமெனற்கு ஐயமின்று. சுபம்.

இந்நூன் முதற்பதிப்பு, கி. பி. 1905 - ற் குயவன்பேட்டை: மகா-ரா-ரா-ஸ்ரீ கு. வே. இராஜாமுத்துக்கிருஷ்ண நாயுடுகாரது செலவிலும், உ - ஆம் பதிப்பு, 1917 - ற் சென்னை: திருவல்லிக்கேணி - தா. வேங்கடாசல முதலியாராகிய எமது செலவிலும் நிகழ்ந்தனவாம்.

இங்ஙனம்:
ஸ்ரீமத் - சுவாமிகளுடைய
சீடர்களுளொருவரும்,
குமாரச்சிவமெனும் பெயருடையருமாகிய
தா. வேங்கடாசல முதலியார்.

திருவல்லிக்கேணி,
சென்னை.
11-7-1922.

சிவமயம்.

ஓம்குமாரகுருப்யோநம:

திருச்சிற்றம்பலம்.

# குமரவேள்

# பதிற்றுப்பத்தந்தாதி.

முற்றும் பத்துவகை யாசிரிய விருத்தம் : அவற்றுள் ;

க - வது எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

உலகத்தே வருபிறப்பு மிருப்புஞ் சாவு
மொழியாத துன்பமெனப் பெரியா ரெல்லாம்
அலகற்றே யிலகுமுன தடியே சேர்ந்தா
ரவ்வடியே பெறும்பேறென் றடியே னுந்தான்
கலகத்தா லுழலுமனந் தனைநி றீஇக்
கருதுற்றே னின்துகழ லதனை விட்டு
விலகத்தா னினியென்மன நினையு மோவென்
வினைகொன்றுள் குருமணியே குமர வேளே. (க)

குமரவேள் குமரகுரு வாகா வென்றே
குயின்றுகுயின் றேபன்னு ணின்றேன் மாற்றூர்
சமரவே ளுனையன்றி வேறோர் தெய்வந்
தமியேற்கின் றெனவின்று காறு முள்ளே
அமரவேண் மறையோதி யாளா ளென்றே
யாற்றினேன் விரத்திநெறி புக்கேன் மோகப்
பிமரவேள் வயப்பட்டார் போலுண் ணேந்தேன்
பிரானினது கிருபைநனி பெற்றே னல்லேன். (உ)

பெற்றூர்நீ பிறந்தார்நீ பேணு வார்நீ
பேசரிய வன்புளர்நீ பிரிவில் லார்நீ
உற்றூர்நீ யுரியார்நீ யென்றே நிற்பா
ருறுநெறியே நானுநிற்க வுனைத்தொ டர்ந்தேன்
கற்றூர்போற் கவிதைபல பாடி யுன்றன்
கனைகழலைத் துதித்தேனின் கருணை யாக்கம்
அற்றூர்போ லலைகின்றே னினியா ரென்னை
யாதரிப்பார் சொல்லியருள் ளயில்வே லையா. (ந)

ஐயமிலா நின்னுலகு வேண்டி யிங்கே
யருமலர்நீர் கொடுபூசை புரிவார் போலத்
தெய்வமெலா மேத்துருக நானும் யாதோர்
சிற்றுருவில் வழிபடற்குப் பலவி கார
வையமிலா ஞானநவி னூல்க ளோரென்
மனமிசையா தருள்சுரந்து நீமுன் சொன்ன
துய்யவிலா சச்சொனுமே யிடங்கொ டாது
துரியநிலை மேனின்றே சூழல் சாலும். (ச)

சூழேனே திருவருளைச் சூழ்ந்து சூழ்ந்து
துரியமய மாய்நின்று சோதி வீட்டில்
வாழேனே வானந்த மான கண்ணீர்
வடியேனே படியேனே மதுக ரம்போல்
வீழேனே விரண்டற்ற நறிதா கேனே
விமலசிதா காசநடு விளங்கு முன்னைத்
தாழேனே வெனையாளுங் கருணைக் கண்ணே
தந்தைக்கு முபதேசஞ் செய்த சாமீ. (ரு)

செய்தவமொன் றில்லாத வேழை யேனைத்
திண்புவியின் மானுடனுத் தெரித்தன் மாறுக்
கைதவமென் றெண்ணியிழி நாய்பே யென்னக்
கழறிடவென் றூனுமறி வாளர் பல்லோர்

உய்தவமில் பேய்நாயென் றேதம் மைத்தா
முரைத்தமையா லவைபொருந்தா மூடர் தாமும்
வைதவலஞ் சூட்டுதடிக் கழுதை யென்றே
வழங்கலியை புடைத்துவைவேல் பரித்த மன்னே. (௬)

மன்னவர்க டொழுமன்னே மயிலூர் மன்னே
மறுவின்மணி மலையேயென் மனத்தி னுள்ளே
இன்னமுதாய்க் கற்கண்டாய்ச் சீனி தேனு
மிணையறுமுப் பழச்சுவையா யினிக்க வேழை
என்னதவ மினிச்செய்வேன் றவத்திற் கேற்ற
விகலுடம்பு பெறும்பாவிக் கிவ்வா றேங்கிப்
பன்னமனு வாப்பிறந்த பரிசே யல்லாற்
பாழ்த்தவினை நூறுபரி சிலையோ சொல்லாய். (எ)

சொல்லாத சொல்லொன்றைச் சொல்லா மற்றுன்
சொல்குருவின் சொலினிற்குஞ் சுகுர்தர் செய்கை
கல்லாத விரண்டுகான் மாடா யென்போற்
காசினியி னிற்குநரு முண்டோ யாண்டும்
பொல்லாத பவக்கயவர் குருவாய் மூடம்
பொலிமனுடப் பதடியாய்ப் புழுத்த நாயாய்
எல்லாத பங்தெரியாச் சிதட னாகி
யிருக்குமெனக் கயிலோயுன் களிப்பெங் கெய்தும். (அ)

எய்தரிய பரத்துவமுன் னடியார்க் கீயு
மிருங்கருணை யிந்நாய்க்கு மிரங்கு மாயின்
வெய்திரிய நிலைநின்று மேலோ னுவேன்
வேறொன்று மேல்வேண் டே னருளல் லாமே
உய்திபெற வழியில்லை யெனல்பொய் யாக்கட்
டுரையன்றோ வெப்படியு முவகை யன்பு
செய்தருள வருதியருட் கடலே யின்பத்
திரளேசெவ் வேளேசெஞ் சுடரே தேவே. (௯)

தேவேசெம் மணிச்சுடரே சிதாகா சச்செஞ்
செழுஞ்சுடரே யிதயசிதா காச மேவு
பூவேயப் பூவிலமர் குகனே யுன்கண்
பொற்பொடேனை நோக்காதோ புனித நாத்தான்
வாவேயென் றழையாதோ மலர்த்தாள் சென்னி
மன்னுதோ மின்னுதோ மறந்து சூழ்மா
நோவேயில் புலத்தினெனை யிருத்தி டாதோ
நுண்ணுணர்வி லாவெளியே னுய்யு மாறே. (கo)

உ - வதுஅறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விளம் மா தேமா விளம் மா தேமா.

உய்யருண் மார்க்க மேது முணர்கிலாப் பேதை யேற்கு
மெய்யருள் காட்டு நீதான் விளக்கிய நிலைவிட் டெனக்
கையரு ளொருவ னாகிக் கவலைமா கடலில் வீழென்
பொய்யருண் மார்க்க மாற்றிப் புரப்பவ ரினியார் வேலோய்.

வேலவா விமலா வன்பர் மிடிதுமித் தருள்வள் ளாலிஞ்
ஞாலவா தனைசெற் றுளு நப்பரா பரனே துன்பஞ்
சூலவா வெனவே கத்தித் துயர்க்கணீர் வடியா வென்னைப்
பாலவா வெனவே கூவும் பரிசையு முறுமோ வுன்னு. (கஉ)

உன்னய வருளை யீயீ யுயர்பத மீயீ யென்று
சொன்னசொ லனைத்தும் போலி தொழுததும் போலியன்பாம்
அன்னையை நாடி நாடி யழுததும் போலி யென்றே
பன்னுமிப் பாவி யெய்தும் பயனெதோ பகர்வே னுதா.

நாதநா தாந்த ஞான நாயகன் முருகனென்றுன்
பாதநா னினைந்த துண்டு பரமவு னன்பை நேடி

ஏதநா வலற மண்டை யிரியவெஃ கடித்தே னல்லேன்
வாதநா வுடம்பே முற்று மல்கிட நின்றே னந்தோ. (கச)

அந்தமு மாதி யுந்தா னில்பொரு ளாகி வீடும்
பந்தமு மிலியா யென்னுட் பரமனு யறிவாய் நாளுஞ்
சொந்தமு மாகி நிற்குஞ் சுப்பிர மணிய மேயென்
மந்தமும் வினையு மோவ வரமனஞ் செய்யின் வாழ்வேன்.

வாழ்விலே னினுமோர் காலுன் வாய்மலர் மாற்றங் கேட்கின்
தாழ்விலே னுவே னுளுஞ் சரவண முத்தே நீலம்
போழ்விலே யிடுக்க ணேசால் புரையுடற் சுமையி னீக்க
வீழ்விலே யெனைத்தான் வைத்து மேவநீ நினைத்தல் வேண்டும்.

நினைப்பவர் நினைப்பி னின்று நினைப்பது முடிக்கு மெந்தாய்
உனைப்பர மெனக்கொள் ளாதா ரொன்றல ரவர்க ணேயம்
எனைப்பர மாணு வேனு மெய்தொணு வாறு காத்தி
வினைப்பரி சறுத்தாள் சேர்ந்தா வீடுபேற் றருண்மா விண்ணே.

விண்ணவர் பல்லோர் நம்பும் வெறுக்கையி னறிதா முன்றன்
தண்ணலர் நோன்று ளென்னுஞ் சரதநன் குணர்ந்தேன் வாளா
மண்ணவர் நடைநான் கொள்ள வழியிலே யினியுட் கோவில்
உண்ணட மிழைத்தி யாதி யொருவனே முருக வேளே.

முருகுறு களபந் தோயு முகிழ்முலைக் கொடிச்சி யெந்தாய்
உருகுறு படப்பைந் நாக வுரிபுரை யுடைபூண் வீக்கி
அருகுறு தெய்வத் தந்தி யகமகிழ் தலைவா வுன்றன்
குருகுறு கொலுக்கண் டாலுங் கொடியனேன் குறைநில் லாதே.

தேவனே சிவனே வேலின் றெய்வமே வரம்பில் லாத
நோவனே யானேன் ஞான நோக்கம தறியே னீதான்
தாவனே யஞ்சே லென்னோர் தண்ணுரை யளித்தா லின்பன்
ஆவனே யருளி னேக்க மறிகிலேன் மிடிய னேனே (உ0)

## ௩ - வது அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காய் காய் காய் காய் மா தேமா

மிடியில்லா நினதடியர் பெருவாழ்வு
பெறுமாறு விபுலை தோன்றி
அடியில்லா மடப்பேயொத் தவனிமிசை
யுருண்டழுமா றமல வுன்றன்
செடியில்லா வருளுள்ள மவுனமதுற்
றிருப்பதென்கொல் சிவப்பே றுள்ளார்
குடியில்லா நகரோநின் னிருக்கையருட்
கோயில்வளர் குமர நாதா. (உக)

குமரகுரு தாசனிவன் குணமில்லா
னறிவில்லான் கோதே யுள்ளான்
அமரருல கினுமுய்ய வறமில்லா
னெனமனுட ரறைவ தற்கோ
தமரரிய தாய்மனைமற் றெல்லாம்விட்
டிங்ஙனமே தனிய னானேன்
சமரவயில் பிடித்ததலை வாபிழைக்கு
மாறறியேன் சழக்க னேனே. (உஉ)

சழக்கறுமு னடிக்கமலம் வாயாமை
யாற்கவலை தானே ஞானப்
பழக்கமுறு மெனையுயிரோ டும்பிடுங்கித்
தின்னுகின்ற பருந்தா யிற்றால்
வழக்கறமி லார்கருதொ ணப்பரம
வாரமுத மழவே யுன்னை
இழக்கவறி யாமதியொன் றுயிர்பெற்
றிருக்கின்றே னின்று காறும். (உ௩)

இன்றிருந்து நாளையொழி பொய்வாழ்வி
லினுமிருக்க வெனது நெஞ்சக்
குன்றிருந்து மிளிர்குமா குருவேயிந்
நெஞ்சநினை யாது கோது
கொன்றிருந்து நினையடைய நினைந்துள்ள
தவ்வாறு குயிற்றாய் கோணை
மன்றிருந்து நடநவிற்று மொருவனருண்
மதலாயென் மதியே மன்னே. (உச)

மன்னுமறை முதலேயென் முதலேகண்
மணியேசெம் மணியே தூவி
துன்னுமா சுதமயிலிற் பொன்மயிலில்
வெண்மயிலிற் றுவரா மேரு
என்னவரு துரையேயென் குறையறிவை
நிறையறிவ தாக்கி யென்றும்
பொன்னடியி னிருக்கவும்பொற் புளதோசொல்
லூர்திரியிப் புழுத்த நாய்க்கே. (உரு)

புழுத்தலையு நாய்க்கும்விடக் குண்பொழுதோர்
சந்தோடம் பொருந்து மிந்த
வழுத்தலைமை யுடைநாய்க்கிங் கெதுபொருந்துந்
துயர்பொருந்து மறலி மேலுங்
கழுத்தலையி விருத்திமிதித் தாலுமுனை
நினைந்தழுவல் கழலெண் ணுமை
கொழுத்தலையு முயிர்க்கினைய பலனன்றி
வேறுளதோ குகமா தேவே. (உசா)

தேவநடை பொய்யாகி யுலகநடை
மெய்யாகிச் சீலம் பொய்யாய்ப்
பாவநடை மெய்யாகிப் படிவர்வர
வரிதாகிப் பதகர் மிக்கே

ஆவனடை பெரிதாகி யுளவிந்தக்
கலிகாலத் தருணு டிந்தச்
சீவனடை முன்றவமி லாதகுறை
வேயாகுந் திணிவேற் காளாய். (உஎ)

திணிகிருபை யிரங்கவிலை யென்றுதலை
யடித்தழுது திரிந்தே னில்லை
அணிகிருபை யொடுமுகத்தி லறைந்தழுதே
னில்லைவிழுந் தழுதே னில்லை
பணிகிருபை யுடனிலத்திற் கடகடெனப்
புரண்டழுது பதைத்தே னில்லை
கணிகிருபை யுடையவிளம் பெருமவிவ்வா
றியம்புற்றேன் கன்னெஞ் சேனே. (உஅ)

கன்னெஞ்சோ டேன்பிறந்தேன் கடையவரிற்
கடையனெனக் கடந்தோர் கூறப்
புன்னெஞ்சோ டேன்பிறந்தேன் புண்ணியமொன்
றில்லாத பொல்லே னுக்கும்
நன்னெஞ்சோ டமருநிட்டை நல்குவையோ
வங்கணெய்தி நளின பாதம்
என்னெஞ்சோ டிருக்கவருள் செய்வாயோ
சொல்லிகல்வே லிறையே யன்றே. (உகூ)

இறையவனெம் மான்குமர னெனப்புகழ்ந்த
வருணகிரி யீசா கந்தா
மறையவனுன் பூங்கழலை நம்பியநான்
கருவிகளின் வயப்பட் டோவுங்
கறையவனென் றுகாதென் னுடற்சுமையை
யினிதிறக்கிக் காத்து ஞானத்
துறையவனே யொல்லையினி யினிவேண்டே
னெருசிறிது முலகைத் தானே. (௩௦)

## ச - வது எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தானவர் குழுவைச் சவட்டிவிண் ணவர்தந்
தடவிசும் புலகவர்க் களித்து
வானவர் முதல்வ னுயொளி ராறு
மலர்முக முதுபதி யேநின்
கானவ மணியங் கழனடங் காணக்
கண்பெறு பாக்கிய மில்பேய்
மானவ னெனவிங் கிருக்குமென் பனுவன்
மதித்துவந் தருள்புரி வாயோ. (நக)

அருணெறி யார்க்கின் னருடரு மாதி
யற்புத வருட்சிவக் கொழுந்தே
மருணெறி யேனை மாணருண் மருவா
வறுமையை யடிக்கடி நினைந்தே
இருணெறி யுழலும் பேயெனச் செய்த
வென்விதி யினும்வலி தாயின்
தெருணெறி பிடித்து வாழ்ந்திடு வேனே
தெய்வமே செய்வதொன் றறியேன். (நஉ)

அறிவினை யறிந்தார் நெறியினில் லாமே
யருண்மொழி தனைப்பிடி யாமே
செறிவினை யறுக்கு மனுச்செபி யாமே
திரிமனக் கால்களை யாமே
பொறிவினை கெடுத்தார் போற்பல வாயாற்
புலம்பவுங் கலங்கவு மானேன்
வெறிவினை முருக்கு மயிலர சேயுன்
மெய்யருட் செயலறி யேனே. (நந)

ஏனிஙன் மிகவும் வருந்துகின் றனைவா
வென்னுழை யெனவுன தருணாத்
தானிங னுரைக்கி னதுவெனு ளமுதாய்த்
தீதும்பியென் கம்பலை செறுத்துத்
தேனினு மதுர வட்டினுஞ் சுவைசெய்
தீங்கரும் பினுமினி தினித்து
வானினு முயர்பே றளிக்குமன் றேசெம்
மழமுனி யேயரு ளாயோ. (ருச)

ஓய்வறு பிறவித் துயர்மன நனவி
லோயுமட் டுளதென லருநூல்
ஆய்வறு மனுட ரறிவர்கொல் லோவன்
னவர்களு ளொருவனென் றிடவிந்
நாய்வர விருப்பி னுங்கருத் தழுங்கா
நலத்தினை யேனுமுற் றொழியுஞ்
சேய்வர வினிலஃ தோயுமென் றுயிச்
செனிப்பினுக் கெந்நல முளதே. (ருரு)

உளக்குகை தனிலென் மனத்தினை நிறுவி
யுன்றனை நினைந்திருந் தேயிவ்
வளக்கரை மறையக் காணிடத் தின்பா
யகஞ்சிறி திருப்பவு மேலே
களக்கறை மனது முளைக்கவு மாமென்
கதியைநன் கோர்ந்துசெந் நூறு
தளக்கழ லெனது தலைமிசைச் சூட்டத்
தயவுசெய் வேற்பெருந் தகையே. (ருசு)

பெருந்தகை யாமுன் னுட்டமென் னறிதும்
பேதவிம் மேதினி யுணர்வாய்
வருந்தகை நோயு முற்றிவ னுழலு
மடனெனை நலஞ்செய வெனவுன்

அருந்தகை யருளெண் ணிடினொரு கணத்தே
யமுதுரு வாயிடு வேன்வேல்
இருந்தகை யரசே யடியவர் மனமா
யிருந்தருள் கருணையங் கடலே. (௩எ)

கடலினு மிருந்தாய் மலையினு மிருந்தாய்
கதிர்மதி யுடுவினு மிருந்தாய்
கெடலறு விசும்பு வளியினு மிருந்தாய்
கெழுவுயிர்த் திரடொறு மிருந்தாய்
அடலயின் முதல்வா வள்ளிடத் துணைநன்
கடையவென் றனுதினங் கலுழ்ந்தே
உடலுயிர் வருந்தாக் கடியநெஞ் சேனிங்
குயிருட னிருப்பது நலமோ. (௩அ)

நலமிழைத் தவர்க்குங் கொடுவினை யிழைத்தேன்
ஞான நூ லாளரைப் பழித்தேன்
மலமொழிக் கயவர்க் கினியன செய்தேன்
வளருயி ரெண்ணில வதைத்தேன்
கலமிழைத் திடுபொய் புரைபல வுரைத்தேன்
கரவடத் தொழில்களுஞ் செய்தேன்
சலமழித் தருள்செவ் வேளெனு மிறையே
தாடுணை யெனவிங்ஙன் போந்தேன். (௩கூ)

போந்துயர் தனக்கு மஞ்சுகின் றேனிப்
புலாலுட லேய்க்குமஞ் சினன்மேல்
ஆந்துயர் தனக்கு மஞ்சுகின் றேனிவ்
வருந்துய ராம்பெருங் கடலை
நீந்துயர் பதியி னிட்டையி னீதா
னிறுத்தினுய் வேன்சுடர் கிளர்வேல்
ஏந்துயர் பரம குருமணி யேயென்
னிதயபங் கயம்வள ரொளியே. (சo)

## ரு - வது அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மா மா காய் மா மா காய்

ஒளியே யொளிக்கு முதற்பொருளே
யுயர்மா ணிக்கப் பெருவரையே
தளியே யிருக்குந் தெய்வமெலாந்
தாழுஞ் சரணக் குமரேசா
களியே தருமுன் றிருவடியென்
கதியா யென்று மினிதெய்த
எளியே னியற்றுஞ் செயல்பற்று
தேனே யிவ்வா றுழல்கின்றேன். (சக)

உழலு மனநன் கோய்ந்திடுமா
றுனதொண் பாத வருளேநினேந்
தழலு முறுமோ திருவடிப்பே
றணித்தோ சேய்த்தோ வெனவேங்கி
விழலு முறுமோ வினியென்றே
விம்மிச் சாம்பென் புந்தியுறு
தழலு மடமு மொழியவரு
டந்தால் வாழ்வேன் சடக்கரனே. (சஉ)

சடமெய் யிலேயென் றசடமுணர்ந்
தமைபோ லறிவைச் சாரேனே
திடமெய் யுளர்சேர் நில்லேனே
சீவ முளேயைக் கொல்லேனே
மடமெய் யெவையுங் கடியேனே
மாணு ரமுதங் குடியேனே
தடமெய் யழகார் மயிலில்வரு
தனிநா யகனே தவறுடையேன். (சஙு)

உடையாய் கதம்பத் தொடையாய்நா
னுற்றூர் பெற்றூர்க் கும்முதவா
நடையா னெனவிங் கானேனுன்
னட்புக் கயலு மானேன்வேற்
படையா னடியே பாடுகமென்
பரிவே யுளர்போற் பலகுழறென்
கடையா ரினிதா மன்புசெயுங்
கருணைக் குருவா குவரன்றே. (சச)

அன்று மயங்கே னிற்கருள்வே
மஞ்சே லெனுநற் பொருள்படுமா
றன்ற னறுஞ்செவ் வாய்மலர்தா
னுரைத்த வுரைபொய் யாதெனநான்
இன்று வரைநம் புற்றேன்மே
லெளியேன் பொல்லா விதியாதாய்
நின்று கெடுதி செயுமோவே
னிமலா சிறிது மறியேனே. (சரு)

சிறுமை தணந்த வாய்ஞானஞ்
செப்பி யீவோ ரிடமேற்கக்
குறுமை தணந்த கையுளனுய்க்
கொடுக்க வக்கை யேயிலனுய்
மறுமை நயங்கொன் மூதேவி
மல்க விருந்த வெனக்கயிலோய்
பொறுமை யருளா னுவமுதம்
பொழியுங் கொல்லோ சிறுவரையும். (சசு)

வரையே முலைக ளிடை கொடியே
மதியே வதனங் கடல்விழியே
விரையே யளகங் கார்முகிலே
மிளிருங் கொவ்வை யதரமெனப்

புரையேய் மடவார் மயனின்ற
புகரேற் கையார் வேலோய்கால்
மரையே நினைந்திவ் வாறழுவோர்
மனமுண் டான ததிசயமே. (சஎ)

சயமே யுளவே விறையவனே
தமியே னிழைத்த தவறெண்ணிப்
பயமே யுளவென் சிந்தைநலம்
பற்று மகிழு மாயினது
வயமே யணையா வொருமலடி
மகப்பே றுற்ற தொக்குமருள்
மயமே யெனது முகம்பார்த்து
வாரா யோவென் கண்கண்ணே. (சஅ)

கண்ணே யறுவர் களிப்பேயென்
கவலை காது மருமருந்தே
விண்ணே கனகத் திருவரையே
விறல்சால் கோழிக் கொடியரசே
பண்ணே னினது பரிசுத்த
பாத மலர்க்காம் பூசனையிம்
மண்ணே யினும்வந் துழலற்கே
மடநெஞ் சுளது கொல்லோசொல். (சகூ)

சொல்லார் சுருதிப் பிரணவநீ
துயர்சா லுயிர்கட் கருளிறைநீ
இல்லார் குறைகண் டீயிறைநீ
யெளியே னுண்ணே யிறுமாறு
வல்லா ரருளைத் தாராயோ
வைய மதனி லென்போன்ற
கல்லார் பொல்லா ரெல்லார்க்குங்
கதிதந் தருளுங் குகதேவே. (ருo)

## சா - வது அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மா மா மா மா மா காய்

குகனே சிவனார் குருவே யென்னுட்
குதிகொள் செயலெல்லாம்
அகனே சவருட் செயலென் றுருகா
லடியேன் மனமான
இகனே ருறவே சும்மா விருப்ப
விவையென் வினையென்றேன்
அகனே வருந்தி யழுமா றுருகா
லயர்கின் றவர்யாரோ. (ருக)

யாரா னலனுண் டாமென் றெண்ணி
யாரைச் சூழ்கின்றேன்
ஆரா வமுதே யயில்வே லரசே
யறியா யோசிறிதும்
வாரா யடியர்க் கினியோய் பெரியோய்
மருளென் முகவாட்டந்
தீரா யுனதின் செம்மாப் பளியாய்
சேராய் சேவடியே. (ருஉ)

அடியேன் பலபுண் ணியநீர் மூழ்கி
யாறு மூர்த்திகளாம்
வடிவே நீயென் றேதாழ்ந் தேனார்
வசித்தே னெனதெண்ணம்
முடிவே யுறவில் லாமே வருந்தென்
முகவாட் டந்தவிராய்
கடியே றமுதக் கழலாய் முக்கட்
கத்தன் றிருமதலாய். (ருங)

†

திருவா ரெந்தத் தலமுற் றூலுந்
தெய்வந் தொழுதாலும்
பெருவா ரிபடிந் தாலுந் தெய்வப்
பெயர்கள் சொற்றாலும்
மருவா ரளிநக் கடம்பார் மார்பா
மங்கா வொளியாமுன்
உருவா னதிலே படியா விடினென்
னுள்ளம் படியாதே. (ருச)

உள்ளும் புறமும் பரிபூ ரணமா
யொளியா யுளவுன்னைத்
துள்ளுங் கறைநெஞ் சுடையேன் றேடுந்
தொழின்மா மலைநின்று
தள்ளும் பவனத் தலைப்புண் டொல்கிச்
சயிலம் போயிற்றென்
றுள்ளுஞ் சிதடன் செயலொக் குமரோ
வொளிவேற் படையானே. (ருரு)

படைப்பாய் காப்பா யழிப்பாய் மறைப்பாய்
பந்தந் துணித்தாள்வாய்
அடைப்பா யறிஞர்க் கினிப்பா மருந்தே
யயிரே யருந்தேம்பா
கிடைப்பா யிழுதே பலவின் சுளையே
யேனைத் தீங்கனியே
துடைப்பா யெனதுட் டுயரெல் லாநற்
றேூகைப் பரியானே. (ருசா)

பரிபூ ரணவே விறையே யெளியேன்
பன்மந் திரமெண்ணேன்
விரிபூ விலையா திகளா னேய்வெல்
வினையும் பிடியேன்மால்

அரிபூ சனையின் மாயச் சித்தி
யறியேன் குறிசொல்லித்
திரிபூ வினையுந் தெரியே னிவனுய்
திறமே தோசொல்லாய். (ருள)

சொல்லார் சுருதிப் பொருளே வேற்கைத்
துரையே செம்பெல்லாம்
வில்லார் பொன்னுக் கிடுவேன் காயம்
வீழ்த்தா ரைத்தருவேன்
கல்லார் மனமுங் கரையச் செய்வேன்
கடவுட் காட்டுவலென்
றல்லார் வினைசெய் திடவும் பொருந்தே
னடிசிற் றென்செய்வேன். (ருஅ)

என்னு யகவே யிறையே யுலகத்
தெச்சித் தியுமில்லா
என்னு னயமின் றென்றே யகன்று
றென்னைத் தெரிந்தாரும்
ஒன்னார் புரைநா னுண்ணுப் பில்லா
வுணவே யளிப்பாரும்
இந்நா ளுனுகுற் றனர்கா செங்கை
யிடினுங் கொள்வேனே. (ருகூ)

கொள்ளச் சயிலா கள்ளிப் பழமுங்
கொண்டேன் பசித்தோர்நாள்
எள்ளத் தனையு மன்பிற் பிரியா
வியல்பும் பத்தியுமோங்
குள்ளக் குமரா னந்தப் பெயர்மா
துணவீ யாவிடினென்
பொள்ளற் சடநில் லாதே சென்னைப்
புகழும் மாதைக்கா. (சுo)

எ - எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மா கூவிளம் மா கூவிளம் மா கூவிளம் விளம்

காவெ னக்கரு தென்னை யாள்சிவ
கந்த னேயுனை யேபெருந்
தேவெ னக்கரு துள்ளொ டன்பு
சிறந்த சீலமு மோங்கவே
ஓவெ னைக்கரு தோர்பி ரப்பையி
லுடைய நாயக மீண்டுறு
தாவி னைக்களை யருள்பு ரிந்துயர்
தயவில் வைத்தினி தாள்வையே. (சுக)

ஆளு நின்னடி சூழு நர்க்கரு
ளயில மற்றுமெ னக்கிடு
கேளு யர்ந்தெனை நம்பு மன்பு
கிளர்ந்த வர்க்குமி யைந்தசீர்
நாளு நல்குதி நாயெ னைத்தளி
ளுனு மென்றனை நம்பியுன்
தாளு கந்தவ ரைப்ப ராபர
தள்ளி டாதடி நல்கியாள். (சுஉ)

நல்ல பொன்மயி லூரு மென்னொரு
நாத னேயினி வாதநூல்
வல்ல னென்று மதிக்கு மாறுரை
மல்கு சங்கம்வி ரும்பிலேன்
இல்ல மேயசி றந்த மானவ
ரென்பர் நேயமு நம்பிலேன்
அல்ல நீர்மட மால யங்க
ளமைத்து வாழவு மெண்ணிலேன். (சுங)

எண்ணு வாரக நண்ணி யேவரு
மெம்பி ரானின தின்பமாம்
விண்ணு லாநினை வாயி ருந்து
விரைந்து சுற்றெரு பம்பரம்
மண்ணு ளேயசை வற்று வீழ்வது
மான நானயி லீசநின்
தண்ணு லாமடி வீழ வெண்ணிய
சரத முன்னுள மறியுமே. (கூச)

அறிய ணுதியெ னெஞ்சி றந்திடு
மவத ரஞ்சக மயமெனும்
பொறிய னேகவி கார மாகிய
புவனம் யாவுமெ னக்குளே
சிறிய கானவி னீரெ னத்தெரி
தெளிவி லங்கிட வருடியால்
நறிய மாமறை நாய காவரு
ளுய காவயி லுயகா. (கூரு)

நாய னேனுனை யெண்ணி யெண்ணியெ
னுவ ரண்டிட வலறிலேன்
நேய னேயரு ளென்று வீதிக
ணின்று கத்திவ ருந்திலேன்
தூய னேயரு ளென்று வீதி
தொறுங்கி டந்துபு ரண்டிலேன்
சேய னேகுரு ராய னேயருள்
செய்வை யோநனி யுய்யவே. (கூகூ)

வேத ஞானவி ழுப்ப வேலவுன்
மெய்ப் பதந்துதி யாதவென்
ஏத நாவைந றுக்கி லேனு
ளிருத்தி யேகரு தாதமா

பாத கங்கெட நெஞ்சி லாணி
பதித்து நன்குபி ளந்திலேன்
ஆத ரத்துட னேதொ ழாவடு
வங்கம் வெட்டியெ றிந்திலேன். (கூஎ)

எறிப டைக்குக வுன்பு கழ்ச்சுவை
யேறி டாவிரு காதிலுங்
குறிலெ னுதச லாகை கொண்டு
குடைந்து குத்திய றுத்திலேன்
வெறியி லுன்னெழில் கண்டி டாதவென்
விழிக ளைக்கதிர் கொண்டிறை
செறிபு ருவின முட்டை யென்ன
வெடுத்து நன்குசி தைத்திலேன். (கூஅ)

சிதைவு ருவலி யுற்று வெண்மை
திகழ்ந்த வென்னது பற்கள்வீழ்
விதைக ளென்னவி ழுந்தொ ழிந்தமை
போல வென்மலம் யாவுமே
சிதைய நீவிரை வருளு நாளெது
தெரிகி லேனுய ரறிவிலேன்
கதைக டாவசு ரர்க்க ளைந்த
கனத்த வெஃகவி ரத்தனே. (கூகூ)

அத்த னேயரு ளப்ப னேயென
தாதி யேபெரு நீதியே
நித்த னேநிரு வாண னேநினை
நேய னேமறை வாயனே
பித்த னேனறி யாது செய்த
பெரும்பி ழைத்தொகை மன்னியென்
சித்த மானது தண்ணெ னப்புரி
தேற லுங்கொடு சேயனே. (எ0)

## அ - வது எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மா தேமா தேமா தேமா தேமா தேமா கூவிளம்

கொடுமை யேயி லாத நல்ல கொள்கை யார்மு னூளே
படுமை தன்னை நீண்ட நாளில் வென்ற டைந்த பாக்கியங்
கடுமை நெஞ்செ னக்கு மெய்து கால மற்ப மாகுமோ
நெடுமை வேல்ப ரித்த வேக நித்த வெங்கள் கத்தனே. (எக)

கத்த னேநி ருத்த னேக னிந்த நெஞ்சர் காணுமா
முத்த னேக டம்ப ணிந்த மொய்ம்ப னேயி ரும்புகல்
ஒத்த நெஞ்சி னேன ளப்பி லுத்தி யோகம் வேண்ட லுன்
மத்தர் கொள்கை யாகு முன்னன் மக்க ளுஞ்சி ரிப்பரே.(எஉ)

மக்க ளிற்சி றந்து ளோர்வ ழங்கி யுள்ள சொற்களென்
தொக்க நூலு ணுன றிந்தி டாவ ணங்தொ டர்ந்தரோ
டக்க வாறு தீய வென்பு லத்தி லுன்ற னின்னருள்
தக்க வாறு புக்கு ருது கொல்ச டக்க ரேசனே. (எந)

சடமெ னச்சொல் பொய்யி ருக்கு நானு னன்பர் சாத்திர
படம்வி ரிப்ப தும்பல் பாடல் பாடி வைப்ப தும்போலா
உடலி ருக்கும் வேசி தன்னு டம்ப லங்க ரித்தலே
விடவு யர்ச்சி யாகு மோவி னேத யோக வேலனே. (எச)

வேல்பி டித்த கைம்மு தால்வி வேக நிட்டை யெம்பிரான்
மால்பி டித்த வென்ம னத்தின் மன்னு மோவிண் மின்னுமோ
கால்பி டித்த வர்க்க தோர்க ணத்தி னெய்து மெண்ணிலா
நூல்பி டித்து ளாரு மேறு ழைந்து காண வல்லரோ. (எரு)

வல்லி டும்பை தந்து மோக மாவ னத்தி லேசதாச்
செல்லு நெஞ்செ னுங்கு ரங்கு தேயு மாறு செய்தொழில்
எல்லை யெந்த மட்டு மந்த மட்டு மின்ப மேயெனக்
கல்லு றழ்ந்த நானு நன்கு கண்ட னன்சி கிப்பரா. (எசு)

பரம ராஜ ராஜ யோக பாச நாச பாவகி
பிரம மான வுன்னை யும்பி தற்று மென்னை யுஞ்சரா
சரம கிக்கண் வேறு வேறு தள்ளி வைத்து நிற்பதவ்
வுரம னத்த தேயெ னுவு ணர்ந்து ளேனு ணர்ந்துளேன்.

உணரு மென்ற னெஞ்ச மான துள்ள கத்தொ டுங்குகால்
கணவு லோக மில்லை வேறு கண்ட நானு மில்லைதூ
அணவு வான மொன்றி ருந்த தற்றி யாது ரைத்தருள்
மணம ருத பாத நாத மல்கு பொற்சி லம்பனே. (எஅ)

சிலம்ப ருஞ்ச தங்கை தண்டை சேர்ப தச்சு ரேசுரா
நலம்பி றங்க கண்ட யோக ஞான மாவெ ழுந்தருள்
உலம்பெ னங்க நோய்க ளோட வொற்க மோட வீணிலே
புலம்ப லோட வொல்க லேபொ ருந்து புன்மை யோடவே.

ஓட விற்சு கங்கெ டுத்த வுள்ளை நோவ னேவிழி
நாட லெண்ணி நோவ னேந யப்பில் காதை நோவனே
ஊட லெண்ணி நோவ னேவு ணவை நோவ னேமணந்
தேட லெண்ணி நோவ னேசி வந்த மேனி யாயினி. (அ0)

கூ - வது எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புளிமாங்காய் தேமா புளிமாங்காய் தேமா
புளிமாங்காய் தேமா புளிமா

தனதந்த தந்த தனதந்த தந்த
தனதந்த தந்த தனனா.

இனியென்ற னன்பு தனைநன்கு ணர்ந்து
ளிதயங்கு ளிர்ந்தென் மகனே
துனியென்ற துன்ப மிலையென்ற றைந்து
சுவைவென்ற வின்ப மருளாய்

முனியென்ற கும்ப னதுவந்த னங்கொண்
முருகண்டு கஞ்ச வடியாய்
பனியென்ற கங்கொல் பவர்தஞ்ச மென்று
பரவுஞ்சி லம்பு றடியாய். (அக)

அடியந்த மொன்று மிலதெங்கு நின்ற
தகளங்க மன்ப ரருளே
படியந்த நெஞ்சி லுறுநண்பு கந்த
பரமென்ப ருன்ற னருளோர்
விடியந்த மென்ற னுளநின்று வந்து
விரவன்ப வென்று புகன்மேல்
நடியந்த வின்பு மருள்விஞ்சு கங்கை
நதிதங்கி வந்த நறவே. (அஉ)

தனதத்த தத்த தனதத்த தத்த
தனதத்த தத்த தனனு.

நறவுற்றி ருக்கு மொலியற்க ழுத்தி
நடனப்பொ திக்க ணமர்வோர்
உறவுற்றி ருக்கு மிறைவிக்கி னிக்கு
முருவைத்த ரித்த மதலாய்
குறவுச்சி தப்பெ ணுளநச்சு சுத்த
குணவற்பு தப்பொ னயிலாய்
துறவுச்செ ருக்கி னனிவைத்த ளப்பில்
சுகநிட்டை முற்ற வருளே. (அங)

அருளைத்து தித்து னடியைத்து தித்து
னடியர்த்து தித்து மலமாம்
இருளைத்து ரத்தும் வலியுற்ற வர்க்கு
ளெழுசிற்சு கத்தை யளியாய்

மருளைத்து இத்து வழிபட்ட பித்தர்
மனசிற்பி ணிக்க வரியோய்
கருளைத்து ரத்து மளகக்கொ டிச்சி
கவினைக்க ணிக்கு மிளையோய். (அச)

தனதந்த தத்த தனதந்த தத்த
தனதந்த தத்த தனனா.

கணிதம்ப டித்த வெவருங்க ணிக்க
வரிதுன்க னத்த கழலோ
டணிதண்டை முத்த மெனநன்கு ரைப்ப
ரடிகண்ட சித்த ரழியா
மணிதங்கு பொற்பு மகுடந்து ளக்கி
மயிலுந்தெ னப்ப வறிவார்
துணிதந்து ஞெட்ப வடியென்ற சுத்த
சுகவின்பி ருத்தி யருளே. (அரு)

அருவென்று ரைக்க வுருவென்று ரைக்க
வலதென்று ரைக்க வமையா
தொருவின்ப நித்த வறிவென்ற ரற்று
முனையந்த வொட்ப மறைநான்
வெருவென்று நிற்கு நிலைநன்க ளித்து
மிளிரொண்ப தத்தி லினிதாய்
இருவென்றி ருத்தி யருளன்ப ரற்பி
னிடைவந்து திக்கு முருகா. (அசு)

தனதத்த தந்த தனதத்த தந்த
தனதத்த தந்த தனனா.

முருகிட்ட மஞ்ச ளவிர்பொற்பு டம்பு
முகடொத்த கொங்கை யுடையார்
கருதொட்பம் விஞ்சு மொருசுத்த குஞ்ச
ரியினிட்ட கந்த வினிநான்

ஒருகட்ட மும்ப டுதலற்று யர்ந்த
வுர னுற்றி யங்க வருளோர்
குருகட்ட வென்றி யயிலத்த வண்டர்
குடியைப்பு ரந்த பெரியோய். (அஎ)

பெரியத்த வும்பர் பணியத்த தொண்டர்
பிரியத்த மர்ந்த தலைவா
கரியைத்த டிந்த பெரியர்க்கி தஞ்செய்
களியைக்கொ ணர்ந்த முருகா
துரியத்தி ருந்து கதவைத்தி றந்து
சுடரிற்சி றந்த சுடராய்
விரியத்தி டஞ்செய் தருணற்க டம்பு
மிலைவெற்பின் விஞ்சு புயனே. (அஅ)

தனதான தத்த தனதான தத்த
தனதான தத்த தனனா.

புயனேர்கொ டைக்கை யினர்நீத நட்பர்
புலவோர க த்தி லுறையோர்
வியனேதி ருச்சின் மயனேமு டிக்கும்
விமலாமு டித்த வுலகீ
அயனேய ளிக்கு மனகாவெ னக்கு
ளறிவாயி ருக்கு மயிலாய்
நயனேகொ டுத்தென் வினைவேர றுக்கு
நடமேந டிக்க நினையே. (அகூ)

நினையேநி னைக்கு மெளியேன்ம டத்தி
னிலமீதி ழைத்த பவமா
வினையேக ணித்து நடுவேயொ ளிக்கும்
வினைதானு னக்கு ரியதோ

தனையேநி கர்த்த தயவோய்த வத்தர்
தவமாகு மிக்க பெரியோய்
கனையேற ளப்பில் கழலேகொ டுத்தி
கதிர்கால யிற்கை யரசே. (கூO)

## கO - வது அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அரசே யமுதே யருளா மாதா ரபரா சரணம்
பரசே யவனே சரணம் பதுமா சனனே சரணம்
சுரசே கரனே சரணந் துகள்போழ் குமரா சிவசங்
கரசே தனனே யெனையாள் கருணா கரனே சரணம். (கூக)

சரநா யகனே மரணஞ் சனனங் காணுய் சரணம்
வரநா யகனே பொள்ளா மணியே சரணஞ் செருவேற்
கரநா யகனே பாவக் கழுவா யறியா வெனையாள்
பரநா யகனே சரணம் பழையார் பதியே சரணம். (கூஉ)

பதியே சரணம் வயிரப் படையாய் சரணங் கருணா
நிதியே சரணஞ் சுடர்சா னெடுவே விறையே வினைசூல்
மதியே மதியா தவர்பான் மருவா மழவே சரணம்
கதியே துமிலா வெனையாள் கலைநா யகனே சரணம். (கூங)

கலைவே தமுணர்ந் தருளே கருதும் பெரியா ரடைமா
நிலைவே தமுணர்ந் திடவே நினையென் பரனே சரணம்
சிலைவே லுடைவஞ் சகரின் றிறல்யா வையுநூ றிடுமார்
இலைவே லுடையா யழியா விருவா * னடையாய் சரணம்.

வானு ரறிவே சரணம் வாடா மலரே மணமே
ஆனு வழகே யமரா தவிர்தீ பகமே யமுதே
ஊனு ருதரம் புகுதா வுயர்வைக் கருதென் குருவே
தேனு மருடந் தெனையாள் சிகியூர் தேவே சரணம். (கூரு)

---

* நடை = செல்வம்; டகரவேதுகை.

தேவே பதினேழ் வருடஞ் செலுமென் றிதன்முன் பொருநாள்
நாவே யசையா வொலியா நவில்கட் டுரைநாள் சிலவே
பூவே கழியுங் காறும் புலவா ருடலைப் பிரியா
யோவே விறையே யெனையா ளுயிர்நா யகனே சரணம். ()

உயிரே தமெலா மழிமா றுபதே சவரந் தருவோய்
செயிரே துமிலா வரனே சிவனே சரணந் தவமென்
பயிரே வளரும் படியே பாயும் புனலே சுவைசால்
அயிரே யெனையா ளதுலா வயிலா மயிலா சரணம். (௬௭)

மயிலொத் தமடச் சூர்மா மகளுக் கினியோ யெனையாள்
வெயிலொத் தவொளிப் பலபூண் மின்னும் படிபன் னடனம்
பயிலொப் பிலியே யெவியூர் பரனுர் துணைவா பதிநூல்
குயிலொட் பமகா முனியே குகனே சரணஞ் சரணம். (௬௮)

குகனே குகனே யெனவே குயினு வுறைவோ யறுமா
முகனே சரணங் குழைபூண் முருகா சரணஞ் சிவையின்
மகனே சரணந் திருமான் மருகா சரணஞ் சரணம்
சுகனே சரணந் தொழுமென் றுரையாய் வருவாய் சரணம்.

வருவா யறியா வெளியேன் மருடீ ரடிகேள் சரணம்
திருவார் புகழ்சொன் னபிரான் செல்வச் சிவமே சரணம்
பெருவா னெனவே நாளும் பின்று வருளா லெனையாள்
ஒருவா னவனே யுன்சீ ருறுநர்க் குலகம் பரமே. (௧00)

குமரவேள்பதிற்றுப்பத்தந்தாதி முற்றிற்று.

குமரகுருபரன் றிருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

## பாம்பன் : ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள்

# இயற்றிய புத்தகங்கள்

**சிவஞானதீபம்.** வசனவடிவாயுள்ள இந்நூல்—பதி பசுபாச வியல், அபக்குவர்கதியியல், நிரீசுரவாதகண்டனவியல், பாவபரிகார விவரவியல், பரமேச தரிசனநிதி போதகவியல், துறவற நிலையியல், இராசயோகவியல், முத்தி யிலக்கணவியல், இராசயோகாப்பியாசவியல், அனுட்டானவிதியியல் என்னும் பத்துப் பகுதியாயுள்ளது. அனுட் டானவிதியியலிற் குமாரக்கடவுள் வழிபாடு மந்திரசகிதமாகக் கூறப் பட்டுளது. அறியார் பலவாறு பிதற்றுதலைப் பற்றாது இது பற்றுதலே நல்லூழுள்ளோர் செய்கையாம். இராசயோகம், ஆண்பெண்ணென் னும் இருபாலார்க்கும் பொதுவென லுணரக்கிடக்கின்றது. சைவசித் தாந்திகள் தமது சமய மேம்பாட்டை யிதனுலெளிதாக வுணர்ந்து கொள்ளலாம். ஆன்மலாப விருப்பினர் நடக்கத்தக்க நடையும் இத னுலே தான் தெரிந்துகொள்ள வேண்டும். 2-ஆம் பதிப்பு விலை அணு 8.

இதிற் 10-பிரதி கொள்வார்க்கு 1-பிரதி விலையில்லா தளிக்கப் படும்.

**ஸ்ரீ சுப்பிரமணிய வியாசமும், குருசீடசம்பவ வரலாற்று வியாசமும்.** வசனவடிவாகவுள்ள இவைகள்—சுப்பிரமணியக் கடவு ளது பரத்துவத்தை நாமங்களினருத்தத்தோடு வேதாகம புராணவாயி லாக இனிது விளக்கும். அண்ட பிண்ட ரகசியங்களைத் துலக்கிச் சொல்லும். படிப்பவர் மனத்தின்கட் பரம அன்பூற்றெடுக்க; கேட் பவர் செவியுநெஞ்சுங் குளிர்ந்து அவசமுற; குமார பகவானுடைய அனேக மெய்யடியார் சரித்திரங்களை யெடுத்தெடுத்தியம்பும். 2-ஆம் பதிப்பு : விலையுயர்ந்த காகிதம். விலை ரூபாய் 1.

**சீவயாதனுவியாச மூலமு முரையும்.** இனிய பொழிப்புரையோ டுள்ள இந்நூல்—"சீவஇம்சை செய்யொண்ணுது" "புலாலுண் ணெண்ணுது" என்னும் விசேட தருமங்களை விளக்கவெழுந்த நூல்களுள்ளும் பிரசங்கங்களுள்ளும் இஃதொன்றே ஐயமெல்லாம் அறவிள்க்குமொரு பெருநூல். தருக்கஞ் செய்யும் முறைகளும், விடையிறுக்கும் ஆற்றல்களும் இதன் கண்ணேயே கற்றுக்கொள்ள லாம் ; மிக்க கவினுடைத்து. 2-ஆம் பதிப்பு. ஆப் பைண்டு. விலை அணு 11.

**தகராலயரகசியமும்,** உரையாகிய **சதானந்தசாகரமும்.** இனிய பொழிப்புரையும் விருத்தியுமாயுள்ள இந்நூல்—வித்தைகளுண் மேம் பட்ட தகரவித்தையினை விளக்கு நிரலில் இரண்டு காண்டங்களும்

பாயிரமுமாயுள்ளது : வடமொழி தென்மொழி மறை முதலிய 150-நூல்களை மேற்கோளாகக்கொண்டு தமிழருத்தநய தாங்கவாரியா யுள்ளது. சிதம்பர வுண்மையும், சிவசுப்பிரமணியப்பெருமான் பெருமையுந் துறுமித்திகழ்பெருந் தகைமையின. நல்ல காலிகோ புல்பைண்டு. விலை ரூபாய் 2—8—0.

பரிபூரணானந்தபோதமும் உரையாகிய சிவசூரியப்பிரகாசமும். இனிய பொழிப்புரையும் விருத்தியுமாயுள்ள இந்நூல்—சற்சீடன் கடாவுக்குச் சற்குரு விடையிறுக்கத்தொடங்கல் என்றற்றொடக்கத்துப் 18 - உட்பிரிவுகளைப் பதிபசுபாச யதார்த்த விளக்கப் படலம், துறவற விளக்கப்படலமென்னும் இரண்டனுள் அடக்கிக் கொண்டு விளங்கும் ஓரிய பெரிய சைவசித்தாந்த சாஸ்திரம் : வடமொழி தென்மொழி மறை முதலிய 171 - நூல்களை மேற்கோளாகக் கொண்டு தமிழ் அர்த்த புஷ்டியோடு வயங்குவது : குருசீடவடிவ ஆப்டோன் பிளாக்குப் படத்தோ டிலங்குவது. நல்ல காலிகோ புல்பைண்டு. விலை ரூபாய் 2.

95899

| | ரூ. | அ. |
|---|---|---|
| வேதவியாசம் ... ... ... | 0 | 10 |
| பத்துப்பிரபந்தம் ... ... ... | 0 | 7 |
| ஸ்ரீமத்-குமரகுருதாசசுவாமிகளது சுத்தாத்வைத நிர்ணயம் | 0 | 3 |
| திருப்பாவும், உரையாகிய திட்பமும், குறிப்புரையும் ... | 10 | 0 |
| ஸ்ரீமத் குமாரசுவாமியம் ... ... | 5 | 0 |
| சேக்கர்வேள் செம்மாப்பும், சேக்கர்வே ளிறுமாப்பும் | 0 | 6 |
| குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி ... ... | 0 | 2 |
| குமரகுருதாசசுவாமிகள் பாடல்; திருவலங்கற்றிரட்டு 1 - ஆங் கண்டம்; திருவலங்கற்றிரட்டு 2 - ஆங் கண்டம் முதலியன அடங்கிய நூல் ... ... | 3 | 8 |
| செந்தன்செந்தமிழ் ... ... | 0 | 2 |
| சண்முக சகச்சிரநாமார்ச்சனை ... ... | 0 | 4 |
| செவியறிவுறூஉ ... ... ... | 0 | $1\frac{1}{2}$ |
| ஷை கலிகோ புல் பைண்டு ... ... | 0 | $2\frac{1}{2}$ |
| பாம்பன் : ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகள் சரித்திரம் ... | 0 | 8 |
| ஷை சரித்திரம் கலிகோ புல்பைண்டு ... | 0 | 12 |

வி. இராஜபாதர் முதலியார்,
135, வீரராகவ முதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.